# மதுரத்தமிழ்
# 2000

தமிழ்ப்பிரிவு வெளியீடு

அரசினர் ஆசிரியர் கலாசாலை
யதன்சைட் கொட்டகலை

03/10/2001
V. சசிகலா

# மதுரத்தமிழ்

# 2000

## விடுகையாண்டு தமிழ்ப்பிரிவு மாணவர்களின் வெளியீடு

V.THINAKARAN, TEL: 051-2224716
HOME LIBRARY
KELLIEWATTE - PATANA 22012

V.THINAKARAN, TEL: 051-2224716
HOME LIBRARY
KELLIEWATTE - PATANA 22012

# சமர்ப்பணம்

மலையகத்தின் விடிவுக்காய்
மனதுருக்கும் கவிசொன்ன
மகா கவியே ~ நீ
தென்றலின் தாலாட்டில்
பிறந்தவனல்ல
புயலின் கோரத்தில் பயனப்பட்டவன்
நீ
பட்டு பீதாம்பரங்களில்
புரண்டவனல்ல
முள் படுக்கைகளில் முகாமிட்டவன்
நீ
குளு குளு அறையில்
குந்தியிருந்தவனல்ல
வேகாத வெயிலில்
தீராத குளிரிலும்
தொழிலாளியாய் துணைவந்தவன்
அதனால்தான் ~ எங்கள்
துயர யதார்த்தத்தை சரியாக
செப்பனிட முடிந்தது
தென்னவனே
வறுமையும் நாங்களும்
ஒரே ஜாதிதான்
உன்னை விட்டு எப்போதும்
பிரிவதில்லை.

காலத்தால் அழியா
கவி சொன்ன
குறிஞ்சுத் தென்னவனுக்கு
இந்நூலை
காணிக்கையாக்குகின்றோம்

# பிரதி முதல்வரிடமிருந்து...

இனிய நெஞ்சங்களே!

இந்த ஆண்டிலே "மதுரத்தமிழ்" நூல் வெளிவருவது கல்சாலையின் வளர்ச்சியிலே ஒரு திருப்பம். விடுகையாண்டு தமிழ்ப்பிரிவு மாணவர்களின் இம்முயற்சி வரவேற்கப்படவேண்டியதும் பாராட்டுக்குரியதுமாகும்.

"சங்கே முழங்கு" என்ற கோசத்துடன் இந்தியாவில் தமிழ் வளர்க்கும் பணியுடன் மலையகத்தின் "மதுரத்தமிழ்" இணைந்து ஈழத்தின் தமிழ் வளர்ச்சியிலே கணிசமான அளவிலான பங்கை பெற்றுக்கொள்ள வேண்டும். என்று வாழ்த்துகின்றேன்.

சிந்திக்கத் தெரிந்த மனித குலத்திற்கு சிந்தனைப்பரிமாற்றம் என்பது தவிர்க்கமுடியாதது.

உள் மனத்தின் ஊமைக்காயங்கள்கூட வார்த்தைகளாக சிந்தனையின் வெளிப்பாடாக சுவையாக அமையும்போது இலக்கியமாகின்றது. இவை ஒரு கட்டுக்கோப்புக்குள் அடக்கும்போது கவிதை, கதை, நாடகம் எனப் பலவகையாகிறது. கலையின், இலக்கியத்தின், கவிதையின் உள்ளடக்கம் மனித உணர்வுகள்தான்.

இதன் அடிப்படையில் மாற்றங்கள் நிகழ புதிய உணர்வுகள் தலையெடுக்க புறப்பட்ட உங்கள் அனைவரதும் உறவுப்பாலத்துக்கு எனது அன்பான வாழ்த்துக்கல்.

மதுரத்தமிழ் வண்ணத்தமிழாக
வளர நல்லாசிகள்

அன்புடன்
**பழனிமுத்து ஸ்ரீதரன்**
**பிரதி அதிபர்.**

# பொறுப்பு விரிவுரையாளரின் உள்ளத்திலிருந்து சில துளிகள்..

மிக நீண்ட காலத்திற்குப்பிறகு யதன்சைட் ஆசிரியர் கலாசாலையில் தமிழ்ப்பிரிவு கடந்த ஆண்டே ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து தமிழ் விசேட பயிற்சி கற்கை இக்கல்லூரியில் இயங்கிவருகின்றது. தமிழ்ப்பிரிவு விசேட பயிற்சி மாணவர்களால் முதன் முதலில் மதுரத்தமிழ் என்ற நூல் வெளிவருகின்றது. இம்மலர் இயல், இசை, நாடகம் போன்ற தமிழ்மொழிக்குள்ள சிறப்பினை பல ஆக்கங்கள் எடுத்துரைத்துள்ளன. மேலும் தமிழ்மொழி கற்பித்தல் தொடர்பான அறிவை மாத்திரம் இம்மாணவர்கள் கொண்டிருக்காமல் அதற்கு அப்பால் சமூக இலக்கிய பணிகளை முன்னெடுக்கவேண்டிய நிலையில் இம்மலர் வெளிவருவது சிறப்பானதே. இம்மலரில் காணப்படுகின்ற ஆக்கங்கள் சில குறைபாடுகள் இருந்தாலும் தமிழ் மனம் வீசும் சிந்தனைகளை கொடுப்பதாக அமைந்துள்ளது என்பது எனது திண்மை. ஒரு நல்ல முயற்சியில் ஈடுபடும் போது முதலில் குறைபாடுகள் எழுவது இயல்பானதே ஆனால் தொடர்ந்து ஈடுபடும்போது ஏற்படுகின்ற அனுபவம் நன்மையான விளைவை ஏற்படுத்தும் முயற்சியாக அமையும். அந்த வகையில் இம்மலரை வெளிக்கொண்டு வரும் மாணவர்கள் வகுப்பறைக்கு அப்பால் சமூக இலக்கிய பணிகளில் தொடர்ந்து ஈடுபடும்போது இலக்கயங்களிலிருந்து நல்ல அறுவடைகளை எதிர்ப்பார்க்கலாம். அவ்வாறான முயற்சியின் முதல் முயற்சியாக இந்நூல் மலர்வதையிட்டு மகிழ்வடைவதுடன் மலருக்காக அர்ப்பணசிந்தையுடன் செயற்பட்ட ஆசிரிய மாணவர்களை பாராட்டுகின்றேன்.

"கலையும் இலக்கியமும் மக்களுக்காகவே"

உவகையுடன்

**ஜெ. சற்குருநாதன்**

**விரிவுரையாளர்**

# அதிபரின் ஆசிச் செய்தி

மிக நீண்ட இடைவெளிக்குப்பிறகு யதன்சைட் ஆசிரியர் கலாசாலையில் தமிழிப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதனது முதற்கட்டமாக தமிழ்ப் பிரிவு மாணவர்களால் வெளியிடப்படும் "மதுரத் தமிழ்" நூல் வெளிவருவதையிட்டு மகிழ்வடைகின்றேன். தமிழ்ப் பிரிவு மாணவர்களின் அயராத உழைப்பின் சின்னமாக இந்நூல் வெளிவருவதை வரவேற்பது நமது கடமையாகின்றது. இன்று மாணவர்களுக்கு தமிழ் மொழியை கற்பிக்கவும் மொழியின் தாற்பறியத்தை உணர்ந்து கொள்ளவும் இந்நூல் வழிகாட்டியாக திகழும் என நம்புகின்றேன். இந்நூலுக்கு அர்ப்பணிப்பு உணர்விடம் செயற்பட்ட தமிழ்ப் பிரிவு மாணவர்கள் இதனை நாம் கற்பிக்கும் பாடசாலை மட்டத்திற்கு எடுத்து செல்ல வேண்டும் என்பது எனது எதிர்பார்பாகும். நல்லவிலைச்சலே சிறந்த அறுவடையாக அமையும். அதனைபோல நல்ல முயற்சியில் இந்நூல் வெளிவருகின்றது. இந்நூல் மாணவர்களின் கையில் சென்று சிந்தனையை தூண்டும் போது சிறந்த சமுதாயத்தை உருவாக்கலாம். மதுரத் தமிழ் நூல் வெளிவருவதற்கு துணை நின்ற விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

செ. ஜெயக்குமார்.

# தலைவரின் எண்ணங்களிலிருந்து...

விஞ்ஞான கண்டு பிடிப்புகளும், அறிவியல் படித்துறைகளும் ஒன்றுக்கொன்று போட்டியிட்டு வளர்ந்து வருகின்ற இந்தப் புதிய சகத்திரத்திலே நாட்டின் எங்கோ ஒரு மூலையில் பிற்படுத்தப்பட்ட சமூகம் ஒன்றின் விடியலுக்கான போராட்டத்தில் வெற்றி நடைபோட்டுக்கொண்டிருக்கிறது. எங்கள் யதன்சைட் ஆசிரிய கலாசாலை வளமும் வாய்ப்பும் நிறம்பப்பெற்று கல்விப்பணி செய்கின்ற கலாசாலைகளுள்ளே வளமேயற்ற நிலையில் யதன்சைட் ஆசிரியர் கலாசாலையின் கல்விப்பணியானது விதந்து போற்றுதற்குரியதாகும்..

சுகபோக வசதிவாய்ப்பான வீடுகளில் வாழ்க்கை நடத்தி கற்றல் கற்பித்தல் பணிகளில் ஈடுபடும் ஏனைய சமூகங்களுள்ளே எட்டடி வீட்டுக்குள் இருந்து கொண்டு கல்வியை எட்டிப்பிடிக்க எத்தனிக்கும் சமூகமே எம்மலையக சமூகம். வறுமை, மது, கொலை, கொள்ளை, எனும் கோரப்பிடிகளை கிழித்துக்கொண்டு மலையக இளம் வித்துக்கள் இன்று விருட்சங்களாகி வானளாவ வளர்ந்து வருவது நாளைய உருக்குலையாத கோபுரங்களின் இன்றைய அத்திவாரங்களாகும்.

யதன்சைட் ஆசரியர் கலாசாலையில் 1999ம் ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ப்பிரிவை சார்ந்த எங்களது இம்முயற்சியானது ஆக்க இலக்கியங்களை ஆவணப்படுத்திக்கொள்ளவும், கலாசாலை வரலாற்றில் எங்களை அடையாளப்படுத்திக் கொள்ளவுமான முயற்சியாகும். இம்மதுரத்தமிழ் வெளிக்கொணருகையில் என்னோடு பங்கெடுத்துக்கொண்ட எல்லா நல்ல உள்ளங்ளையும் நன்றியறிதலோடு நினைத்துப்பார்த்து இம்முயற்சி தொடர்ந்து வெற்றியளிக்க வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றிகள்.

**எஸ்.ஜெயக்குமார்**
**(நூலாக்கக்குழு தலைவர்)**

# தமிழ்ப்பிரிவு விரிவுரையாளரிடமிருந்து

இவ்வருடத்தின் தமிழ்ப்பிரிவு மாணவர்களின் விடாமுயற்சியின் பயனாக வெளியிடப்பட்டிருக்கும் "மதுரத்தமிழ்" என்ற நூலைக்கண்டு பெருமகிழ்ச்சி கொண்டேன்.

இலக்கியம் படைக்கும் சிரமமான பணிக்கு ஆயத்தமாகியிருக்கும் இவர்களின் பயணம் சமூகபிரஞ்சையுடன் தொடரவேண்டுமென்று வாழ்த்துகின்றேன். சமூகத்தின் கொடுமைகளையும் விடுதலையின் வேட்கையையும் இவர்களின் எழுத்துக்கள் அடையாளம் காட்டவேண்டும். சமூகத்தின் செழுமைக்கும் வளர்ச்சிக்கும் இந்த எழுத்துக்கள் துணைபோகவேண்டும். இவர்களின் இலக்கியமுயற்சிகளும் படைப்பாற்றலும் இந்த ஏடுகளோடு மட்டும் நின்று விடாது தொடர்ந்தும் நல்ல படைப்பிலக்கிய வாதிகளாக மிளிர்வேண்டுமென்பதே என்னுடைய அவா.

இந்த மகத்தான இலக்கியப்பணி அவர்களின் ஆசிரியர் பணியை இலகுவாக எடுத்துச்செல்ல துணைப்புரிவதாய் அமையும். இவ்விரு பணிகளின் மூலம் செய்யும் சேவையாலேயே நல்ல சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். அந்த வகையில் இலக்கிய முயற்சிகளும் ஆசிரிய சேவையும் தொடர்ந்து வெற்றி பெற்று எதிர்கால சந்ததியை உருவாக்க துணைபுரிய வேண்டுமென்று வாழ்த்துக்கூறுகின்றேன்.

நல்லாசிகள் பல உரித்தாகட்டும்.

உளமகிழ்வுடன்

**செல்வி. எம். சந்திரலேகா.**

**விரிவுரையாளர்.**

# மாணவர் பேரவை தலைவரின் எண்ணத்தில் உதித்தவை...

"சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

சொல்லுவது என்பது எல்லோர்க்கும் எளிய செயல் சொல்லிய படி செய்வதென்பது கடிணமான செயல் இத்தகையதோர் கடிணமான செயலை சிரம்மேற்கொண்டு "மதுரத்தமிழ்" எனும் மாண்புமிகு நூலை வெளியிடும் எமது கலாசாலையின் முதலாவது தொகுதியான தமிழ்ப்பிரிவு ஆசிரிய மாணவர்கள் இவ்வாண்டு கலாசாலையை விட்டு வெளியேறினாலும் கலாசாலை வரலாற்றில் தனியான ஓர் இடத்தை "மதுரத்தமிழ்" வெளியீட்டின் மூலம் பெற்றுக்கொள்கின்றனர் என்றால் அது மிகையாகாது.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிப்போல்..." எனக்கூறியது போல இன்றைய காலகட்டத்தில் தமிழை தலை நிமிர்த்துவதற்கான ஓர் அரிய பெரும் தமிழ்ப் பணியை இவ்வெளியீட்டின் மூலம் மேற்கொண்டு விட்டனர்.

சிந்தனைச் சிற்பிகளாக அல்லாமல் சிற்பங்களை செயலில் வடித்தவர்கள் 1999/2000 ஆண்டு தொகுதி ஆசிரிய மாணவர்கள் என்பதற்கு இந்நூல் வெளியீடு சான்றாய்யமைகிறது. பெரும் பொருளாதார சிக்கலிலும் தமது சொந்த நலன்களைப் புறக்கணித்து தமிழ்ப்பிரிவு ஆசிரிய மாணவர் ஒவ்வொருவரும் தாமே மனமுவந்து செலவுகளைப் பகிர்ந்து ஏற்றுக்கொண்டு காலத்தின் தேவையறிந்து செயற்பட்டுள்ளமை இங்கு மிகவும் அவசியமாக நோக்கப்படல் வேண்டும். கல்லூரி செயற்பாடுகளில் இத்தகையதோர் முயற்சி பொன் எழுத்துக்களால் பொரிக்கப்படவேண்டியதும் சுட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இந்த வகையில் இப்பணிதனை செவ்வனே நிறைவேற்ற வழிகாட்டிய பொறுப்பு விரிவுரையாளர் திரு.ஜெ.சற்குருநாதன் அவர்களதும், நூல் வெளியீட்டுக் குழுவினதும் பங்கு பணி வியந்து போற்றத்தக்கதும் பாராட்டப்படவேண்டியதுமாகும். இத்தகைய வெளியீடுகள் "அத்தி பூத்தாற் போ்ல" இருந்து விடாமல் எதிர்வரும் காலங்களிலும் தொடர்ந்தும் மலர்ந்து சமுதாயத்தில் தமிழ்பணி வளர்ப்பதற்கு ஓர் ஆரம்பமாய் அமையவேண்டும் என மனமுவந்து வாழ்த்துகிறேன்.

வாழ்த்துக்களுடன்
**ஶ்ரீக்கப்பிள்ளை ஶ்ரீவேந்தன்**
**தலைவர்-மாணவர் பேரவை**

## செயலாளரின் பார்வையிலிருந்து

மலையகத்தில் கல்விக் கண்களுள் ஒன்றாக விளங்கும் யதன்சைட் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் தமிழ் பயிற்சி நெறியானது சென்ற ஆண்டு மீண்டும் தொடக்கப்பட்டதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய மலையக நிலையை நோக்கும் போது தமிழ் மொழியை முறையாக கற்பிப்பது மிக மிக அவசியமாகின்றது. அத்தோடு தமிழ் மொழியின் தொன்மையையும், தனிமையையும் உணரவைப்பது ஒரு நோக்கமாக சொள்ள வேண்டியுள்ளது. காரணம் இன்றைய நாகரீக மாற்ற வேகத்தினால் தமிழ் தொழியும் தன் வேகத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது.

எனவே மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சிநெறியின் முதலாம் பகுதி மாணவர்களால் "மதுரத் தமிழ்" என்னும் நூல் வெளிவருவதையிட்டு பெருமிதம் கொள்கிறேன். இம்முயற்சியானது இனிவரும் மாணவர்களினாலும் தொடர்ந்து நடாத்தப்பட்டு வெற்றி நடைபோடும் என்பதில் நம்பிக்கையும் கொள்கின்றேன்.

இந்நூல் வெளிவருவதற்கு முன்னோடியாக இருந்த அதிபர், உப அதிபர் விரிவுரையாளர்கள் மற்றும் அனைத்து ஆசிரிய மாணவர்களுக்கும் இந்நூலுக்கு ஆக்கங்கள் தந்து சிறப்படைய செய்த ஆசிரிய மாணவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

செ. செல்வராஜ்
செயலாளர்

# பொருளாளரிடமிருந்து...

காலம் காலமாக கால் மிதிப்பாட்டாலும். பூமியானது லட்சோப லட்சம் புதிய புஸ்பங்களை புஸ்பித்துக்கொண்டே செல்வது ஒன்றும் புதுமையல்ல. எம் கலாசாலையின் கன்னித்தமிழின் ஒரு கன்னிமுயற்சியாய், . எம் தமிழ்ப்பிரிவு மாணவர்களின் எண்ண அலைகளின் வண்ணக்கோலங்களை இன்னோரன்ன வடிவங்களாக உள்வாங்கிக்கொண்டு இலக்கிய உலகில் இனிய உலா வருகிறது. இச் சஞ்சிகை.

செந்தமிழ் மொழியை சிந்திக்கும் போதே இன்பத்தேனால் இதயத்தை ஈரமாக்கி விடுகின்ற ஓர் இதமான உணர்வு எந்த ஒரு இலக்கிய நெஞ்சத்திற்கும் ஏற்பட்டு விடுவது இயல்பே. அந்த வகையில் ''மதுரத்தமிழ்' எனும் மனதுக்கு இதமான மகுடம் தாங்கி மலர்கின்றது இம்மலர்.

"மதுரத்தமிழ்" என்றும் மங்காப்புகளோடு அதற்கேயுரிய வனப்போடும் இலக்கிய உலகில் வலம் வர எல்லாம் வல்ல இறைவன் இனிதே அருள்புரிய வேண்டி விடைபெறுகின்றேன்.

*நல்லாசியுடன்*
*திருமதி. சுபலெட்சுமி லோகநாதன்*
*பொருளாளர்.*

## பத்திராதிபரின் பார்வையில்

கன்னி இதழாய் மொட்டவிழ்ந்திருககும் மதுரத்தமிழ் நூலுக்கு முதற்கண் எனது வாழ்த்துக்கள் எமதுகலாசாலையில் பத்து வருடங்களின்பின் மீண்டும் தமிழ்ப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது அந்தவகையில் தமிழ்ப்பிரிவினரால் வெளியிடப்படும் இந்நூல் கலாசாலையின் நல்முத்துக்களில் ஒன்றாகும் இந்நூலை வெளிக்கொணர்வதில் என்னோடு பங்கெடுத்த அனைவருக்கும் நன்றிகள்

என்றும் அன்புடன்
க. ஆனந்தி

# மொழிக்கு இலக்கணத்தின் அவசியம்.

திருமதி. எம். மாலா

இலக்கியமானது பரந்து விரிந்த சோலை போன்றது. இவற்றுள் மொழி வேறுபாடின்றி ஆக்கங்கள் உருவாக்கப்பட்டிருக்கலாம். ஒரு விருட்சத்திலிருந்து எவ்வாறு கிளைகள் பல பக்கமாக வளைந்து காணப்படுகிறதோ அது போன்றே இலக்கியத்தில் மொழியின் விரிசல்கள் காணப்படுகின்றன. ஏதாவதொரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு சேய்மொழிகள் தோன்றி தழைத்திருக்கின்றன. இவை போன்றவற்றை ஆராய்ந்து ஒவ்வொரு மொழியின் தன்மையையும் எழுதிக்காட்டுவதே இலக்கணம் என வரையறுக்கின்றோம்.

ஒரு மொழிக்கு அமைப்பு ஒன்று காணப்படுதல் வேண்டும். விதிமுறைகள், கட்டுப்பாடுகளை ஒட்டியதாகக் காணப்படுதல் வேண்டும் இவ்வாறு இல்லாவிடில் அது "வரம்பில்லாத வயல் போன்றது" என்கிறார் பரஞ்சோதி முனிவர். எமது தமிழ்மொழியை வரம்புடைய மொழியென பாராட்டுகிறார். ஒரு மொழியினுடைய இலக்கணத்தை பாதுகாப்பது அதனது தனித்தன்மையிலேயாகும். ஆரியமொழி, அரபுமொழி, ஆங்கிலமொழி என்பன தமிழ்மொழியில் ஒட்டி உறவாடிய போதும் தமிழின் நீர்மையை அவை கெடுத்துவிடவில்லை. இலக்கண வழுவமைதியோடு காணப்பட்டதன் விளைவாகவே இதன் தனித்தன்மை குலைந்து விடாது பாதுகாக்கப்பட்டது.

தமிழ்மொழியில் ஏனைய மொழிகள் வந்து கலக்க வேண்டுமாயின் அது தமிழ்க்கோலம் பூண்டு வந்துசேரவேண்டும் என விதியொன்றினை ஏற்படுத்தியது. இந்து ஒருவன் கிறிஸ்தவனாக மாறுவதற்கு எவ்வாறு கிறிஸ்தவதிற்கேற்ப தனது நடை, உடை, பாவனைகளை மாற்றிக்கொள்கிறானோ அது போலவாகும். தமிழின் ஓசை, உருவம் பெற்று வரும் மொழிகள் ஏற்றுக்கொள்ளப்படும் என விதிமுறை உருவாயிற்று.

இவ்விதிமுறைகள் காரணமாக ஏற்பட்ட பல நன்மைகளை இங்கு அவதானிப்போம். "ராஜா" என்பது ஒரு வடசொல்லாகும். அது தமிழிலே "அரசன்" என வழங்கலாயிற்று. அதேபோல "லோகம்" என்பது "உலகம்" எனவும், "ரூப" என்பது "உருவம்" எனவும் வழங்கலாயின. வடமொழிக் காவியங்களும் தமிழ்நூல் வடிவிலே உருவாயின. கம்பரால் ஆக்கப்பட்ட இராமாயணத்தில் "ராமன்" என்பது "இராமன்" எனவும், "ஹனுமன்" என்பதை "அனுமன்" எனவும், இராவணன் ஆண்ட நாட்டை

“லங்கா”என்னாது “இலங்கை” என்றும் குறிப்பிட்டுள்ளார். “ஹிர்தய” என்ற வடசொல்லை “இதயம்” எனவும் அழகாக தெளிவுபடுத்தியுள்ளார்

“மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் நீண்ட
எயிலுடை இலங்கை நாதன் இதயமாம் சிறையில் வைத்தான்”

இது போன்றே சிலப்பதிகாரத்திலும் வரும் வடசொல்லான “டாகினி” என்னும் பேயைக்குறிக்கும் சொல்லை அழகுற “இடாகினி” என இளங்கோவடிகள் செழுமைபடுத்தியுள்ளார்.

இத்தகைய பண்புகள் தமிழுக்கு உரித்தானது என்கின்றனர். வட பாகத்தில் வழங்கும் பாஷைகள் ஆரிய வகுப்பைச் சேர்ந்தவை எனவும், தென்பாகத்தில் தோன்றியவை திராவிடவகுப்பைச் சார்ந்தவை எனவும் நூற்புலவர்கள் நுவலுகின்றனர். திராவிட வகுப்பில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் சிறந்த மொழிகள். இவற்றுள் தமிழ்மொழியே தனித்தியங்கும் இயல்பு பெற்றது. ஏனையவற்றில் ஆரிய மொழியின் சால்பு தொற்றியே காணப்படுகிறது.

மொழியொன்றினை இலக்கணம் பாதுகாக்கின்றதென்றால் இரும்பு சட்டைப்போல் இறுக்கி நெருக்குவதல்ல. உயிருள்ளவை பிழைக்கும், வளர்ந்து கொண்டே போகும். அது போன்றே புதிய மரபு இலக்கியங்கள் மறையவும், புதியவை தோன்றவும் செய்யும். இவ்வாறு காலமாற்றத்தினால் தோன்றும் திருத்தங்களை இலக்கணம் ஏற்றுக்கொள்ளும்.

“பழையன கழிதலும் புதியன புகுதலும்
வலுவல கால வகையி னானே”

என தமிழிலக்கண ஆசிரியர் பவணந்தி முனிவர் குறிப்பிடுகின்றார். முற்காலங்களில் நீ, நீர், நீவிர் போன்ற சொற்கள் இலக்கணத்தில் புகுத்தப்பட்டிருந்தாலும் காலமாற்றத்திற்கேற்ப அவை மரியாதைக்குரிய சொற்களாக நீங்கள், அவர்கள் என அழைக்கப்படுகின்றன. இவை போன்ற மாற்றங்களை இலக்கணம் ஏற்றுக்கொள்ளும்.

தற்காலப்பகுதியில் ஒவ்வொரு சிறப்பு மொழிகளுக்கும் ஒப்பிலக்கணம் எழுதப்பட்டு வருகின்றது. தொன்று தொட்டு தமிழையும் ஆரியத்தையும் ஒப்பிட்டு பார்க்கும் தன்மை தமிழ் நாட்டில் காணப்படுகிறது. தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த அகத்தியரும் வடமொழிக்கு வியாகரணம் வகுத்த பாணினியும் ஒருவருக்கொருவர் நிகரென்பர். இரு மொழியிலும் காணப்படும் எழுத்துக்கள் பொதுவானவையாக இருந்த போதிலும் தமிழ்மொழியில் உள்ளவை சிறப்பெழுத்துக்கள் எனப்பட்டன.

இலக்கண உலகத்தில் பெருமை பெற்று விளங்குபவர் கால்டுவெல் ஆவார். இவர் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என உயரிய நூலை எழுதினார். இப்பேராசியரியர் இலக்கண உலகத்தில் போற்றி பேசப்படுகிறார். எனவே "திராவிட மொழி நூலின் தந்தை" என அழைக்கப்படுகிறார்.

ஏனைய மொழிகளில் பொருள் இலக்கணம் காணப்படவில்லை. இது தமிழிலே காணப்படுவது பெருமைக்குரியது. இப்பொருளை அகப்பொருள், புறப்பொருள் என விரித்துள்ளனர். இவ்விருவகை இலக்கணமும் தொல்காப்பியத்திலே காணப்படுகிறது. இலக்கண வழிப்படி செந்தமிழ், கொடுந்தமிழ் என பாகுபடுத்தியுள்ளது. செந்தமிழானது பிழையற்ற தமிழாகும். கொடுந்தமிழ் எனப்படுவது இலக்கண வரபின்றி கால்போன போக்கில் போகும் தமிழ். செம்மையானது செந்தமிழாகும். கோணலானது கொடுந்தமிழாகும் என்கின்றனர் இலக்கண ஆசிரியர்கள்.

இலக்கணமின்றி முழுமையான இலக்கியம் தோன்ற முடியாது. செம்மையான இலக்கியம் வடிப்பதற்கு இலக்கணம் இன்றியமையாதது. தமிழ் மொழி நிலைத்திருப்பதற்கு காரணம் அதன் இலக்கண பண்புகளை மிதமாக கொண்டிருப்பதேயாகும். காலமாற்றத்திற்கேற்ப புதிய வற்றை ஏற்றுக்கொண்டாலும் விதிமுறைமாறுதலின்றி காணப்படுகின்றது. எனவே மொழியொன்று நிலைபெற்று விளங்கவேண்டுமாயின் இலக்கணம் அவசியமானதொன்றாகும்.

உசாத்துணை நூல்:- ரா.பி.சேதுபிள்ளை
தமிழ் விருந்து கட்டுரை



# மெல்லத்தமிழினி ...



எஸ். ஜெயக்குமார்

மனித இனம் தோன்றி இன்று பல்லாயிரம் வருடங்கள் ஓடி மறைந்து விட்டன. இக்கடந்து போன காலப்பகுதிக்குள்ளே மனித கண்டு பிடிப்புகளுள்ளே மகத்தான கண்டு பிடிப்பு மொழியாகும். மனிதனின் ஆரம்ப கால தோற்றத்திலே கருத்துப்பரிமாறலுக்கு மொழி என்ற ஊடகம் இருக்கவில்லை என்றும் சைகைகளே மொழியாக கையாளப்பட்டதென்றும் பின்னர் சைகைகள் சார்ந்த ஒலித்தோற்றப்பாடுகளே மொழியின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்தனவென ஆராய்வுகள் நிறுவுகின்றன. இவ்வாறு மனித தேவைக்கருதி தோற்றம் பெற்ற மொழிகள் வேறுபட்ட குழுமங்களாக மக்கள் வாழ்ந்ததனால் வேறுபட்ட மொழிகளாகத் தோற்றம் பெற்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற பலநூறு உலக மொழிகளுள்ளே தமிழ் மொழியும் ஒன்றாகும்.

இவ்வாறு தோற்றம் பெற்ற மொழிகளுள் பல இன்று அழிந்தொழிந்து விட்டன. தமிழும் கூடதனது பூர்வீக இலக்கியங்களில் ஒரு பகுதியை காலத்துக்கும், கறையானுக்கும், கடல்கோள்களுக்கும் இரையாக்கி விட்டது என்று நம்பப்படுகின்றது. ஆனபோதிலும் தென்னக மொழிகளில் தலையாய மொழியாக தமிழே கொள்ளப்படுகின்றது. இதற்கு காரணம் தமிழின் தொன்மையும், அது கொண்டுள்ள இலக்கியங்களும், தமிழில் காணப்படுகின்ற இலக்கண வரம்புகளுமே எனலாம். தொன்மை பற்றி பார்க்கிற போது சைவர்களின் முழுமுதற் கடவுளான சிவபெருமானே பொதிய மலையில் அகத்தியருக்கு தமிழ் போதித்ததாகவும், தமிழ் மொழி கல் தோன்றி மண் தோன்றா முன் தோன்றியது என்ற கூற்றும் உண்மை சார்ந்ததாக இல்லாவிடினும் கூட தொன்மை சார்ந்ததாக உள்ளது. மேலும் இலக்கியங்கள் கிடைக்கின்ற கிறிஸ்துவுக்கு பிற்பட்ட ஆண்டுகளும் தமிழின் தொன்மையை விளக்கி நிற்கின்றன. இத்தகைய வரலாற்று சிறப்பு மிக்க தமிழ்மொழி காலத்துக்கு காலம் பல்வேறுபட்ட சவால்களை சந்தித்திருக்கின்றது.

தமிழ்மொழி சந்தித்த சவால்களுள்ளே காலத்துக்கு காலம் ஏற்பட்ட ஏனைய மொழிகளின் தாக்கம் தலையாயது எனலாம். தமிழ்மன்னர்கள் தமிழ் மண்ணை ஆண்ட சங்ககாலத்துக்கு அடுத்தபடியாகவே இப்பிறமொழி தாக்கங்கள் தமிழில் தாக்கம் செலுத்துகின்றன. சங்கமருவிய காலம் தொடக்கம் வடமொழியும், பிற்பட்ட காலங்களில் இந்தியும் பின்னர் ஏனைய இந்திய மொழிகளும் தமிழகத்தில் தமிழில் தாக்கம் ஏற்படுத்தியுள்ளன. இலங்கையைப் பொறுத்த வரையில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தமிழ் சுதந்திரமாக வளம்பெற்ற போதும் மேற்கிலும், தெற்கிலும் ஒரளவிற்கு சிங்கள மொழியின் தாக்கத்திற்கு உட்படுகின்றது. ஏனைய நாடுகளில்

அவ்வப்பிரதேசங்களின் செல்வாக்கிற்கேற்ப குன்றியும், வளம்பெற்றும் வந்துள்ளது. இவை எல்லாவற்றையம் விட ஐரோப்பியரின் வருகைக்கு பின்னர் தமிழ் மொழியில் ஆங்கிலமொழியானது பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது என நம்பப்படுகின்றது.

இதனால் தானோ என்னவோ ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்றுவிட்ட நாம் ஆங்கிலத்திடம் இருந்து இன்னும் சுதந்திரம் பெறவில்லை எனக்கூறப்படுகின்றது. இதற்கு காரணம் திட்டமிட்ட முறையில் ஆங்கிலத்தையம், கிறிஸ்தவத்தையம் பரப்புவதற்கு ஆங்கிலேயர் மேற்கொண்ட செயல்கள் எனலாம். அச்செயல்களானது குறிப்பிட்ட காலப்பகுதியில் மாத்திரமின்றி நிகழ்காலத்திலும் கூட ஏன் எதிர்காலத்திலும் கூட தமிழை எழமுடியா வீழ்ச்சியில் தள்ளுவதாகவே அமைந்துள்ளது.

ஆங்கிலேயரால் சலுகை அடிப்படையில் மத்திய தரவர்க்கத்திற்கு வழங்கப்பட்ட ஆங்கில அறிவானது அவர்தம் சுயமொழியை மறக்குமளவிற்கு செல்வாக்கு செலுத்தியுள்ளது. இதனால் தொன்று தொட்டு வளர்ச்சியுற்று வந்த விஞ்ஞான, மருத்துவ, அறிவியல் துறை சார்ந்த கண்டுபிடிப்புகளும் வளர்ச்சியும் தமிழில் சரிந்து விழுவதை காணக்கூடியதாக உள்ளது. இதனால் இன்று விஞ்ஞானத்தையோ, மருத்துவத்தையோ அல்லது அறிவியல் சார் துறைகளையோ கற்க முனைகிறவர்கள் ஆங்கிலத்தையே அடிப்படையாகக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றனர்.

இது மாத்திரமல்லாது இன்று தமிழோடு ஆங்கிலத்தை கலந்து பேசுவதே நாகரீகமானதும், தங்கள் சுய கௌரவத்தை உயர்த்திக் கொள்வதுமான செயல் என தமிழர்கள் நம்பத்தலைப்பட்டுவிட்டனர். இதனால் அழகிய தாய்மொழிவழி கலாசாரமாக இருந்த தமிழ்கலாசாரம் இன்று மம்மி, டெடி கலாசாரமாக மாறிவிட்டது.

இவ்வாறு பிள்ளைகளை ஆங்கிலத்தைக் கலந்து பேசப்பழக்குகின்ற பெற்றோர் ஒரு ஆங்கிலேயனோ அல்லது இன்னொரு மொழி பேசுபவனோ தமிழைக்கலந்து பேசச்செய்வானா? என்று ஒரு கணம் சிந்தித்து பார்ப்பது நன்று. தமிழை வளர்க்க மாற்றுமொழிக்காரர்களோடு போராட வேண்டிய சூழ்நிலை போய் தமிழர்களோடே தமிழர் போராட வேண்டிய ஒரு நிலையை ஆங்கிலேயர் எமக்குள் ஏற்படுத்தி விட்டனர். மாற்று மொழிக்காரர்களான கல்டுவெல், பெஸ்கி போன்றோர் தமிழ் மேல் கொண்ட காதலால் தமிழ் கற்று தமிழ் வளர்க்க முற்பட நாமோ அக்கரை பச்சைத்தனமாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமானால்

பாரதியின் மெல்லத்தமிழினி சாகும் என்ற வரி மெய்யாகிவிடுமோ என அஞ்சத் தோன்றுகிறது.

2025 ஆம் ஆண்டளவில் உலகில் 25 மொழிகள் மாத்திரமே நிலைப்பெற்றிருக்கும் என்று ஒரு மொழியியலாளர் கருத்துரைக்கின்றார். அப்படியாயின் அழியப்போகும் மொழிகளில் தமிழும் ஒன்றா? தமிழ் ஆபத்தை எதிர்நோக்கி இருக்குமாயின் அதை காக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனினதும் தலையாய கடமையாகும். தமிழைக்காக்க என்ன செய்யலாம் என்பதற்கு விடையாக பின்வரும் பணிகளை வரையறுத்துக்கொள்ளலாம். அதன் முதல் நடவடிக்கையாக தமிழை வளர்க்க நிறுவன ரீதியான அமைப்பை உருவாக்க வேண்டும். இவ்வமைப்பானது வருடத்திற்கு ஒரு கூட்டமும், மாதத்திற்கு ஒரு கொண்டாட்டமுமாக இருந்து விடாமல் தமிழைக்காக்கும் தொலைநோக்கத்திற்காக ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுக்க வேண்டும். இதன் பணிகளுள்ளே பின்வருவன அடங்கியிப்பது நன்று.

1. தமிழை கணனிக்கு இயைவான மொழியாக மாற்றுதல்.
2. விஞ்ஞான, மருத்துவ, அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கான கலைச்சொற்களை ஆக்குதல்
3. விஞ்ஞான, மருத்துவ, அறிவியல் துறையில் பிரசித்தம் பெற்ற வேற்று மொழி நூல்களை தமிழில் மொழிபெயர்த்தல்.
4. பல்தரப்பட்ட அறிஞர்களையும் ஒன்றிணைத்து பல்வேறு துறைசார்ந்த நூல்களும் தமிழில் தோற்றம் பெற வழி வகுத்தல்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக தமிழர்களிடம் தமிழ் மொழியில் பற்றை ஏற்படுத்தும் செயல்களை மேற்கொள்ளல். தமிழரிடம் தமிழ் பற்று ஏற்படாதவரையில் தமிழைக்காக்கும் செயற்பாடானது கல்லில் நாருறித்தல் செயற்பாடாகவே அமையும். எனவே அன்னை மொழியை மறந்தவன் அன்னையையும், தன்னையும் மறந்தவனாகவே ஆவான்.

மெல்லத்தமிழினி சாகா, சாகவும் கூடாது.



# பாரதியாரின் சுயசரிதையை குறை பிரசவம் என்பர்



ரா. வள்ளிமயில்

பாரதியாரின் சுயசரிதை ஒரு கவிதை நூலாகும். தற்கால சுயசரிதை நூல்களுக்கும் பாரதியாரின் நூல்களுக்கும் இடையே பெறும் வேறுபாடு உண்டு. தற்கால சுயசரிதை நூல்கள் ஒருவர் தன்னுடைய வாழ்க்கையை பற்றி எழுதுவதாக அமைந்துள்ளது. அவை உரைநடையிலேயே அமைந்துள்ளது. உரைநடையில் அமைந்திருந்த போதிலும் அவற்றில் கூட வாழ்க்கையின் முழு அம்சங்களும் எழுதப்படவில்லை. உதாரணமாக மகாத்மா காந்தியின் சுயசரிதை நூல் சத்திய சோதனை ஆகும். அந்நூலில் காந்தி அடிகள் தம் வாழ்க்கையில் எல்லா நிகழ்ச்சிகளையும் எழுதவில்லை. அதற்காக அதனை குறைபிரசவம் என்று கூற முடியாது. பாரதியாரின் சுயசரிதை கவிதை வடிவில் அமைந்துள்ள நூலாகும். பாஞ்சாலி சபதத்தை போல் அதுவும் ஒரு சிறு காவியமாக கொள்ளபட்டத்தக்கது. ஒரு நூலை ஆக்குவோன் சில குறிக்கோள்களின் அடிப்படையிலேயே அதனை எழுதுகின்றான். பாரதியாரும் ஒரு சில குறிக்கோள்களை அடிப்படையாக வைத்து தமது சுயசரிதையை எழுதியுள்ளார்.

ஆங்கில கல்வியினால் ஏற்படும் தீங்கு பால்ய திருமணத்தின் தீமை, வறுமையின் கொடுமை முதலியவற்றையும் இறைவனைப் பற்றிய உண்மைகளையும் எடுத்து உணர்த்துவதை குறிக்கோளாக கொண்டுள்ள அவர் தம்முடைய சுயசரிதையை பாடியுள்ளார். நூலின் முன்னுரையில் உண்மை தண்ணில் ஓர் பாதி உணர்ந்திட்டேன் என்று முழுமையும் உணரா நிலையை எடுத்துக் கூறியுள்ளார்.

மேலும் இந்த உலகைப்பற்றிய உண்மையை முற்றாக உணர்வதற்கு நல்லறன் பெற்றிலேன் என குறிப்பிட்டுள்ளார். அடுத்து தமது சுயசரிதையை ஆரம்பிக்கும் பொழுது தாம் இளமை பருவத்து ஏனைய சிறுவர்களோடு கூடி ஆடிப்பாடி மகிழாமல் தாம் தனிமையில் வாடிய துன்பத்தை கூறி சுயசரிதையை ஆரம்பிக்கின்றார். அடுத்து பிள்ளைக் காதல் என இளமைக்காதல் பற்றிய இயல்பினை எடுத்து விளங்குகின்றார். அடுத்து தந்தை வறுமை எய்தலும் அதனால் ஏற்பட்ட வறுமை துயரையும் எடுத்துக்கூறி வாழ்க்கைக்கு செல்வத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தி கூறுகின்றார். அடுத்து பராசக்தியை தமக்கு அருள் புரியுமாறு வேண்டுதல் செய்கின்றார். அதுமட்டுமன்றி மரணத்தை வெல்வதற்குரிய குணங்களால் ஏற்படும் கேட்டினை எடுத்துக்கூறுகின்றார். அடுத்து கடவுள் இடம்பற்றி விளக்கி காட்டுகின்றார். அதனை தொடர்ந்து குருதரிசனம் கிடைக்கப்பெற்றமையும் விரிவாக கூறுகின்றார். அதுமட்டுமன்றி

தாயினுடைய உயர்வு காதலின் சிறப்பு ஆகியவற்றை குறிப்பிட்டு இறுதியிலே மத பேகங்களையெல்லாம் கைவிட்டு எல்லா மதமும் ஒரே மதம் என்ற உண்மையை வலியுறுத்தி முடித்துள்ளார். எனவே சுருங்க சொல்லி விளங்க வைத்தல் என்ற முறைப்படியும் கவிதைக்குரிய இயல்பில் தமது சபதத்தை பாடி முடித்துள்ளார். ஆகவே எல்லாவற்றையும் குறிப்பிட வேண்டும் என்பது விதியன்று மேலும் அறம், பொருள் இன்பம் வீடு ஆகிய புருடார்த்தங்கள் நான்கை பற்றி கூறுவதே காப்பியம் என்று காப்பிய இலக்கணம் வகுத்து கூறிய பொழுதும் வீட்டினைபற்றி கூறாது அறம்பொருள் இன்பம் ஆகிய மூன்றையும் பற்றி எடுத்துக்கூறி உள்ளார். சிலப்பதிகாரம் சிறந்த காப்பியமாக போற்றப்படுவது போல் பாரதியாரின் சுயசரிதையும் அவரது வாழ்க்கையில் ஒரு சில நிகழ்ச்சிகள் எடுத்துக் கூறப்பட்ட பொழுதிலும் எப்பொழுதும் அது முழுமைபெற்ற ஒன்றாகவே அமைந்துள்ளது.

எப்பொழுதும் செய்யுளில் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் முக்கிய அம்சமாகும் ஆகவே புலன் எதனையும் விதித்து கூறுவதில்லை. அவசியம் கூற வேண்டியவற்றை உய்த்துணர்ந்து கொள்ளுமாறு கூறாது விடுவான். ஆகவே அந்த அடிப்படையில் பாரதியாரின் சுயசரிதையும் அவசியமான விடயங்களை மட்டும் எடுத்துக்கூறும் நூலாக அமைந்துள்ளது. ஆகவே அதனை குறைப்பிரசவம் என்று கூறுவது சிறிதும் பொருத்தமற்றதாகும். சர்வதேச சமரசமாய் மக்கள் வாழ்வோம் என்ற கருத்தோடு நூல் முடிவதால் குறைபிரசவம் என்று கூறும் கூற்று பொருத்தமற்றதாகும்.

அதுமட்டுமன்றி பாரதியாரின் நடைமுறையையும் அவர் படைப்புகளையும் துணையாகக் கொண்டு அவருடைய சிந்தனை போக்கையும் தத்துவ நோக்கையும் இனங்கான முடிந்தது பாரதத்தில் வாழ்ந்த காலத்தில் வாழ்க்கை போராட்டத்தில் தேரும் பொருட்டு ஆஸ்தான கவியாக பதவியேற்ற இவர் அதனின்று நீங்கி இந்திய சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அந்நியராட்சி தடையாயிருப்பதையும் இந்திய மக்களின் கஞ்சிக்கும் வகையற்ற நிலைக்கு அந்நியர் சுரண்டலே காரணம் என அறிந்த பாரதி தேசவிடுதலைக்கென உழைக்கும் பேரவாவோடு சுதேச மித்திரன் பத்திரிகையின் மொழிப்பெயர்பாளராக இருந்தார். தேசிய உணர்ச்சிக்கு ஊக்கமூட்டும் வகையில் வ.வே.சு. ஐயர், அன்னை நிவேதிதா போன்றோரின் தொடர்பு ஏற்பட்ட பின்னர் பாரதி என்ற தீப்பந்தம் ஒளிவீசும் ஞான விளக்காக மாறியது. அத்தோடு பாரதியின் கவிதை படைப்புகளின் பக்குவ நிலை உருவாகத் தொடங்கியது.

யுத்தக்கவி என எல்லோராலும் போற்றப்படும் பாரதி தன் பாடல்கள் எளியபதங்கள் எளியநடை எளிதில் அறிந்துக்கொள்ளக் கூடிய சந்தம் பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியங்களை பாரதி

படைத்துள்ளார். அதுமட்டுமன்றி நாட்டு மக்கள் நலம் பெற்று வாழ்வதற்காகப் பல பாடல்களை பாடிய அவருடைய நெஞ்சம் நாட்டு விடுதலையை மட்டுமன்றி நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு இடையூராக இருந்த பல கொடுமைகளை பற்றியும் பாடியுள்ளார். சமுதாய நன்மைக்காக பாடிய பாடல்களின் மூலம் அவரது கவிமனம் சர்வதேசங்களுக்கும் சிறகடித்து பறந்தது. இந்நிலையிலிருந்து பார்ப்போமானால் பாரதியாரின் சுயசரிதை குறைபிரசவம் அல்ல என்றே கூறவேண்டும்.



# மலையக கல்வி சீரழிவுக்கான பின்னணி

எலிஸபெத்



இலங்கையின் கல்வி வளர்ச்சியானது காலத்திற்கு காலம் நவீன சீர்திருத்தங்களை உள்வாங்கி புதிய பரிணாமங்களை பெறுகின்றது. கல்வியில் சீர்திருத்தங்கள்செய்யப்பட்ட போதிலும் நாடாளாவிய ரீதியில் கல்வியில் பல பின்னடைவுகளை காணகூடியதாகவுள்ளது. இது மலையகத்தை பொறுத்தவரை மேலோங்கி இருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

மலையகத்தில் நாளைய விடிவெள்ளிகளாய் ஒளிரவிருக்கும் மாணவர்களின் கல்வியில் நிதர்சன போக்கை உருவாக்குவதில் பலவகையான அடிப்படைகள் இருக்கின்றன. இவற்றில் முதலாவது தடைக்கல்லாக இருப்பது பொருளாதாரம்தான் என்றாலும் போக்குவரத்து வாசிகசாலை, பெற்றோர்,ஆசிரியர், வளப்பற்றாக்குறை போன்ற விடயங்களே ஒரு மாணவனின் கல்வியில் பெரிதான தாக்கத்தை செலுத்துகின்றது. இதில் ஒன்றோ அதற்கு மேற்பட்ட காரணிகளோ மாணவர்களுக்கு கிடைக்கவில்லையாயின் அது கற்றலில் நல்ல பயனை பெற முடியாமல் தடையாக இருக்கின்றது.

மலையக பெற்றோர்களில் அநேகர் தொழிலாளர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களின் வேதனமானது இரண்டு மூன்று பிள்ளைகளைக் கொண்ட ஒரு குடும்பத்தை நடத்துவதற்கு எந்த வகையிலும் போதுமானதல்ல. பொருளாதாரத்தில் சிக்கலை எதிர்நோக்குவதால் அவர்களின் வேதனம் பசியை போக்குவதற்குத்தான் ஆதாரமே தவிர அவர்களின் ஆரோக்கியத்திற்கு ஏற்ற போஷாக்கான உணவு கிடைப்பதில்லை. இதனால் பிள்ளைகள் அடிக்கடி சிறிய நோய்களுக்கும் அகப்பட்டுக் கொள்கின்றனர். இதை உறுதி செய்யும் வகையில் அண்மைகால புள்ளிவிபரப்படி 40% மானோர் இரத்த சோகை நோயால் மலையகத்தில் பீடிக்கப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. இது பிள்ளைகளிலும் தாக்கம் செலுத்துவதால் கற்பதற்கும் இந்த ஆரோக்கிய குறைவு காரணமாக அமைகின்றது. அதுமட்டுமல்லாது பிள்ளைகளின் கல்விக்கான தேவையை பெற்றோர்களால் பூர்த்தி செய்ய முடிவதில்லை. சிலவேளைகளில் ஒரு கொப்பியில் எல்லாப் பாடங்களையும் ஒரு பிள்ளை எழுதுகின்ற சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. பேனா, பென்சில், அழிறப்பர், கலர் போன்ற இன்னும் தேவையான பொருட்கள் கூட இல்லாமல் பிள்ளைகள் பாடசாலைக்கு வருகின்றனர். ஒரே சீருடையை அணிந்து

வருகின்ற மாணவர்களும் சீருடையையே வீட்டிற்கும் அணிகின்றனர். இவ்வாறான பிள்ளைகள் ஆசிரியரால் புறக்கணிக்கப்படுகின்றனர். இதனால் பிள்ளைகளுக்கு தாழ்வுச்சிக்கல் ஏற்படுகின்றது. இதனால் திறமையான மாணவர்கள்கூட முன்வந்து செயற்படாத நிலை காணப்படுகின்றது.

ஒவ்வொரு பெற்றோரும் தங்களின் பிள்ளைகளை குறித்து அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும். மலையக பெற்றோர்களில் அநேகருக்கு இந்த அக்கறைக்கிடையாது. பிள்ளைகளை பெற்றுவிட்டால் போதும் என்ற நிலைதான் காணப்படுகின்றது. காலை நேரங்களில் வேலைக்குச் செல்லும் முன்னதாய் பிள்ளைகளை காலைக்கடன்களை முடிக்கச் செய்து சுத்தமாக உடை அணிவித்து, உணவு கொடுத்து பாடசாலைக்குத் தேவையான உபகரணங்கள் அனைத்தும் இருக்கின்றதா என்று பார்த்து பிள்ளையை பாடசாலைக்கு அனுப்புகின்ற பெற்றோர்கள் எம்மில் எத்தனைப் பேர் இருக்கின்றனர். விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே. அது மட்டுமல்ல வீடுவந்த பிள்ளைகள் இரவு நேரங்களில் படிக்க வேண்டும். வீட்டுப்பாடங்களை செய்ய வேண்டும் என்று நினைக்கின்ற பெற்றோரும் ஒரு சிலரே. இவை பெற்றோரின் அக்கறையின்மை மட்டுமன்றி அவர்களின் வேலைப்ழுவும் கல்வியைப் பற்றிய பூரண அறிவு இன்மையுமே என்று கூறலாம்.

பொருளாதார ரீதியில் பார்த்தால் தொழிலாளர்களை விட பொருளாதாரத்தில் கீழ்மட்டத்தில் உள்ள கூலியாட்களும் கிராம வாசிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளை படிக்க வைத்து வாழ்க்கை மட்டத்தில் உயர்வுக்கு கொண்டு வர வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் எமது பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு பதினான்கு வயது வந்தவுடன் தோட்டத்தில் வேலைக்கு சேர்க்கலாம் என்று நினைக்கின்றனர. இதுமட்டுமா தனக்கு கீழ்வருகின்ற தம்பி தங்கைகளை பாதுகாக்கவும் தாய் தந்தைக்கு தேநீர் கொண்டு செல்லவும் வீட்டு வேலைகளை பிள்ளைகள் தலையில் சுமத்துவதற்குமே எமது பெற்றோர் நினைககின்றனர். பொருளாதாரத்திலும் பிள்ளைகளை பங்கு கொள்ள செய்ய வேண்டும் என்பதிலும் மிக அவதானத்தோடு செயற்படுகின்றனர் பெற்றோர். யாராவது பணத்தை காட்டி விட்டால் போதும் உடனே பிள்ளைகளை வீட்டு வேலை, கடைகள், வாகனங்கள், தொழிற்சாலைகள், விவசாய தோட்டம் போன்ற இடங்களுக்கு வேலைக்கு அனுப்பிவிடுகின்றனர். அரசாங்கம் பதினான்கு வயதுக்கு கீழ்பட்டவர்கள் கட்டாயம் பாடசாலைக்கு அனுப்பபட வேண்டும் என்று கூறினாலும் அது அவர்களுக்கு செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றதுதான். பெண்பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதால் தங்களது பண்பாடு, கௌரவம் கெட்டுவிடுமென்று நினைக்கின்றனர் பெற்றோர்.

ஒவ்வொரு பெற்றோரும் எங்களது தற்கால பிரச்சினையைவிட எதிர்காலத்தில் பிள்ளை எதிர் நோக்கப் போகும் பிரச்சினையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கே ஒவ்வொரு பெற்றோரும் முன்வர வேண்டும். பாடசாலையைவிட்டு பிள்ளைகளை வேலைக்கு அனுப்பும் போது அவர் பெரும் பிரச்சினைகளை சந்திக்கின்றனர். போதை பொருளுக்கு அடிமையாகும் சந்தர்பம் கிடைப்பதோடு

வேலைக்குச் செல்கின்ற பிள்ளைகள் பாலியல் வல்லுறவிக்கு உட்படுத்தப்படுகின்றனர். இலங்கையில் தற்கால ஆய்வுகள் வெளியிட்ட தகவல்களிவல் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்து வருவதாக தெரிகின்றது. இந்த பாதாளத்திலிருந்து ஒவ்வொரு சிறுவர்களையும் காப்பாற்ற மலையக பெற்றோர்கள் முன்வந்தாலன்றி இதற்கு விடுதலை கிடைக்கப் போவதில்லை. ஒவ்வொரு பெற்றோரும் உணர்வோடு தம்பிள்ளையை எதிர்கால சமூகத்திற்கு சவாலாக எழுந்துவர துணைநிற்க வேண்டும்.

போக்குவரத்துத்துறை எவ்வளவுதான் வளர்ந்திருந்த போதிலும் தோட்டபுறங்களை பொருத்தவறையில் இதுவொரு கண்ணாம்பூச்சி விளையாட்டாகவே இருக்கின்றது. ஒரு பிள்ளையானது முன்பள்ளிக்குச் செல்ல வேண்டுமானால்கூட பலமைல் அல்லது பல கிலோமீற்றர் தூரம் கடந்துச் செல்ல வேண்டியிருக்கின்றது. இதற்கு காரணமாக இருப்பது மலையக தோட்ட பகுதிகளில் போக்குவரத்து சேவை இல்லாமையாகும். அதுமட்டுமல்ல ஆரம்பபாடசாலைக்குச் செல்கின்ற மாணவர்கள் ஏதோ ஒருவகையில் நடந்துச் சென்று படித்தாலும் இடைநிலையை மேற்கொள்வதற்கு வேறுதூர நகரங்களுக்கோ அல்லது தோட்ட பாடசாலைக்குச் செல்ல வேண்டி ஏற்படுகின்றது. இதனால் அநேகர் பாடசாலைக்குச் சொல்வதை ஒரு சுமையாக நினைக்கின்றனர். நீண்ட தூரம் நடந்துச் சென்றும் குறித்த நேரத்திற்கு பாடசாலைக்குச் செல்ல முடியாமல் இருக்கின்றது. பாடங்களிலும் கவனம் செலுத்த முடியாது.அவர்கள் வந்த களைப்பு இதை அறியாத ஆசிரியரின் திட்டு, அடி இவை மாணவனை மேலும் கல்வியில் விரக்தியை ஏற்படுத்துகின்றது. எனவே மாணவர்கள் பாடசாலைக்கு மட்டும் சென்று வரவாவது போக்கு வரத்து சேவை இருக்குமானால் மாணவர்கள் கல்வியை வெறுப்பின்றி மேற்கொள்ள உதவும்.

மாணவர்களின் கல்வியறிவை வளப்படுத்துவதில் வாசிப்பு ஒரு பிரதானமான பங்கை வகிக்கின்றது. ஒரு விடயம் தொடர்பான மேலதிக அறிவை பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களுக்கு பலதுணை நூல்கள் தேவைப்படுகின்றது. இந்நூல்களை மாணவர்கள் தங்கள் இருப்பிடத்திலேயே பெற்றுக் கொள்ள முடிவதில்லை. ஏனென்றால் பாடசாலைகளில் நூலகவசதி இல்லை. ஒவ்வொரு ஆசிரியரும் இதில் மிகவும் கவனமாக செயற்பட வேண்டும். ஒவ்வொரு வகுப்பிலும் வகுப்பு நூலகத்தை ஆரம்பிக்க வேண்டும். பாடசாலை மட்டத்திலான நூலகத்தை ஆரம்பிக்க வேண்டும். கிராமங்கள் தோட்டங்கள் என்ற அடிப்படையில் நூலகங்களை அமைப்பதில் ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோரும் அக்கறை கொள்ள வேண்டும். இவ்வாறான நிலைமைகளின் போது மாணவர் தேடிப்படிக்கும் அறிவைப் பெற்றுக் கொள்வதோடு ஒரு பரந்துபட்ட

அறிவையும் பெற்றுக் கொள்கின்றனர். வாசிப்பு திறனும் அதிகரிக்கும். இதனால் அவன் பூரணமனிதனாகும் சந்தர்பங்கள் கிடைக்கின்றது. அநேகருக்கு இது ஒரு சிறந்த வழிகாட்டியாகஉம் இருக்குமென்பதில் ஐயமில்லை. இவ்வாறு நூலகங்கள் இல்லாதிருப்பது தான் மாணவர்கள் கல்வி வளர்ச்சியில் ஒரு வீழ்ச்சி காணப்படுகிறதென்று கூறலாம்.

கல்வி கோட்பாடுகளும் கல்வி சீர்திருத்தங்களும் காலத்திற்கு காலம் மாறினாலும் மலையகத்தைப் பொறுத்தமட்டில் வளப்பற்றாக்குறை என்பது நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போகின்றது. இதில் பாடசாலையும்வீட்டுச் சூழலும் அடங்குகின்றது. பாடசாலையை எடுத்துக் கொண்டால் அரசாங்கம் பிள்ளைகளுக்கு கொடுக்கின்ற பாடநூலும் சீருடையும் ஒரு கொடையாகுமென்றே கூற வேண்டும். ஆனாலும் பாடசாலையில் ஒரு கட்டிடத்தில் தரம் 1 - 11 வரையான வகுப்புக்கள் இருக்கின்றன. இதில் மாணவர்களை வகுப்பறையில் உட்கார வைப்பதே பெரிய சாதனையாக இருக்கினற போது இவர்களை கற்றலில் பல நுட்பமுறைகளை கையாள்வது செயற்திட்டங்களை மேற்கொள்வது விளையாட்டு முறையில் கற்றலை இலகுப்படுத்துவது போன்ற நேரங்களில் பெரும் சிரமங்களையே எதிர்நோக்க வேண்டியுள்ளது மட்டுமல்ல விஞ்ஞான கூடம், விவசாயம் செய்யுமிடம், இசை, நாடகம், சமையல் போன்றவற்றில் செயற்பாடுகளை எதிர்பார்க்க முடியாது. இதற்கான இடவசதியோ வேறு வசதி, வளங்களோ மலையக பாடசாலைகளில் அரிதாகவே காணப்படுகின்றது. உலகம் இனடர்நெட் வரை சென்றுவிட்ட காலத்தில் தட்டச்சி தெரியாத மலையக பிள்ளைகள் அநேகர். இவர்களை வேறு நகர்புறங்களுக்கு அழைத்துச் சென்று இவற்றை காட்டுவதிலும் பல சிரமங்கள் ஏற்படுகின்றது. கிடைக்கின்ற பொருட்களையும் அதிபர்மார் பத்திரமாய் பூட்டி வைப்பதையும் தங்கள் சொந்த தேவைகளுக்கு பயன்படுத்துவதையும் காணலாம். பாடசாலை வளங்கள் மாணவர்களுக்கென்பதை அதிபரும் ஆசிரியர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வீட்டுச் சூழலை எடுத்துக் கொண்டால் ஒரு அறைக்குள்ளேயே வீட்டுத்தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்துக் கொள்ள வேண்டிய துர்பாக்கிய நிலை. வீட்டில் போய் பிள்ளை தனது திறமையை பரீட்சித்து பார்க்கும் அளவிற்கு அவர்களின் பொருளாதார நிலையும் முட்டுக்கட்டையாக அமைகின்றது. சொல்லப்போனால் அவர்க்ள வீட்டின் அமைவுகூட ஒரு தடையே என்று சொல்லலாம். பிள்ளைகள் படிப்பதற்கோ அல்லது ஒரு விடயத்தை கிரகிக்கவோ முடியாமல் அண்டை வீட்டாரின் இடையூறுகள் காணப்படுகின்றது.

ஒரு விடயந்தொடர்பான மேலதிக தகவலை திரட்டிக் கொள்வதென்றால் கூட முடியாது, சுற்றியுள்ள வீடுகளில் கற்றவர்களையோ விடயந்தெரிந்தவர்களையோ அனுபவமுள்ளவர்களையோ காண்பது கடினமாகும். இதுவும் மாணவர்களின் கற்றலில் தாக்கத்தை செலுத்துகின்றது. இவைமட்டுமன்றி நீர், மின்சாரம் போன்றவையும் மாணவர்களின் கற்றலில் பாதிப்பை ஏற்படுத்தும். இங்கு சமவயது குழுக்களை அதிகமாக சந்திக்ககூடியதாக இருக்கின்றது. இதனால் கற்றலைவிட வேறு செயற்பாடுகளை செய்வதிலேயே ஆர்வமாக இருக்கின்றனர். கூடுதலாக விளையாட்டு, படம் பார்த்தல், பாடசாலைக்கு செல்லாமலிருத்தல், சேர்ந்து வேலைதேடிச் செல்லுதல் போன்ற விடயங்களில் ஈடுபடுவர். இவ்வாறான இடையூறுகளின் காரணமாக கற்றலில் விருப்பமில்லாமல் ஒரு விரக்திநிலை காணப்படுவதாலேயே மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுவது அதிகமாகின்றது.

எழுத்தறிவித்தவன் இறைவன் என்று கூறுகின்றோம். அந்தவகையில் இதன் தாற்பரியத்தை ஒவ்வொரு ஆசானும் உணர்ந்துக் கொள்ள வேண்டும். மாணவர்களை சமுதாயத்திற்கு நல்ல பிரஜைகளாக உருவாக்குவதில் ஆசிரியர்களுக்கே கூடுதலான பங்கும் பொறுப்பும் இருக்கின்றது. ஒவ்வொரு ஆசிரியரும் ஆசிரியத்துவத்தை தொழிலாக அன்றி உணர்வுடன் கூடிய சேவையாக செய்ய முன்வந்தால் நல்ல சமுதாயத்தை உருவாக்கலாம். இதனடிப்படையில் ஆசிரியர்கள் மாணவரை எந்த வகையிலும் புறக்கணிக்காது ஒரு பாதுகாவலனாக செயற்பட வேண்டும். ஆசிரியர்கள் மாணவரை கற்றலில் அடிப்படையிலிருந்து கொண்டு செல்ல வேண்டும். பேச்சு, வாசிப்பு, எழுத்து என்ற அடிப்படையோடு சுகாதாரம், கலை, கலாசாரம், விழுமியம், முயற்சி போன்றவற்றையும் கற்றுக் கொடுக்க வேண்டும். பெற்றோரைவிட அதிகமாக பிள்ளைகள் ஆசிரியரின் வார்த்தையை கேட்டு நடப்பது அதிகம். இதனால் எல்லாவகையிலும் மாணவருக்கு நல்லவழிகாட்டியாய் ஆசிரியர் திகழலாம். மலையகத்தில் தற்கால ஆசான்களை பார்த்தால் மாணவர்களின் தோல்மீது கைப்போட்டு தாங்கள் செய்கின்ற எல்லாவித அட்டகாசங்களுக்கும் மாணவர்களை பகடைக்காயாய் பாவிக்கின்றனர். இவ்வாறு சிலர் இருப்பதனாலேயே மாணவர்களை கற்றலில் ஈடுபடுத்த முடியாதநிலை. ஒரு சில ஆசிரியர்கள் பாடசாலை விடுதிகளில் தங்குவார்களாக இருந்தால் தன் வகுப்பிலுள்ள பிள்ளைகளை வீட்டு வேலைகாரர்களாகவே மாற்றி விடுகின்றனர். தற்போது மலையகத்தை சார்ந்த ஆசிரியர்களே பாடசாலைகளில் இருக்கின்றனர். இவர்கள் சமுதாய உணர்வோடு நாமும் இன்றைய சமுகத்திற்கு என்றும் பின்தங்கியவர்கள் அல்ல. எங்களாலும் நல்ல கல்விமான்களை உருவாக்க முடியும். நாளைய சமுகம் எங்கள் கையில் என்ற சவாலோடு சேவை செய்தால் மலையகத்தின் ஒளிமயமான எதிர்காலம் தொலைவில் இல்லை. ஆசிரியர்கள் ஒவ்வொரு

பெற்றோரிடமும் தொடர்பு வைத்துக் கொள்கிறார்களா என்பது கேள்விகுறியாகவுள்ளது. பெற்றோருடன் தொடர்பு கொண்டு பிள்ளைகள் பற்றிய மதிப்பீட்டை அடிக்கடிகூறி பெற்றோரையும் ஊக்குவிக்க வேண்டும். ஆசிரியர் எப்போதும் மாணவர் மீது அன்பு கருணை இரக்கம் உள்ளவராக நடந்துக் கொள்வதே சால சிறந்தது.

இன்னும் சொல்லப் போனால் மலையக கல்வி வளர்சி தடைபட அநேக காரியங்கள் இருக்கின்றது. இதில் முதலாவது சாதாரண தரம் சித்தி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பை கொடுத்தல் கல்வியல் கல்லூரிகளுக்கு குறைந்த புள்ளியில் மாணவர்களை அனுமதித்தல். இவை மாத்திரமன்று இன்றய ஆடைத்தொழிற்சாலைகள் வேலைவாய்பை கொடுத்தாலும் இது கல்வி மட்டத்தை மட்டுப்படுத்துவதாக காணப்படுகின்றது. இலங்கையில் மொத்த சனத்தொகையில் 93% மானோர் எழுத்தறிவுடையோர் இதில் எத்தனை வீதம் மலையகத்தை சாரும். அரசாங்கமும் நலன்புரி நிலையங்களும் மலையக கல்வியில் ஒரு முன்னேற்றப் பாதையை அமைக்க வேண்டுமேயன்றி இடையில் தடைகளை ஏற்படுத்துவதை தவிர்த்தல் வேண்டும்.

மலையகத்தின் மறுமலர்ச்சிக்காய் எதிர் காலத்தின் சுபீட்சத்திற்காய் உழைப்பதில் ஆசிரியரும் பெற்றோரும் தங்களை அர்பணிக்க வேண்டும். அரசாங்கம் கல்வி சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் பொழுது ஒவ்வொரு பிரதேசத்தையும் கருத்திற் கொண்டு எல்லோருக்கும் பொருந்தும் வகையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். மாணவர்களின் தேவைகளை புரிந்து செயற்படுவதிலும் கல்வியில் மேம்பாடடைய திடசங்கற்பம்கொள்ள வேண்டும். இதையே ஒவ்வொருவரும் சிரம்மேல் கருத்தாய் கொண்டால் மலையகம் கல்வியில் ஈடேரும் என்பதில் துளியும் ஐயமில்லை.



# சமூகமும் இலக்கியமும்

திருமதி. பத்மாவதி செல்லத்துரை

பல்வேறு சேர்க்கைகளின் பிரதிபளிப்பே சமூகம் ஆகும். பெரும்பாலான சமூக அமைப்புகள் மொழி பண்பாடு கலாசாரம் பழக்கவழக்கங்கள் என்பவற்றினை அடிப்படையாக கொண்டு காணப்படுகின்றது. இவ்வாறான அமைப்புகளை உள்ளடக்கிய ஒரு கூட்டத்தினர் கூடி வாழும் போது அவர்களை சமூகத்தினர் என்றழைக்கின்றோம். இத்தகைய சமூகத்திலிருந்து செயற்றிறன் வாய்ந்த எழுத்தாளர்கள் கவிஞர்கள் மூலம் உருவாக்கப்படும் படைப்புகளே இலக்கியங்களாகும். இவ்வாறு படைக்கப்படும் இலக்கியங்கள் அச்சமூகத்தின் பிரச்சினைகளை தேவைகளை எடுத்துக்காட்டுவதாக அமைய வேண்டும். அப்பொழுது தான் உண்மை இலக்கியமாக அமைய முடியும். எனவே சமூகமும் இலக்கியமும் தனித்தனியானவையல்ல. இரண்டும் ஒன்றோடு உன்று பிண்ணிப் பிணைந்திருத்தல் வேண்டும்.

தமிழ் இலக்கிய வரலாற்றினை நாம் உற்று நோக்குவோமெனில் அக்கால மக்கள் வாழ்க்கையை அகம் புறம் என இரு கூறுகளாக பிரித்து ஆக்கப்பட்டன. மக்களின் மன உணர்வுகள், குறிக்கோள்கள், எழுச்சி, வீழ்ச்சிகள் போராட்டம் போன்ற பலவும் அக்கால சமூகப் போக்கிற்கு ஏற்ப சித்தரிக்கப்பட்டமையால் அவை காலம் கடந்தும் வாழ்கின்றன. சங்கமருவிய காலப் பகுதியில் திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய சில நூல்களைத் தவிர பெரும்பாலானவை சமூகத் தேவைகளை நோக்காது அறக்கருத்துக்களை வெளிப்படுத்தும் உபதேசகளஞ்சியங்களாக மாற்றமடையத்தலைப்பட்டன. எவ்வளவு நல்ல நோக்கத்தை கொண்டிருந்த போதும் சமூகத்திலிருந்து விலகி அன்னிய பண்பாட்டு கலாசாரங்களை புகுத்த முற்பட்டபோது அவை மக்களுக்கு எட்டாக்கனியாகவே ஆகிவிட்டன. இன்று இவை பெயரளவிலே நிலவுகின்றன என்றே கூறல் வேண்டும்.

பல்லவர் காலத்தில் ஆன்மீகமயமான சமூகமாக தமிழினம் மாறவேண்டிய தேவை உண்டாகிறது. உலகியலை வெறுத்தொதுக்கும் துறவு சமயங்களிலிருந்து விலகி சமூகநிறுவனங்களான குடும்பம், பாசம், பற்றுக்களோடு இணைந்து கடவுள் நெறிமூலம் திருப்திக்கான முற்பட்ட சமூதாயதேவைகளை பக்தி இலக்கியம் நிறைவு செய்தன. இதன் பின்னர் சோழர்காலம் கற்றோர் இதயம் களிக்கும் வகையில் அமைந்த காவியங்களுக்கு முதன்மையளித்த போதும் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்தமையால் அவற்றிட்கும் மதிப்பிருந்தது. காலப்போக்கில் நாயக்கர் காலத்தில் புலவரின் வறுமையும், பாண்டித்தியமும் தலையெடுத்தபோது தமிழிலக்கியம் சமூகத்திலிருந்து விலகிப் போயிற்று. இவை ஐரோப்பியர் காலத்தின் பின்னர் நிலமை மாறுகின்றது.

கல்வி பரவலாக மக்களுக்கு கிடைக்க வாய்ப்பு உண்டாகின்றது. சமூகத்தை கட்டியணைத்துக் கொண்டு அதன் பிரச்சினைகளை அது விளங்கக்கூடியவகையில் சொற்களை உணர்ச்சிமயமாக எடுத்துச் சொல்ல வேண்டிய தேவை, பாரதி, வேதநாயகம்பிள்ளை, வ.வே.சு ஐயர் போன்றவர்களை தோற்றுவிக்கின்றது.

இந்நிலையில் இருபதாம் நூற்றாண்டு தோன்றுகிறது. நாவல், சிறுகதை, நாடகம் ஆகிய இலக்கிய வடிவங்கள் செல்வாக்குப் பெறுகின்றன. எழுத்தாளர்கள் சமூகத் தேவைகளை முன்னெடுத்துச் சென்று இலக்கியம் படைக்கத் தொடங்குகின்றனர்.

இன்றைய சமுதாய அமைப்பை நோக்கும் போது இலக்கியமும் சமூகமும் ஒன்றாக இணைந்த நிலையில் செயல்படுவதனைக் காணலாம். மனித வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையதாக, மனிதனையே இயங்கச் செய்யும் ஒரு கருவியாக இலக்கியங்கள் மாறியுள்ளன. சமூதாயத்தில் காணப்படும் குறைபாடுகளை ஊடுருவி வெளிகாட்டும் கருவியாக இலக்கியம் மாறி வருகின்றது. சமூகத்தின் போராட்டங்களை, அதற்கான தீர்வுகளை எடுத்துக்காட்டி செயல்படத்தூண்டும் கருவியாக இலக்கியங்கள் மாறி வருகின்றமை வரவேற்கத்தக்க ஒன்றாகும்.



For Quality Printing
ViVi Print Plus
No.69/4 Dumburugiriya
Dunbar Road
Hatton.
Tel : 051-23812
Fax : 0094-51-23812

# தமிழில் பிறமொழி செல்வாக்கு



செல்வி. தெ. மீனாம்பிகை

சமூக வளர்ச்சிப் போக்கிலே பிறமொழிகளின் செல்வாக்கு தவிர்க்க முடியாத ஒன்றாகும். மனிதர்கள் சிற்சில குழுக்களாக பிற சமூகத் தொடர்பின்றி பிற பண்பாட்டுத் தாக்கமின்றி தனித்து வாழ முடியுமாயின் அவர்களின் மொழியில் பிறமொழி செல்வாக்கு இன்றி இயங்க முடியும். ஆனால் போக்குவரத்து வசதிகள் பெருக்கிக்கொண்டிருப்பதனாலும், அறிவியல் வளர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருப்பதனாலும், பல இனமக்களோடும் அவர்களது மொழிகளோடும் தமிழ்மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் தொடர்பு நெருக்கமாக ஏற்பட்டிருந்ததனாலும் தமிழில் பிறமொழிச் செல்வாக்கு அதிகரித்தது எனலாம். தமிழோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்ட பிறமொழி வட மொழியே. தமிழுக்கும் வட மொழிக்கும் இடையிலான தொடர்பு பற்றி பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்கள் இலக்கண சிந்தனைகள் என்ற நூலில் ஆராய்ந்து சிறந்தமுறையில் கூறியுள்ளார். தமிழிற் பிறமொழிச் செல்வாக்கு ஆனது இலக்கிய வழக்கிலும், பேச்சு வழக்கிலுமாகத் தமிழிலுள்ள சொற்களில் ஒரு பெரும் பகுதி வட மொழிச் சொற்களாகும். தமிழ்மொழியில் எக்காலத்து முதன்முதல் இலக்கியங்கள் தோன்றத் தொடங்கினவோ அக்காலம் தொட்டே வட மொழி சொற்களும் செல்வாக்குப் பெறத் தொடங்கின.

தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளின் ஒலியமைப்பு, வரிவடிவ அமைப்பு, சொல்லமைப்பு, இலக்கணவமைப்பு ஆகியன வடமொழியின் பாதிப்புக்குட்பட்டன. வடமொழிச்சொற்கள் தமிழில் செல்வாக்கு பெறுவதற்கு பலகாரணங்களும் உண்டு. தம்மிடமில்லாத புதிய பொருட்களுக்கு பிறமொழிப் பெயர்களை கடன் வாங்குவதும், ஓரினம் பிறிதொரு இனத்தை அடிமை கொண்டமை போன்ற காரணங்களினால் வடசொற்கள் தமிழில் செல்வாக்குப் பெறலாயின. சங்க காலத்திற்கு முன்னரே ஆரியர் வடக்கிலிருந்து தெற்கே இடம் பெயர்வு, வைதீக சமயங்கள், சமணம், பௌத்தம் என்பவற்றினூடாக பிராகிருதம், பாளி, சமஸ்கிருதம் என்பவற்றின் வருகையினால் தமிழிற் கலந்துள்ளன. சங்ககாலத்திற்கு முந்தியதாக்க கருதப்பட்டும் குகைக்கல் வெட்டுக்களில் பிராகிரத மொழிக்கலப்பை அதிகமாக்க காணமுடிகின்றது.

காலந்தோறும் வடமொழிக்கலப்பு ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. சங்க இலக்கியங்களை நோக்குகையிற் வடமொழிக் கலப்பானது இரண்டு வீதமே எனலாம். உதாரனமாகமாக குறுந்தொகையில் காமம், திலகம், நற்றிணையில் தெய்வம், வஞ்சம், புறநானூற்றில் ரூபம், ஆகுதி போன்ற சொற்கள் கலந்துள்ளமையை நோக்க முடிகின்றது. அறநூல்களினூடாகவும் தமிழிற் பல வடசொற்கள் கலந்துள்ளன. திருக்குறளிலும் நூற்றுக்கு மேற்பட்ட வட சொற்கள் உள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலை எனும் காவியங்களில்

வட சொற்கலப்பு சங்க நூல்களிலுள்ளதைப் பார்க்கிலும் எத்தனையோ மடங்கு என்றே கூற வேண்டும். உதாரனமாகமாக குங்குமம்.

கிறிஸ்த்துவுக்குப் பின் ஏழாம் நூற்றாண்டின் பின் பிறமொழிக்கலப்பு ஏராளமாகத் தமிழில் ஏற்படத்தொடங்குகின்றது. மணிப்பிரவாள நடை என்ற ஒன்று வளர்ச்சி பெறுகின்றது. மணிப்பிரவாள நடை என்பது சமஸ்கிருதமும், தமிழும் கலந்த ஒரு நடை முறையாகும். இக்காலப்பகுதியிலேயே ஜ, ஸ, ஷ, ஸ்ரீ, ஹ போன்ற வடமொழிச்சொற்கள் தமிழில் அறிமுகப்படுத்தப்படுகின்றன. சோழர் காலத்தில் வடமொழிக்கு ஆதரவுநல்கியது மட்டுமன்றித் தங்கள் பெயர்களையும் வடமொழியிலேயே அமைத்து கொண்டனர். அரசியல், பண்பாட்டு விளைவால் பெருந்தொகையான வடசொற்கள் தமிழில் சேரலாயின. சமய வளர்ச்சியினாலும், வடநாட்டு சமயக் குருமார் வருகையினாலும் சமஸ்கிருதக் கல்வியினாலும் இக்காலத்தில் வடமொழிக் கலப்பு அதிக மேற்பட்டதெனலாம்.

பிற பண்பாட்டுத்தொடர்பு மூலம் அப்பண்பாட்டுக்குரிபோரின் பொருட்களும், சிந்தனைகளும் நம்மை வந்து சேரும் போது அவற்றைக் குறிக்க அவர்கள் பயன்படுத்திய சொற்களும் நம்மொழியில் வந்து சேர்கின்றன. உதாரனமாகமாக சைக்கிள், பஸ், கார், லொறி, பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல என்பது இலக்கண மரபு. புதுமை மோகம் காரணமாகவும், சோம்பல் காரணமாகவும் வடமொழியை வரம்பின்றிப் பயன்படுத்துவதால் ஆரிய தூய தமிழ்ச் சொற்கள் வழக்கொழிந்தன எனலாம். மேல் நாட்டறிஞர்கள் சிலர் தமிழை ஆழ்ந்து கற்று ஒப்பியல் ரீதியாகத் திராவிட மொழிகளையும் ஆரிய மொழிகளையும் ஆராய்ந்து திராவிட மொழி தனித்தன்மை வாய்ந்தவை என்கிறார்கள். தமிழில் தனித்தமிழ் இயக்கம் தோன்றி மொழித்தூய்மைக்காகக் குரல் கொடுத்தது. அதனால் தமிழில் பிறமொழிச் செல்வாக்கின் ஆதிக்கம் படிப்படியாக குறைந்து வருகின்றது. மறைமலையடிகள் இத்துறையில் தீவிரமாக உழைத்தார். ஈழத்தில் தனித்தமிழ் ஆர்வத்தை இளமுருகனார், வேந்தனார் முதலியோர் வளர்த்தனர்.

காலத்திற்கு காலம் பல்வேறு மொழிகள் செல்வாக்குச் செலுத்தி வருவதனை இன்றும் காணலாம். குறிப்பாக வடமொழி, பாளி, பிராகிருதம், இந்தி, மராட்டி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், சிங்களம், போர்த்துக்கேயம், டச்சு, ஆங்கிலம் முதலிய பிறமொழித் தொடர்புகள் தமிழில் பாரிய பாதிப்புக்களை உண்டு பண்ணியுள்ளன. அரசியல், சமயம், பண்பாடு, வணிகம், அறிவியல், தொழில் நுட்பம் காரணமாகவும் தமிழிலே மொழிக்கலப்பு ஏற்பட்டுள்ளது. இது ஒரு விதத்தில் மொழி வளர்ச்சிக்கும் வளத்துக்கும் உதவுவதோடு ஒரு சிலவிடயங்களில் பாதகமாயும் அமைந்து விடுகின்றன என்பதில் ஐயமில்லை.

# சிறு கதை இலக்கியம் ஒரு கண்ணோட்டம



**திருமதி எஸ். லோகநாதன்**

காதலும் வீரமும் செறிந்த சங்க காலப் பாடல்கள் முதல் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களையும் போற்றும் இன்றைய இருபதாம் நூற்றாண்டு காலப் பகுதி வரையிலான இலக்கிய வரலாற்று தீரத்தில் சிறு சிறு ஓடங்களாக விளங்குபவை சிறுகதைகளாகும். ஐரோப்பியரின் வருகை ஏற்படுத்திய இலக்கிய வித்து இன்று பல கிளைகள் விட்டு பரந்துள்ளது. அனறாட நிகழ்வுகளை அதிசயிக்கும் வகையில் அரை நொடியில் வாசித்து முடிக்ககூடிய மினிக் கதைகள் கூட சிறுகதை வகைக்குள் அடங்கி வளர்ச்சி கண்டுள்ளன எனலாம்.

இயந்திர யுகமாகவும் கம்பியூட்டர் மயமாகவும் உருண்டு கொண்டிருக்கும் இருபத்தோராம் நூற்றாண்டுக்கு சிறுகதை ஓர் சிறு துடுப்பு எனலாம். ஐரோப்பிய மொழியில் நாவல் இலக்கியம் தோன்றிய பின்பே சிறுகதை தோன்றியது. ஆனால் தமிழில் அவ்வாறன்றி சிறுகதை வளர்ச்சி கனிசமான அளவு வளர்ச்சி கண்ட பின்பே நாவல் இலக்கியம் வேரூன்றியது. தமிழில் சிறுகதைகள் தோன்ற முன் எழுந்த பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம் போன்ற நாவல்கள் அவ்வளவு தூரம் நாவல் வளர்ச்சிக்கு இடம் கொடுக்கவில்லை. இவ்விரு நாவல்களைத் தொடர்ந்து சிறுகதைகளே கிளைத்துப் பரவி அதன் பின்னரே நாவலிலக்கியங்கள் அதிக அளவில் தோன்றின. நாகரீகம் பரவி வரும் இக்கால கட்டத்தில் அந்நாவல்களைப் படித்தற்கு போதிய நேரமின்மையே இதற்கு காரணமாகும்.

சிறுகதையானது கதாசிரியர் தான் எடுத்துக்கொண்ட கருவை விரித்துக் கூறாது பல இடங்களிலும் கதைப் போக்கினையும் பாத்திரங்களின் குணச்சிறப்புக்களையும் வாசகர்கள் அனுமானிக்க கூடிய வகையில் சொற்சுருக்கம் உடையதாக அமைப்பர். உருவத்தில் சிறியதாக இருப்பினும் குறிப்பாக உணர்த்தக்கூடியதை வெளிப்படையாக உணர்த்தாமல் கதைப் போக்கைக் கொண்டு சென்று முடிப்பது அதன் பண்பு. நாவலின் சுருங்கிய வடிவமே சிறுகதை எனக் கொள்ளல் தவறு. மனித வாழ்க்கையில் ஒரு குறித்த நேரத்தில் சூழ்நிலையில் குறித்த ஒரு சிலருடைய மனநிலையை அல்லது சம்பவத்தை அல்லது கருத்தை இலக்கிய தரம் அமையக்கூடியதாக சித்திரித்துக்காட்டுவதே சிறுகதையாகும்.

இந்திய ஆசிரியர்களுள் இரவீந்திரநாத்தாகூர் சிறுகதை முயற்சியில் ஈடுபட்ட ஆசிரியர் எனக்கருதப்படுகின்றார். தமிழில் அவரைப் பின்பற்றி வ. வே. சு. ஐயரும் பாரதியும் இவ்இலக்கியத்திற்கு உருவம் கொடுத்தனர் தமிழ்சிறுகதையின் தந்தையாக வா.வோ.சு.ஜயர் போற்றப்படுகின்றார். இவர் எழுதிய குளத்தங்கரை அரசமரம் என்னும் கதை தாகூர் எழுதிய கதையின் முன்மாதிரியைக் கொண்டது. இவரின் கதைகள், மங்கையர்க் கரசியின் கதைகள் என்ற நூல் வடிவில் வந்துள்ளன. பாரதியாரும் சிறுகதை ஆக்கத்தில் ஊக்கம் எடுத்தாரெனினும் அவரது உணர்ச்சிமிக்க கவிதைகள் மக்கள் உள்ளத்தைத் தொட்டது போல் சிறுகதைகள் அவ்வளவாக இடம் பெறவில்லை.

வ. வே. சு ஐயரைத் தொடர்ந்து குசிகர் குட்டிக்கதைகள் என்ற கதைகள் சிலவற்றை மாதவையா எழுதினார். இக்காலத்தில் வாழ்ந்த கதாசிரியர்கள் பொதுவாக மக்களின் வாழ்க்கை சீர்கேடுகளைத் திருத்தும் மனப்பான்மையுடன் எழுத முறப்பட்டதால் கதைகள் அவ்வளவாகச் சோபிக்கவில்லை. சீர்திருத்தக் கருத்துக்கள் போதனையாக அமைந்ததனால் சிறுகதைப் பண்பு அவற்றின் கண் அமையாததால் இவர்களின் கதைகள் மக்கள் உள்ளத்தை அவ்வளவாக கவரவில்லை. இந்த வரிசையில் பழைய தலைமுறை சரித்திரம் எழுதிய சாமிநாதையர் பிரசாரத்தன்மை பொருந்திய கதைகள் எழுதி ராஜாஜி நகைச்சுவை பொருந்திய பொழுது போக்கிற்காக உரியனவாக எழுதிய எய. வி. வி. ஆகியோரின் கதைகள் சிறந்த இலக்கியத் தரமாக அமையவில்லை.

தமிழ்ச்சிறுகதைகளின் வளர்ச்சியினை "விடுதலைக்கு முன்" "விடுதலைக்குப் பின" என்ற இரு காலப்பகுதிகளாக பிரிக்கலாம். வ. வே. சு. ஐயரைத் தொடர்ந்து இந்து விடுதலைக்குமுன் ராஜசோழன் பி. எஸ். இராமையா, பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன் மௌனி கல்கி, தி. ஜ. ர ஆகியோர் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களாக மதிக்கப்படுகின்றனர்.

இவர்கள் சிறுகதை என்னும் வானில் சிறகடித்துப் பறந்து உத்தியிலும் கருப் பொருளிலும் தங்கள் தனித்துவத்தை பதித்தனர். நடுத்தர வர்க்கத்தினரின் வறுமை, பற்றாக்குறை என்பவற்றை தனித்துவமான உரைநடையில் உள்ளத்தைத் தொடும் வகையில் படைத்தவர் புதுமைப்பித்தன். புதுமையான கருத்துகள் புது வெள்ளமாகப் பரவ மூட நம்பிக்கைகள் ஆசைகள் அல்லல்கள் என்பவற்றை எள்ளி நகையாடும் பாங்கில் தன் வாழ்க்கை அனுபவத்தைக் கொண்டு எழுதியுள்ளார். "கமந்தனும் காமனும்" "பொன்னகரம்" ஆகிய கதைகள் மூலம் வேதனை நிறைந்த மக்கள் வாழ்க்கை அம்சங்களையும் "கபாடபுரம்" காஞ்சனை ஆகிய கதைகள் மூலம் கற்பனை ஆற்றலையும் "காலனும் கிழவியும்" "சிற்பியின் நகரம்" ஆகிய கதைகள் மூலம் தத்துவக் கருத்துக்களையும் எழுதி வெளியிட்ட புதுமைப்பித்தன் ஓர் மேதை எனக் குறிப்பிடப்படுகின்றார். எவரும் பின்பற்ற முடியாத விசித்திரமான மொழிநடையில் இவர் கதைகளை எழுதியுள்ளார்.

பார்த்திபன் கனவு, பொன்னியின் செல்வன், அலை ஓசை போன்ற கதைகள் எழுதி சரித்திர இலக்கியக் கதைகளை தரம்மிக்க நகைச்சுவை ததும்ப எழுதிய கல்கி எனப்படும் கிருஸ்ணமூர்த்தி சிறுகதைகள் பல எழுதினாலும் நாவலாசிரியர் என வர்ணிக்கப்படுகிறார்.

மணிக்கொடி ஆசிரியர்கள் என வர்ணிக்கப்படும் மணிக் கொடி இதழாசிரியர்களான மௌனி, புதுமைப்பித்தன், பிச்சமூர்த்தி, இராமையா, சிதம்பரநாதன், செல்லப்பா, சுப்ரமணியன், கு. ப. ராஜகோபால் ஆகியோர் சிறப்பாக குறிப்பிடத்தக்கவர்கள்.

மௌனி கற்பனையின் எல்லைக்கோட்டில் நின்று வார்த்தைகளுக்குள் அடைபட மறுக்கும் கருத்துக்களை மடக்கிக் கொண்டு வரும் ஆற்றல் உள்ளவர் என புகழப்பட்டவர். இவரின் சிந்தனையின் ஆழத்தை "அழியாச்சுடர்"! "குடைநிழல்"! ஆகிய கதைகளில் காணலாம்.

ஆண், பெண் உறவுகளைக் கொண்டு மென்மையான வார்த்தைகளால் . உள்ளத்தைப் பிணிக்கும் வகையில் எழுதியவர் கு. ப. ரா. அவர்கள். இவரும் மணிக்கொடி ஆசிரியர்களுள் ஒருவரே.

இவர் எழுதிய காதல் புணர் ஜென்மம் கனகாம்பரம் என்பன நூல் தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. கதைகளை விட கவிதைகள் ஓரங்க நாடகம், இலக்கியக்கட்டுரைகள் ஆகியவற்றையும் இவர் எழுதியுள்ளார்.

முடிவுரை

இவர் உயிருள்ள பாத்திரங்களை சித்தரித்து வாழ்க்கையிலுள்ள சாதாரண விடயங்களை வாசகர்களின் கற்பனா சக்தியை தூண்டக்கூடிய வகையில் எழுதும் ஆற்றல் உள்ளவர் பிரெஞ்சு ஆசிரியரான மோபஸான் என்னும் கதாசிரியரின் சிறுகதைச் சாயல் இவர் கதைகளில் காணப்படுகிறது.

சிறுகதைகளில் வ.வே.சு..ஐயர் இராமையா, புதுமைப்பித்தன், மௌனி போன்ற மணிக்கொடி ஆசிரியர்கள் ஆற்றிய பங்கினை வரையறுத்துக் கூற இயலாது. பிச்சமூர்த்தியின் தத்துவக் கதைகளும் குடும்பத்தை மையமாகக் கொண்ட ராமாமிருதத்தின் கதைகளும் உணர்ச்சி வேகமும் சிந்தனை ஆற்றலும் மிக்க நா. சுப்ரமணியரின் கதைகளும் இலக்கியத் தரமுள்ள கதைகளை எழுதிய கு.அழகிரிசாமி, ஜானகிராமன் ஆகியோரின் கதைகளும் மக்கள் மனதில் இடம் பெற்றுள்ளன. எனினும் காலம் என்னும் நீரோட்டத்தில் நிலைத்து நிற்கும் சிறுகதைகள் எவையெவை என கணிக்கமுடியாது.

# காமன் கூத்து



சிவபிரானின் அருட் செயல்களில் காமதகனம் என்பது கந்தபுராணம் விவரிக்கும் முக்கியத்துவம் உள்ள செயலாகும், அட்டவீரட்டானத் தலங்களில் திருக்குறுக்கை என்னும் சிவ தலத்தில் காமதகனம் நிகழ்ந்ததென்று கூறுவது சைவமரபு, சிவபிரானின் காமதகன அருட்செயலை ஒரு சமய விழாவாகக் கொண்டாடப்படும் போது அச்செயல் பற்றிய கூத்து தமிழ் நாட்டில் திருக்குறுக்கையைச் சூழ்ந்துள்ள பிரதேசத்தில் விசேட நிகழ்ச்சியாக சமய விழாவில் இடம்பெற்றது-காலப்போக்கில் அப்பிரதேசவிழாவில் சமய முக்கியத்துவம் குன்றியது-ஆனால் காமன் கூத்து என்னும் கலை வடிவத்தின் முக்கியத்துவம் மங்கி மறையவில்லை, இக்காமன் கூத்து மலையகத் தமிழ் மக்களிடையே இப்பேதும் வழக்கத்திலுள்ள ஒரு பண்டிகைக் காலக் கலை வடிவமாக காணப்படுகின்றது.

இக்காமன் கூத்தானது தொன்று தொட்டு தமிழ் பேசும் மக்களிடையே மிளிர்கின்ற ஓர் இலக்கிய தொடர்பான நிகழ்வாகும்-வளர்ந்து வரும் சமுதாயத்திடையே இவ்வாறான கூத்துக்கள் மங்காது, மறையாது உள்ளது வாய்க்கத் தக்க பெரும் பயனாகும், மலையக மக்களிடையே சிறப்பாக இக்கூத்து பேணப்பட்டு நிகழ்த்தப்படுகின்றது. படிப்பறிவற்ற எமது மூதாதயர்களும் இவ்வகையான நிகழ்வுகளை முன் வைத்து நிகழ்த்துவர் இம்மக்களின் இலக்கிய இரசனையை காணும் போது எமக்கு பெரும் சந்தோசமாக இருக்ககும். எமது கலை வடிவத்தினை கூத்தாக நிகழ்த்தி பழம் பெரும் கூத்தினை வழிவழியாகக் கடத்தி வருபவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களின் அயராத முயற்சியின் பயனாக இக்கலை மலையகத்தில் மறையாது மாணிக்கமாகத் திகழ்கின்றது.

மலையகமெங்கும் இக்கூத்து நடைபெறாவிட்டாலும் ஆங்காங்கே சிற்சில இடங்களில் பரம்பரை பரம்பரையாக மூத்தோரால் முன்நின்று நடாத்தப்படுகின்றது. இதை கண்டு களிக்க பல இடங்களில் இருந்தும் மக்கள் வருவார்கள் எமது கலை கலாசார பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் ஒரு நிகழ்வாக இது காணப்படுகின்றது.

மாசி மாத பிறையிலே கம்பம் நாட்டுவதிலிருந்து இந்நிகழ்வு ஆரம்பமாகின்றது. இரவு தொடங்கி விடியும் வரை இக்கூத்து நடைபெறும்-மன்மதன், ரதிதேவி, இந்திரன், சிவன், நாரதமுனி, ஆகிய பாத்திரங்கள் முக்கியமாக இடம்பெருகின்றன. அழகிலே சிறந்து விளங்கும் மன்மதனையும் ரதிதேவியையும் பற்றிய கதையாகவே இது விளங்குகிறது.

திருமணம் என்னும் பந்தத்துள் புகுந்து சீரிய முறையில் வாழ்க்கை நடாத்தி வருகின்றனர் ரதியும் மன்மதனும். அவர்களின் இன்ப வாழ்க்கையை காண சகிக்காத இந்திரன் மன்மதனை அழைத்து சிவனுடைய தவத்தை கலையச்செய்யுமாறு அனுப்ப முயல்கின்றான். அவ்வாறு இந்திரன் கூறியதும் மன்மதனும் அதற்கு உடன் படுகிறான். ஆனால் ரதிதேவியோ வேண்டாம் என தடுக்கிறாள். அவளின் புலம்பலை பின்வரும் பாடலின் மூலம் காணக்கூடியதாக உள்ளது.

"ரதியாள் சித்தரே என் கணவா! நீங்கள் மனம்
மாறுபட்டு விட்டீர்களே என்னை அந்தரத்தில்
விட்டு விட்டு போகிறீர்களே"

ரதி எவ்வாறு எடுத்துக்கூறியும் புலம்பியும் மன்மதன் கேட்கவில்லை, "நான் செல்லா விட்டால் அரசனான எனது திறமையை இப்பூமி தூஷிக்கும், சிரிக்கும் எனக்கு இப்பூமியில் மதிப்பு இருக்காது, கண்மணியே கண்ணிமை பொழுதுக்குள் நான் திரும்பி வருவேன்-எனக்கு மனம் பதை பதைக்காமல் விடை கொடுத்தருளும் தாயே என கேட்கின்றான், இவ்வாறு மன்மதன் கூறினாலும் ரதி தனது மன்னவனை போக வேண்டாம் என்றே கெஞ்சுகிறாள்-என்னதான் கூறினாலும் மன்மதனால் மனதை மாற்றிக்கொள்ள முடியவில்லை-தான் எப்படியும் செல்வதாக நினைத்து செல்கின்றான்.

மன்மதன் சென்று தவத்தை அழிக்கமுற்பட்டு இறுதியில் மரணத்தை தழுவுகின்றான்-இதனை செவியுற்ற கண்ணிகையின்மனம் எவ்வாறு இருக்குமென எல்லோரும் அறிய முடியும், துக்கம் தாளமாட்டாமல் கதறி, கதறி அழுகிறாள் தன்னைச் சூழ இருந்த சேடிப்பெண்கள், தாதிப்பெண்கள் என்போரிடம் கூறி பதறினாள் இதனால் அவள் உடல் மெலிந்து சோகமுற்று கிடக்கலாயினாள் இறுதியாக சிவனிடம் செல்கிறாள்.

"வையகத்தில் நானிருந்து
ஐயையோ என்ன செய்வேன்
மாண்ட மதனை எழுப்பி
ஆண்டவனே தாருமையா"

என்று சிவனிடம் முறையிட்டு மன்மதனை உயிருடன் எழுப்பித் தரும்படி வேண்டுகிறாள்-சிவனும் ரதிதேவியாருக்கு மட்டும் மன்மதன் உருபியாகவும் மற்றவர்களுக்கு அருபியாகவும் வாய்த்திட எழுப்பித் தருகின்றார்-மங்களமாக நீங்கள் சென்று இங்கிதமாக வாழ்கவென்று வாழ்த்துக் கூறியதும் விடைக் கொடுத்தார்.

ஆகவே மேற்கூறப்பட்ட விடயங்களே காமன் கூத்து என்னும் கூத்தில் இடம் பெறுவனவாகக் காணப்படுகின்றன. ஏனைய பிரதேச மக்களும் இக்கூத்தினை விரும்பிப் பார்ப்பார்கள், தொன்று தொட்டு வரும் இக்கதையம்சம் என்றும் எம்மிடையே மறையாது காணப்படுவது எமக்கு கிடைக்கும் பெறும் வாய்பாகவே காணப்படுகின்றது. மன்மதன், ரதிதேவி ஆகியோரின் அழகினை எடுத்துரைப்பதுடன். மன்மதனின் வீரக்குணமும் போற்றப்படுகின்றது. சிறந்த மன்னன் மற்றவர்களின் ஆசையை நிறைவேற்றக் கூடியவன் என்பதை இதன் வாயிலாக எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

ரதியின் வாயிலாக கணவனை மதிக்கும் தன்மையையும் அவனின்றிய வாழ்வு என்பது மகிழ்ச்சி கரமாக அமையாதது என்று வருந்துதலையும் எடுத்துக்கா்டடப்படுகின்றது. எனவே மன்மதன், ரதி திருமணம் முதல் மன்மதன் சிவனின் தவத்தை கலைக்க சென்று இறந்தபோதிலும் பின் ரதி சிவனிடம் சென்று புலம்பி மன்மதனை வேண்டும் வரையிலான பகுதிகளே சிவன் மன்மதனுக்கு உயர் கொடுத்தலும் வரையிலான பகுதிகளே காமன் கூத்தினுள் அடங்கும் இவ்வாறு மலையக மக்களின் கூத்தாக பிரதிபலிப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது இந்த காமன் கூத்தில் முக்கியமான ஒரு நிகழ்வாக உயிர்ப்பிக்க வேண்டுதலும் அமைகிறது தப்பு என்ற தோல்வாத்தியம் ஒவ்வொரு காட்சிக்கும் ஒவ்வொரு விதமாக அடிக்கப்படுகின்றது. இது ஒரு உணர்ச்சி வெளிப்பாட்டினை படம் பிடித்துக்காட்டுவதாக அமைந்துள்ளது, இவ்வாறே காமன் கூத்தின் சிறப்பம்சம் காணப்படுகின்றது.



# முற்றுப்புள்ளியில் ஓர் ஆரம்பம்

(சிறுகதை)

**பொ. சுசீலா**



ஆதவன் தன் கதிர்களை உள்ளடக்கும் அழகிய மாலை வேளையில் அந்த அநாதை இல்லத்தில் அடைக்கலம் பெற்றிருந்த சின்னஞ்சிறார்கள் தங்களை மறந்து குதூகலத்துடன் ஓடியாடி விளையாடிக்கொண்டிருப்பதை கண்காணித்தவண்ணம் உலாவிக்கொண்டிருந்த, இல்லத்தின் பொறுப்பாளரும் ஆரம்பக்கர்த்தாவுமான ராகேஷ்ரட்ணவேல் அந்த புளியமரத்தடியில் புற்தரையின் மீது அமர்ந்தவண்ணம் சிந்தனையில் ஆழ்கிறார். சிந்தனையில் ஆழ்ந்த அவர் தன்னை மறந்து கடந்த கால, தான் கடந்து வந்த வாழ்க்கைப் பாதையின் நினைவுகளை மீட்டி நடந்துச் செல்கிறார்.

ஆம், இயற்கையன்னை அளித்த அழகியக் காட்சிகளால் சூழப்பட்ட அந்த அழகிய ஊரில் தனக்கென ஓர் உயர்வான இடத்தை தக்க வைத்ததுதான் திருவாளர் ஜோசப் நவநீதனின் குடும்பம். திருவாளர் ஜோசப்பிற்கு அன்பிற்கும், பண்பிற்கும், அறிவிற்கும், அழகிற்கும் உரியவளான மனைவி சிராணி ஜோசப். இவர்களிருவரின் பாசப்பிணைப்பின் படிவமாக உலகில் உதித்தவள் தான் சுகிர்தா. குழந்தைப் பராயம் முதலே சுகிர்தாவின், நற்பண்பிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் அயராது உழைத்தாள் சிராணி. திருவாளர் ஜோசப்பும் ராகேஷ்ரட்ணவேலின் தந்தையும் நெருங்கிய நண்பர்களாவார்கள்.

இவ்வாறிக்கையில் சுகிர்தாவோ பள்ளிப்படிப்பை முடித்து விட்டு "கம்பியூட்டர் கிளாஸ்" சென்றுக் கொண்டிருந்தாள். ஆனால் அவளின் மனதில் ஓர் இலட்சியம் வளர்ந்துக் கொண்டிருந்தது. அது யாதெனில் தான் ஒரு சிறந்த சமூக சேவகியாக வர வேண்டும் என்பதே ஆகும். ஒருநாள் சுகிர்தா தன் குடும்பத்துடன் நெருங்கிய நண்பரான அருட்சகோதரி மெட்டில்டாவிடம் தன் எண்ணத்தைக் கூறினாள். "சிஸ்டர் உங்கக்கிட்ட கொஞ்சம் பேசனும், என்னம்மா விஷயம் எதுவும் பிரச்சினையா? சொல்லுமா, சரி வா அந்த மரத்தடியிலிருந்து பேசுவோம் சுகிர்தா சிஸ்டரை பின்தொடர்ந்து மரத்தடியில் அமர்ந்தவுடன் சிஸ்டர் எனக்க உங்களைப் போல ஆக ஆசையாயிருக்கு இந்த ஆசை நிறைவேற நீங்கதான் உதவி செய்யனும் சிஸ்டர் புன்னகைத்தவாறே உண்மையாகவா சுகிர்தா சொல்ற! சரி என்னைப் போல இந்த உடுப்பு போட்டு இப்படியொரு மடத்திற்கு பொறுப்பாக இருக்கனும். அதுதானே உன் ஆசை ஐயோ! இல்ல சிஸ்டர், உங்களைப்போல அன்பும் பண்பும் நிறைந்த நல்ல தியாக மனப்பான்மையுள்ள, நன்நடத்தையுள்ள, பிறர் சிநேகமுள்ள சேவையாளராக திகழனும்; என் வாழ்நாள் முழுவதும், சமூக அவலங்களினாலும்

அவஸ்தைகளினாலும் போரின் அகோரபிடியினாலும் பெற்றோரை இழந்தும் பெற்றோர்களால் கைவிடப்பட்டவர்களுமான சின்னஞ்சிறார்களை பராமரித்து அவர்களின் உயர்வுக்காக உழைக்கணும். இதுதான் சிஸ்டர் என் லட்சியம்.

சரிம்மா சுகிர்தா உன் நல்லெண்ணத்திற்காக உன்னை வாழ்த்துகிறேன். ஏன்னா, இக்கால சூழலில் வாழும் இளம்பருவத்திலிருக்கும் உனக்கு இப்படியொரு எண்ணம் பிறந்ததுக்காக முதலில் கடவுளுக்கு நன்றி சொல்லனும். ஆனால் சுகிர்தா இதில் நீயும் நானும் தனியாக முடிவெடுத்து ஒன்னும் பண்ணமுடியாது. உன் அம்மா அப்பாவோடு கதைத்து நல்ல முடிவாக எடுக்கலாம் சரியா. ஏன்னா, இந்த வயதில் எல்லா ஆசைகளும் வரும்; சிலவேளைகளில் உன் மனது வேறொன்றில் விருப்பப்படலாம், அதனால் இந்த வயதில் எடுக்கும் எந்தவொரு முடிவும் திடமானதாக இமருக்கனும், அப்பத்தான் வாழ்க்கையில் வரும் எல்லா சவால்களுக்கும் முகம் கொடுத்து வாழ்க்கைப் பாதையில் இடறினாலும், சறுக்கினாலும் சமாளித்து, விழுந்தாலும் உடனே எழுந்து நிற்கலாம். வாழ்க்கைப் பயணமும் உறுதியானதாக இலட்சியப் பூர்வமாக அமையும்; சரியா, இல்லாவிட்டால் வரும் எல்லா ஆசைகளுக்கும் இடம் கொடுத்து வாழ்க்கைப் பயணத்தில் அலைக்கழிக்கப்படுவோம். அதனால் நீ நன்றாக யோசித்து எடுக்கும் முடிவை திடமானதாக எடு. நானும் அப்பாவுடன் இது விடயமாக பேசுகிறேன். சந்தோசமாக போய் வாம்மா. ஓ. கே! விஷ் யு ஆல் த பெஸ்ட்.

சுகிர்தா சிஸ்டரிடமிருந்து விடைபெற்று வீட்டிற்குச் சென்றாள். அன்றிலிருந்து ஒரு விதமான புத்துணர்வுடன் தனது செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தாள். ஒரு நாள் மாலை வகுப்பு முடிவடைந்து பஸ்சிற்காக நண்பிகளுடன் பஸ் ஸ்டாண்டை நோக்கி சென்றுக் கொண்டிருக்கும் வேளையில் திடீரென அவள் முன் 'ஓர் கார்' வந்து நின்றது. காருக்குள்ளிருந்த அழகிய வாலிபன் "ஹாய் சுகிர்தா எப்படியிருக்கிற, என்னை உனக்கு நினைவிருக்கா? எனக்கென்றால் உன்னை நல்லாவே நினைவிருக்கு என்ன யோசிக்கிற? நான் தான் உன் வாழ்க்கைத் துணைவன் ராகேஷ்!..." சுகிர்தாவால் அடுத்து ஒன்றும் பேசமுடியாமல் பஸ்சேறி வீடு வந்து சேர்ந்தாள்.

அன்று இரவு அவளால் சாப்பிடவும் விருப்பமின்றி கட்டிலில் சாய்ந்தவாறு என்னத்திமிரிருந்தால் என்னிடம் அவன் அப்படிக் கூறியிருப்பான் ராஸ்கல் என்று மனதில் ஏசியவாறு அவன் யாராக இருப்பான் என்று யோசித்தவண்ணமிருக்கையில், சுகிர்தாவின் அப்பா வந்தார். அவர் சாப்பிட அழைக்கவே மனமின்றிச் சென்று சாப்பிட்டு முடித்தவுடன், சுகிர்தா சிஸ்டர் இன்று என்னுடன் கதைத்தாங்க, அவங்களுக்கும் நான் பதில் சொல்லி விட்டேன்.

நீ ஒன்று மட்டும் நினைத்துக் கொள் எம்மிடமிருக்கும் சொத்துக்கள் ஏழு தலைமுறைகளுக்கும் போதுமானவை. யாருக்காக நான் இவ்வளவும் சேர்த்தேன். உன்னுடைய அந்த லட்சியம் எல்லாம் நமக்கு சரிபடாது. என் பேச்சை மீறி நீ ஒரு அணுவும் அசைய முடியாது. சரியா. நாளைக்கு மாப்பிள்ளை வீட்டுக்காரவங்க வாராங்க ரெடியா இரு சரியா. வேறு யாருமல்ல என் நெருங்கிய நண்பரின் மகனைத்தான் பார்த்துள்ளேன் சரியா. அதனால் உன் முடிவை மாற்றிக் கொண்டு போய் சந்தோசமாய் நித்தைரைக் கொள் அப்பாவிடம் மறுத்துப் பேசமுடியாடாலும் அம்மாவிடம் எவ்வளவோ மன்றாடியும் விடை பூச்சியமே.

வெந்தப் புண்ணிற்கு மீண்டும் வேதனையைக் கூட்டுவது போல அடுத்த நாள் மாப்பிள்ளை வீட்டினர் வந்தனர். அம்மாவும் அப்பாவும் சந்தோசத்துடன் ஓடி ஓடி அவர்களை வரவேற்று உபசரித்தனர். சுகிர்தாவோ ஒன்றிலும் பிடிப்பற்றவளாக வாடிய கொடி போல சோர்வுற்றிருந்தாள். அம்மா அழைத்தவுடன் விறாந்தைக்கு வந்தவள் அதிர்வுற்றாள். ஏனென்றால் அங்கு வந்திருந்தவர்கள் ராகேசின் குடும்பத்தினரே. சுகிர்தாவின் எவ்வித விருப்பு வெறுப்புக்களையும் எதிர்பாராது பேச்சு வார்த்தைகள் இனிதே நிறைவுற்றன.

அந்த மாதமே ராகேஷ், சுகிர்தா இவர்களின் திருமணம் பெரிய நட்சத்திர ஹோட்டலில் மிகவும் கோலாகலமாக நடந்தேறியது. மறுநாள் சுகர்தாவின் பெற்றோர் அவளுக்கான அனைத்து சீமந்தங்களுடன்மாப்பிள்ளை வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். அவ்வேளையில் சிஸ்டர் டெம்டில்டா சுகிர்தாவிடம் சுகிர்தா உனக்கு நடந்தவற்றை மறந்துவிட்டு, நீ புகுந்துள்ள இப்புதிய வாழ்பில் புரட்சிப் பெண்ணாக, இலட்சிய நாயகியாக பலராலும் போற்றப்படுமளவிற்கு பண்புள்ளவளாக வாழனும் சரியாம்மா என்றார். அவ்வறிவுரைகளைக் கேட்ட சுகிர்தா நிச்சயம் சிஸ்டர் என் வாழ்வில் இணைந்துள்ள ராகேசின் சிதைவுகளை சீராக்குவதே என் வாழ்வின் இலட்சியமாக கொண்டு உழைப்பேன். அம்மா நீங்கள் ஒன்றும் யோசிக்க வேண்டாம் நான் வருகிறேன் என்று விடைபெற்று ராகேசுடன் சென்று அவள் வாழப்போகும் வீட்டில் பாதம் பதித்தாள்.

அன்று ராகேஷ் சுகிர்தாவிடம் சுகிர்தா உனக்கு என்னை பிடிக்கவில்லைத்தானே. உன் அப்பாவிற்காகத்தானே என்னை முடித்தாய் என்று கேட்டான். சுகிர்தா அதற்கு பதிலாக ஆமாம், இக்கலியாணத்தில் எனக்கு இஷ்டமேயில்லை, என் இலட்சியப் பாதையே வேறு, என்று தனது இலட்சியத்தை அவனிடம் கூறினாள். அதைக் கேட்ட ராகேஷ் சிரித்து விட்டு இப்படியும் பைத்தியக்காரத்தனமான எண்ணம் உனக்கிருந்ததா? கடவுள் நமக்கு தந்த வாழ்வை சுகபோகமாக அனுபவிப்பதை விட்டு, சமூக சேவையாம், சரி

இந்த திருமணம் என்னுடைய பிடிவாதத்தினால்தான் நடந்தது தெரியுமா? உன் அப்பாவின் மனதில் எவ்வளவு அளகாக இடம்பிடித்துவிட்டேன். அப்படி பவ்வியமான மாப்பிள்ளையாக நடந்துக் கொண்டேன் அவ்வளவுதான், நீயும் என்னைப்பற்றி போக போக புரிந்துக் கொள்வாய். என்ன யோசிக்கிறாய்? ஒன்றுமில்லை, எப்படியோ என் லட்சியப் பாதையை மாற்றி உங்கள் விருப்பத்தை நிறைவேற்றிவிட்டீர்கள். அதனால் உங்கள் பாதையை உயர்வாக்க நான் உங்களுடனிருந்து உழைப்பேன். என்றாள் சுகிர்தா.

இவ்வாறாக இவர்கள் வாழ்க்கைப் பாதையில் இணைந்து சென்றுக்கொண்டிருக்கும் போது திடீரென புயலடிக்க தொடங்கியது. அன்று தான் சுகிர்தா ராகேசின் சுயருபத்தை கண்டாள். அவன் அன்று வீடு வரும் போது இரவு 12.00 மணி. கதவை திறந்த சுகிர்தா அதிர்வடைந்தாள். நன்றாகக் குடித்து வெறித்து வந்து நின்றான். என்னடிப் பாக்கிற இன்னும் போகப் போக என்னை நல்லா புரிஞ்சுக்குவ, நீ நினைச்சியா உன் அழகில் மயங்கி உனக்கு பாதபூஜை செய்துக்கிட்டிருப்பேன்.... நோ.. நோ... நான் என்ன செய்தாலும் நீ பொறுத்துத்தான் போகனும் சரியா.. என்னடி நீ சுத்த பட்டிக்காடாக இருக்கிற, இப்படி உடுத்துறது நல்ல மார்டானா உடுத்த தெரியாதா? நாளைக்கு கிளப்பிற்கு கூட்டிட்டு போறேன் அப்பபார் உன்ன மாதிரி பொண்ணுக எல்லாம் எப்படி அழகா இருக்காங்கனு அப்ப சரி திருந்து என்று கூறியவுடன் சுகிர்தா கனிவுடன் எவ்வளவோ எடுத்துச் சொன்னாள், அவனால் இழைக்கப்பட்ட அனைத்து துன்பங்களையும் சகித்துக் கொண்டாள், காரணம் அவனின் மனமாற்றத்திற்காக.

இருந்தாலும் சுகிர்தாவின் எந்தச் சொல்லுமே ராகேசிடம் எடுபடவில்லை. தொடர்ந்தும் நண்பர்களுடன் சேர்ந்து மது, மாது, சூது என்பவற்றிலேயே வேலை நேரம் போக மீதி நேரத்தை செலவிட்டான். இறுதியாக சுகிர்தா அவனின் பெற்றோரிடம் முறையீடு செய்தாள். ஆனால் அவர்கள் அதை நம்பவில்லை தங்கள் பிள்ளை மீது வீண்பழி சுமத்துகிறாள்என்று அவளையே குற்றம் சாட்டினர். ராகேஷ் தன் பெற்றோரிடமும் சுகிர்தாவின் பெற்றோரிடமும் எவ்வித குறைவுமின்றி நல்ல பெயருட ன் நற்பண்புள்ள பிள்ளையாகவே நடந்தான். எல்லோரும் சுகிர்தாவிலேயே சந்தேகித்தனர். ஏனென்றால் இவளுக்கு அவனுடன் வாழப் பிடிக்காததன் விளைவாகவே இவ்வாறு கூறுகிறாள் என்று. ஆனால் சுகிர்தாவோ தனது கணவனின் பாதையை மாற்ற எவ்வளவோ முயற்சித்தும் இறுதியாக அவளுக்கு கிடைத்தது சித்திரவதைகளும், துயரங்களும் நிறைந்த அவஸ்த்தையே ஆகும்.

இருப்பினும், கணவனால் கஸ்டப்படுத்தப்பட்டும், மாமனார் மாமியாரால் நிந்திதக்கப்பட்டும் அடக்கு முறைகளாலும் அநீதிகளாலும் அவலப்படுத்தப்பட்ட

சுகிர்தா பலவாறும் கவலைக்குள்ளாகி, தன் வாழ்வில் நிகழ்ந்து வரும் நிஜமான நிஜங்களை எண்ணி அடிக்கடி கண்ணீர் வடித்த போதும், சிஸ்டர் மெட்டில்டா அவள் முன் தோன்றி அவளை திடப்படுத்திக கொண்டேயிருந்தாள். இதனால் தான் புகுந்த வீட்டினரால் எவ்வளவோ நிந்திக்கப்பட்டப் போதும் தன் கணவனின் சுகபோக வாழ்வின் சுபாவங்களை சகித்துக் கொண்டும் பொறுமையின் பெட்டகமாக தனது நற்பண்புகளினாலும் பண்பான வார்த்தைகளினாலும் அவர்களைக் கவர முறற்பட்டாள்.

ஆனால், நாளுக்கு நாள் ராகேசின் நடத்தையின் கொடூரங்கள் அதிகரித்தனவே தவிர குறையவில்லை. இதனால் உறுதிதளரிய சுகிர்தா நோய்வாய்ப்பட்டாள். பாவம் அந்த பெண்மையின் மென்மை உள்ளம் எவ்வளவு தான் தாங்கும். ஆனால் அவளை அனைவரும் அவமதித்த போதும் அவர்களை அன்புடனே அரவணைத்த அவளை நோயில் வீழ்ந்தவுடன் கவனிப்பாரில்லை. எனவேதான் சுகிர்தா கடைசியில் கவலை எனும் நோயின் அதி உன்னத நிலையை அடைந்து உடலில் சக்கியற்று உள்ளத்தில் உறுதியற்றிருக்கும் வேளையில், ராகேசினால் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டாள். இரக்கத்தினால் அல்ல பழிதன்மீது விழுந்துவிடும் என்ற பயத்தினால். அன்று தான் அவளின் நிலையை பெற்றோருக்கும் அறிவித்தான்.

நிலையறிந்த சுகிர்தாவின் தாய் உள்ளம் பதைபதைக்க, துடிதுடிக்க ஓடி வந்தாள். மகளின் நிலையைக் கண்ட பெற்றோர் துடித்தனர். தப்பு செய்து விட்டோமோ என்று அவதியுற்றனர். ஆனால் அமைதியாக இருந்த சுகிர்தா பேசத்தொடங்கினாள். அம்மா ஏன் அழுறீங்க, சந்தோசப்படுங்க ராகேசின் லட்சியம் இன்றுடன் நிறைவேறுகிறது. என்னை பழி வாங்க வேண்டும் என்பதுதான் அவரின் லட்சியமாம். அவர் என்னிடம் ஒருநாள் விருப்பம் கேட்டு லெட்டர் தந்தார். அதனை நான் அந்த இடத்திலேயே கிழித்தெறிந்து விட்டு வந்தேன். தன் அந்தஸ்து தெரியாமல் நண்பர்களின் முன் அவமதித்ததன் பயன் தான் இன்று எனக்கு கிடைத்துள்ளது. இதை நான் சந்தோசமாக ஏற்றுக்கொள்கிறேன். என்று கூறி ராகேசைப் பார்த்தாள் அவனின் கண்கள் குளமாகி விழியோரங்களில் நீர் வடிந்தவண்ணமிருந்தன.

அவன் திடீரென சுகிர்தாவின் கரங்களைப் பற்றி ப்ளீஸ் சுகிர்தா என்னை மன்னிப்பாயா? நான் பாவி கொடூரன்! துரோகி, நீ என்ன தண்டனை கொடுத்தாலும் தாங்கிக் கொள்வேன் என்று கதறினான். ஆனால் அவள் அவ்வாறு தண்டிப்பவள் அல்லவே, அவள் ராகேசிடம் எனக்காக ஒரு உதவி செய்வீங்கலா? என்னம்மா சொல்லு... வீணான அற்ப சுகபோகங்களில் செலவிடும் உங்கள் பணத்தில் ஒரு அநாதை இல்லத்தை ஆரம்பித்து அவலங்களினால்

அவதியுரும் சிறார்களுக்கு அடைக்கலம் தருவீர்களாக? என்று கேட்டவண்ணம் கண்களை மூடினாள். ஆம்! சுகிர்தா இவ்வுலகை விட்டு பிரிந்ததைக் கண்ட ராகேஷ் சுகிர்தா நிச்சயமாக இனிதான் நான் உனக்காக வாழப் போகிறேன். உன் இலட்சியத்தை நிறைவேற்றும்இலட்சியப் புருஷனாக, ஆம் அன்று அவன் எடுத்த தீர்மானமே இன்று நடாத்தும் அநாதை இல்லம்.

தன் வாழ்வின் பயணத்தில் நீண்ட தூரம் முன்னோக்கிச் சென்ற ராகேஷ் திடீரென அழுகை சத்தம் கேட்கவும் எழுந்துப் பார்த்தார். அங்கே விளையாடிக் கொண்டிருந்த சிறுமி விழுந்து எழ முடியாமல் அழுதுக்கொண்டிருந்தாள். உடனே ஓடிச் சென்று அவளை தூக்கி அணைத்துக் கொண்டார். ஆம்; அச்சிறுமியும் சுகிர்தாவின் பெயர் பொறிக்கப்பட்ட ஓர் சுகிர்தாவே.

(முற்றும்)



# கர்நாடக சங்கீதம்

செல்வி. எஸ். பேரின்பநாயகி

ஸங்கீத சாஸ்த்ர ஞானமு
ஸாருப்ய சௌக்யத்மே மனஸா

என்கின்றார் கர்நாடக சங்கீதத்தின் பூர்வாசிரியரான ஸ்ரீதியாகராஜஸ்வாமி அவர்கள். அதாவது ஸங்கீத சாஸ்த்திர ஞானம் ஸாருப்யம் என்னும் பேரின்பத்தைத் தரும். தொன்று தொட்டு வந்துள்ள சதுஷ்ஷஷ்டி கலைகள் எனப்படும் அறுபத்து நான்கு கலைகளில் ஸாமான்னிய கலைகளும், லலித கலைகளும் சேர்ந்துள்ளன. லலித கலைகள் நம்முடைய இருதயத்தைத் தொட்டு மேலான உணர்ச்சியையும், கலை இன்பத்தையும் உண்டாக்கி நம்மைப் பரவசப்படுத்தும் தன்மை வாய்ந்தவை.

லலித கலைகளான கவிதை, ஓவியம், சித்திரம், சிற்பம் என்பவைகளுள் முதன்மை பெற்றுத் திகழ்வது சங்கீதமே. ஏனைய கலைகள் கண்களால் மட்டுமே பார்த்து இன்பம் பெறக்கூடியன. ஆனால் சங்கீதம் காதால் கேட்டு இன்பம் பெறக்கூடியதாகையால் இது சிரவண கலை எனவும் கூறப்படுகின்றது. சங்கீதம் செவிக்கு இன்பமூட்டும் கலை என்பதால் த்வனிகளைப் பற்றிய கலைகளின் மிக்க மேன்மையான கலையாகும். மனிதர்களுக்கு மட்டுமன்றி பண்டிதர்கள், பாமரர்கள், விருத்தர்கள், பாலர்கள், மிருகங்களும் இன்பத்தைத் தரக்கூடியது சங்கீதமாகும்.

சங்கீதத்தைப் பயில்வதனால் அன்பு, அடக்கம், பக்தி, நட்பு, மனத்திருப்தி, சாந்தி, அறிவு, புத்திக்கூர்மை கற்பனைத்திறன், ஞாபகசக்தி, நல்லொழுக்கம் போன்ற நற்குணங்கள் விருத்தியாகின்றன. பல தேசத்து மக்களை ஒருங்கு சேர்க்கும் சக்தியும் உலக ஐக்கிய பாவத்தையும் உருவாக்கும் சக்தியும் சங்கீதத்திற்கே உண்டு. இம்மைச் செல்வங்களினால் உண்டாகாத ஒரு மனத்திருப்தியும் பேரின்பமும் ஸங்கீதத்தினால் உண்டாகும். ஒரு தேசம் எல்லா விடயத்திலும் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்திருக்கலாம். ஆனால் அத்தேசத்தில் சங்கீதம் பயில்வதற்கும் உத்தமமான சங்கீதத்தைக் கேட்பதற்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போனால் அத்தேசத்து மக்கள் மனச்சாந்தி இல்லாமல் அதிருப்தியுடன் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். பண்டைக்கால இசைப்பூர்வாசிரியர்கள் ஸப்தஸ்வரங்களை முறையே

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குரல் | - | ஸ | உழை | - | ம |
| துத்தம் | - | ரி | இளி | - | ப |
| கைக்கிளை | - | க | விளரி | - | த |
| | | | தாரம் | - | நி |

என வகுத்துள்ளார்கள் சமஸ்கிருதத்திலிருந்து கர்நாடக சங்கீதத்தை இனிய இசையுடன் பாடுவதற்கு ஏற்றாற்போல் மாற்றியது எமது தமிழ் மொழிதான். அகம்பாவம் என்னும் துர்க்குணத்தைப் போக்கி நற்குணங்களைப் பெருக்கி ஒருவனை ஜனசமூகத்திற்கு உருவாக்கக்கூடிய சக்தி சங்கீதத்திற்கே உண்டு. ஸங்கீதம் பயில்பவருக்கு அழகான வசீகர முகவெட்டும் கவர்ச்சிகரமான தோற்றமும் உண்டாவதோடு தேஜஸ்தம் உண்டாகும். ரஸம் அல்லது உணர்ச்சியை உண்டாக்கி கானரசம், நவரசத்தை ஏற்படுத்துவது சங்கீதமே. எல்லா சங்கீதங்களுக்கும் பொதுவான ஸரிகமபதநி என்னும் ஸப்தஸ்வரங்களைக் கொண்ட சங்கீதம் ஒரு நினகரற்ற கலையாகும். கானம் என்பது ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய கலை. சுருதியை அனுசரித்து காலப்பிரமாண சுத்தம் வழுவாது பாடுவதே கானம். சமஸ்கிருதத்திலே

சிசுர்வேத்தி பசுர்வேத்தி வேத்தி கானரஸம் பணீ

என்பதற்கேற்ப குழந்தையும், பசுவும் ஸர்ப்பமும் கான ரஸத்தை உணர்கின்றன. சங்கீதத்தை காந்தர்வ வேதம் என்றும் கூறுவர். கடவுள் வழிபாடு செய்வதற்கும் கடவுளை அறிவதற்கும் சங்கீதம் பிரதான ஸ்தானமாகும். இக்காரணம் பற்றயே சங்கீதத்தை ஒரு வித்யை எனப் பெரியோர்கள் கூறுவர். கடவுள் நாத பிரம்மமாக விளங்குகின்றார்கள்.

ஏழிசையாய் இசைப்பயனாய் ... என்று தேவாரத்தில், சுந்தரமூர்த்தி நாயனார் கடவுளைப் பற்றிப் பாடியிருப்பது கவனிக்கத்தக்கது. கடவுளை அடைவதற்கும் ஸங்கீதம் இனிமையானதும் சுலபமானதுமாகும். இது ஒரு தெய்வீகக்கலை. சிவபெருமான் கையில் டமருகமும், கண்ணபிரான் கையில் குழலும், ஸரஸ்வதி தேவியின் கையில் வீணையும் இருப்பதில் இசையின் மகத்துவம் வெளிப்படுகின்றது.

மனிதனுக்கு ஈசன் அருளிய குரல் பேசுவதற்கு மட்டுமன்றி பாடுவதற்கும் கூட என்பதை உணர வேண்டும். பாடும் போதுதான் குரலின் முழுப் பயனையும் அடைய முடியும். கைவிரல்களும் இசைக்கருவிகளைப் பயில்வதற்காகவே வித்தியாசமான நீளங்களுடன் அமைந்திருக்கின்றன. இதுபோன்று மனித தேகத்திலும் இசை சம்பந்தமான பல தத்துவங்களைக் காணலாம்.

| | | |
|---|---|---|
| குரல் | - | காற்று வாத்தியம் |
| காது | - | தோல் வாத்தியம் |
| உட்காது | - | நரம்பு வாத்தியம் |

என்ற அமைப்பிலும் காணப்படுகின்றது ஸங்கீதம் பயிலாத ஒருவன் இவ்வுலகில் இயல்பாக தனக்கு கிடைக்கக்கூடிய ஓர் அரிய கலை இன்பத்தை வீணாக இழக்கின்றான். சங்கீதமானது தமிழோடு மட்டுமன்றி சைவசமயத்தோடும் ஏன் விஞ்ஞானத்தோடும் தொடர்புபட்டு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. உத்தமமான சங்கீதத்தை நாம் கேட்கும் போது உட்காதிலுள்ள துல்லியமான நரம்புகளுக்கு உணர்ச்சி உண்டாகி அதன் மூலம் தெய்வீக உணர்ச்சி ஏற்படுகின்றது. இதனாலேயே திருவள்ளுவர் செவிச் செல்வத்தைப் புகழ்ந்து

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் - அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

என பாடியிருக்கின்றார். திருஞான சம்பந்தர் முதன் முதலில் பாடி அருளிய தோடுடைய செவியன் என்னும் தேவாரத்தில் சிவபெருமானின் செவியை முதலில் கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது. ஓர் இனிமையான இசையைக் கேட்கும் போது நாம் இவ்வுலகக் கவலைகளை மறக்கின்றோம். எத்தேசத்தவர்களையும் ஒருவன் தன் கானத்தால் மகிழும்படி செய்யலாம். அப்பாட்டின் பொருள் விளங்காதவர்கள் கூட இசையைக் கேட்டு மகிழலாம். கீதமானது இனிமையான ஸ்வரம், நல்லசுவை, அழகான ராகம், கவர்ச்சிகரமான வர்ண மெட்டு. மதுரமான வார்த்தைகள், அணிகள், ஒழுங்கு எனும் ஆறு இலட்சணங்களைக் கொண்டுள்ளது.

மகாபாரதத்தில் கூட சங்கீதக் காரர்களை யுத்தகாலத்திலும் கொல்லக் கூடாதென கூறப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. அதுமட்டுமன்றி பாடும் போது சுவாசப் பைகள் சுருங்கி விரிவடைவதால் சுவாசப்பைகளுக்கு வலிமை ஏற்படுகின்றது. நேர்த்தியான உடற்கட்டமைப்புக்கும் சங்கீதம் உறுதுணை புரிகின்றது. இப்படியான சங்கீதத்தை பண்டைக்கால தமிழ் மக்கள் பூர்வகாலத்தில் ஓர் உன்னதமான ஸங்கீதத்தை அப்பியசித்து வந்தார்கள். இவ்வம்சத்தை சிலப்பதிகாரம், புராதன தமிழிசை நூல்கள் என்பவற்றைப் பார்க்குங்கால் விளங்கும்.

மதுரமும் அழகும் நிறைந்த இந்த சங்கீதமானது வடக்கே விந்திய பர்வதத்தினாலும் மற்ற மூன்று திக்குகளில் சமுத்திரத்தினாலும் சூழப்பட்டுள்ளது. கர்நாடகம் என்பதற்கு கரை + நாடு + அகம் என்று பொருள் கூறுவது மிகப் பொருத்தமென்று இதனின்றும் தெளிவாகின்றது. மேலும் கர்நாடகத்திலிருந்து தோன்றிய சங்கீதம் கர்நாடக சங்கீதம் என்றும் பொருள்படுகின்றது.

இசை எனும் தேசம்
அது தனில் வீசும்
ஸ்வர மலர் வாசம்
அதுவே நம் சுவாசம்

# தென்னிந்தியாவிலிருந்து வந்த மலையக மக்களின் வாழ்விலேஒப்பாரிப்பாடல்கள் பெறும் முக்கியத்துவம்

செல்வி. இராஜகோபால் அனுராதா

மலையக மக்களின் வாழ்வியல் தமிழக கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டது. இவர்கள் 1820ம் ஆண்டு வாக்கில் தென்னிந்தியா என்றழைக்கப்படும் தமிழக மண்ணிலிருந்து இடம்பெயர்ந்து இலங்கை நோக்கி வந்தனர். இவர்கள் வருகைக்கான காரணம் தமிழகத்தில் பிரித்தானிய "ரியாட்வரி" யேயாகும். எதுவாகினும் வரிப்பலுவினால் ஏற்பட்ட வறுமையை நீக்கவே இலங்கை வந்தனர். இவர்கள் உறவுக்காரர்கள், நண்பர்கள், ஊர்ச் சூழலை மறந்து வனப்பிரதேசமான இலங்கையின் கண்டிப்பகுதிக்கு நடந்து வந்தனர். இப்படியான காட்டின் ஊடாக நடைபயணமாக வரும் போது தமது ஆன்மீக ரீதியான தெய்வ நம்பிக்கைகளை அதிகரித்துக் கொண்டு வந்தனர். அதாவது சாமிபார்த்தல், உடுக்கடித்தல், அவரவர் குல தெய்வங்களிடம் தன்னைப்பற்றியும் தன் பயணத்தைப்பற்றியும் முறையீடு செய்து கொண்டு வந்தனர். எனவே தெய்வீக வழிபாடு என்பன வரும் வழியிலே ஆரம்பமாகியது. இதன் வளர்ச்சியே நாட்டுக்கூத்து நாடார் பாடல்கள் என்பன.

இந்த நாட்டார் பாடல்களின் மொழி வழக்காற்றியல் இயற்கையானதாகவே காணப்படுகிறது. இவ்வியல்பு தென்னிந்திய கிராமங்களின் நிலையினை அப்பட்டமான மையமாக அமைந்திருந்ததை வரலாற்று இயலாளர்க்ள கூறுகின்றனர். பொதுவாக நாட்டுப்பாடல்கள் எழுதாத இலக்கியங்களாக அன்றாட மக்கள் பேசிய மொழியாகவே உள்ளது.

இந்த நாட்டுப்பாடல்கள் முழுக்க முழுக்க வாய்மொழி இலக்கியங்களாகக் காணப்படுவதுடன் பாடல்களின் கருப்பொருள்களாக உழைப்பு, வறுமை, துன்பம், நேசம், சோகம், பக்தி, தாலாட்டு, கோபதாபம், நமைச்சுவை, காதல் என்று பலதரப்பட்டவையாக இருக்கின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு சம்பிரதாய வாழ்வியல் பாடல்கள், தொழில் ரீதியான பாடல்கள், தமது தாய்தேசம் தொடர்பான பாடல்கள் என வகைபடுத்தலாம். இப்பாடல்களிலே சம்பிரதாயப் பாடல்களே பெறும் பங்கு வகிக்கின்றது என்று கொள்ளலாம். அதாவது திருமண வைபவங்களில் கலியாணப்பாடல்கள், குழந்தை தாலாட்டு பாடல்கள், மரண வீட்டில் ஒப்பாரிப்பாடல்கள் என்பன.

மலையக மக்களின் வாழ்வியலிலே இன்பமாக வாழ்வதிலும் பார்க்க துன்பமாக வாழ்வதிலே பெறும் பங்கு வகித்தது. இவர்கள் விடும் கண்ணீர் தேயிலைச் செடிக்கு உரமாகியது. நிர்வாகக் கெடுபிடிகள், தனது உறவுகளை பிரிந்த சோகம் வேலைப்பழு என்பவற்றை வெளியிடும் சாதனமாக இவர்கள்

ஒப்பாரிப்பாடல்களை வெளியிட்டனர். எனவே மக்களின் வாழ்விலே ஒப்பாரிபாடல்களும் பின்னிப் பினைந்தன.

ஒப்பாரிப்பாடல்கள் பெரும்பாலும் பெண்களாலே பாடப்படுகிறது. தன் கணவன், பெற்றோர்கள், சகோதரர்கள், பிள்ளைகள் ஆகிய தனது நேசத்திற்குரியவர்கள் இறக்கம் போது தனது சோகத்தை கண்ணீருடனும் கம்பலையுடனும் பாடல்களாக புலம்பல்களை வெளியிடுவர். இவர்களது பாடல்களில் தமது தாய்நாடாகிய தமிழகத்தை சுட்டிக் காட்டியே பாடுவதுண்டு.

ஒரு பெண்ணானவள் தனது நேசத்திற்குறிய கணவன் இறந்த போது தனது பிறப்பிடமான தமிழகத்தை வைத்து ஒப்பாரியிடுவதுண்டு. அதாவது கும்பகோணம், மதுரை, மாமாங்கம் ஆகிய ஊர்கள் வருவதுண்டு. ஒப்பரியிடும் போது.

"நான் அழுத கண்ணீரு
நந்த வனம் பாயும்
நாருத்த வேர் ஊணும்
கோட்டைக்கு கிழக்கே
கும்பகோணம் போய் பாயும்
கும்பகோணம் உள்ளவங்க
கொயிலா குத்த கொரை என்னாம்பாங்கு
மங்க அழும் கண்ணீரு
இஞ்சி வனம் பாயும்
எலுமிச்ச வேர் ஊணும்...
மதுரைக்கு கிழக்கே
மாமங்கம் போய் பாயும்
மாமங்கம் உள்வாங்க
மங்கைக்கு வந்த
மனக்கவலை என்னாம்பாங்க" இவ்வாறு ஒப்பாரி வைக்கப்படும்.

கணவன் வேலை செய்து கொண்டிருக்கிறார் என அவரது மனைவி எண்ணிக் கொண்டிருக்கிறாள். அப்போது கணவன் இறந்து விட்டான் எனும் செய்தியை கேட்டவுடன் கதறிக் கொண்டு இவ்வாறு ஒப்பாரியிடுகிறாள்.

பத்து பவுண் எடுத்து
படுக்க குறிஞ்சி செய்து
படிக்கிறியே என்றிருந்தேன்

ஓ.. படிப்பேடு இங்கிருக்க
பரமலோகம் சென்றிட்டீங்களே
எட்டு பவுண் எடுத்து
உங்களுக்கு இருக்க குறிஞ்சி செய்து
எறும் பேறு மாயிகையில
எழுதுறீங்க என்றிருந்தேன்
எழுத்தேடு இங்கிருக்க
எமலோகம் சென்றிட்டீங்களே

அடுத்ததாக ஒரு பெண் கணவன் இறந்த உடன், தனது தாய் நாடான தமிழகத்தையும் தனது சகோதரர்கள் குடிபுகுந்த சீனதேசம் போன்ற இடங்களையும் வைத்து தனது மனக்குமுறல்களை இவ்வாறு வெளியிடுகிறாள்.

சீமை சர விளக்கு
சிந்தா மணி விளக்கு
சீமையில காத்தடிக்க
சிந்து நதி என்ன விதம்
மருத சர விளக்கு
மங்கா மணி விளக்கு
மருதையில காத்தடிக்க
மங்கு நதி என்ன விதம்

கணவன் இறந்த பின்பு மனைவியானவள் தாய் நாட்டிற்கு செல்லும் போது அவளது பெற்றோர் உட்பட உற்றார், உறவினர்கள் கணவனின் மரணத்தை விசாரிப்பார்கள். அதுமட்டுமல்லாது கணவனுடன் தனது தேசத்திற்கு சென்ற போது உறவினருக்கு தேவையான பொருட்களை கொண்டு செல்வது வழக்கம், கணவன் வாங்கிக் கொடுக்கும் உடைகளை அணிவது வழக்கம் எனவே இவற்றைக்கருத்திக்கொண்டு மனைவி தனது ஆற்றாமையை வெளிப்படுத்திக் கொண்டு ஒப்பாரியிடுகையில்,

சீலை இருநூறு சிறுநகையும் முன்னூறு
சீலை எடுத்துடுத்தி எனக்கு வந்த
சீமான முன்னெடுத்தி
நாம் பெற்ற
சிறுசால பின்னெடுத்தி
நா பொறந்த சீமைக்கு போனாலும்
பட்டினத்தில் பொறந்த வங்க

V. THINAKARAN, TEL: 0
HOME LIB
KELLIEWATTE - PATAN

பட்டுவிலை மதிப்பெல்லாம்
எனக்கு பட்டு விலை தெறியாது இவ்வாறு காணப்படும்.

கணவர் ஓர் படித்தவராகவும் ஆங்கில அறிவுள்ளவராக இருக்கும் போது அவர் படிப்பில் வள்ளவர் என்றும் அவர் வாங்கித் தந்த பொருட்களை வைத்துக் கொண்டு இவ்வாறு ஒப்பாரி வைத்தல்.

பொன்னூசி நன்னாலி
எனக்கு வந்த புன்னியரே இங்கிலிசு
புன்னியர் உள்ள நாளையில
பொன்னும் நகை கிடைக்கும்
பொருத்த தோர் வார்த்தையுண்டு
புன்னியரே போய் மடிஞ்சா
பொன்னு நகையிமுள்ள
பொருத்த தோர் வார்த்தையில்ல
தங்கூசி நன்னாலி
எனக்கு வந்த தர்மரே இங்கிலிசு
தருமர் உள்ள நாளையில...
தங்க நகையும் தந்ததோர் வார்த்தையும்
தர்மர் போய் மடிஞ்சார்
தங்க நகையிமுள்ள
தந்ததோர் வார்த்தையுமில்ல

இவ்வாறு கணவன் இறந்தபோது மனையி தனது சோகங்களை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளும் முகமாக ஒப்பாரியிடுவாள்.

இவ்வாறான பாடல்கள் மிக, மிக எளிய நடையில் சந்தம் இல்லாமல் பாமரத் தன்மையுடன் காணப்படுவதாகும். மக்களின் உணர்வலைகளிலிருந்து வரும் உணர்வு பூர்வமான பாடல்களாகும். இவை ஏட்டில் எழுதப்பட்டவையல்ல இயற்கையிலேயே மக்கள் பாசத்திற்கு கட்டுண்டவர்கள். இவர்கள் பெற்றோர்களை தனது சகோதரர்களை விட்டு பிரிந்த தென்னகத்திலிருந்து மலையகத்திற்குவந்தவர்கள். ஒரு பெண்ணானவள் தனது பெற்றோர், சகோதரர்கள் இறந்த செய்தியை கேட்கும் போது. பிரிவின் துயரை ஆழ்த்த முடியாத போது மற்றவர்கள் எங்கே உங்கள் சகோதரர்கள் என்று கேட்கும் போது தனது சோகத்தை இவ்வாறு ஒப்பாரியாக வெளியிடுவாள்.

கூவாத சாவ கொண்டு
கும்பத்தில அரிசி கொண்டு
நா போன கோயிலுக்கு
கோயிலுள்ள சனமெல்லாம்
அம்மா உங்க கூட்டமெங்க எம்பாங்க
சத்தம் வைக்க சேவக் கொண்டு
சருவத்தில அரிசி கொண்டு
நா வாழ்ந்த சாவடிக்கு போனாலும்
சாவடியிலுள்ள சனமெல்லாம் எங்க எம்பாங்க
சனமெல்லாம் அந்த கரை
நீ பெத்த சண்டாலி இநத கரை

ஒரு பெண்ணின் பெற்றோர்க்ள தமிழகத்திலே இறந்து விட்டார்கள். மகளை பெற்றோர்கள் பஞ்சம் காரணமாகவே மலையகத்திற்கு கணவனோடு அனுப்பி வைத்தார்கள். ஆனால் இப்போது பஞ்சம் தீர்ந்து விட்டது. ஆனாலும் தனது பெற்றோர்களை பார்க்க முடியாத பெண் தனது ஆதங்கத்தை இவ்வாறு வெளியிடுகிறாள்.

நான் பொறந்த தேசத்திலே
கால வருதுனு கப்பலிலே ஏத்திவிட்ட
நான் பொறந்த தேசத்தில
பஞ்சம் வருதுனு நீ பரிசிலையே ஏத்திவிட்ட
நான் பொறந்த தேசத்தில
பஞ்சம் தெளிந்திருந்தும்
நான் வந்த பரிசு திரும்பலையே

தென்னிந்தியாவிலிருந்து திருமணம் முடித்துக் கொண்டு சிவனோபாயத்திற்காக வந்த பெண்ணின் பெற்றோர் இறந்து விட்டனர். அப்போது அவள் அவர்களை பார்க்க முடியாது. தென்னிந்தியாவிலே திருமணம் முடிந்து இருந்தால் இவ்வாறு நேராது என ஏங்கி பாடுவதாகும்.

பக்கத்திலே பொன் கொடுத்தா
பருப்பு கடன் கேப்பேனு
ஏ பத்தாறு தாண்டி
பசுங்கிளியே மாலையிட்ட
ஒங்க கண்ணுக்கு முன்னால பாஷ வருமுன்னா
ஒ பத்தாத்து தண்ணியில பாவ கொடிபடரும்
பத்து லெட்சம் பிஞ்சரங்கம் பாவ கொடியொதுக்கி
பத்து லெட்சம் பிஞ்சொதுக்கி ஒங்க கண்ணு முன்ன
ஒங்க பாஷ வந்து சேரலையே

அடுத்த பாடலடி இவ்வாறு அமையும்

அண்மையை பொன் கொடுத்தா
அரிசி கடன் கேட்பேனு
ஐயாறு தாண்டியல்லோ நீ பெத்த
அருங்கிளியே சம்மதித்த அருங்கிளியே
ஐயாத்து தண்ணியில அண்ணக் கொடிபடரும்
ஐஞ்சு லெட்சம் பிஞ்சரங்கம்
அன்னக் கொடி யொதுக்கி
உங்க கண்ணுக்கு முன்னால
நீங்க பெத்த அல்லி வந்து சேரலையே

என தனது சோகத்தை ஒப்பாரியாக வடிப்பாள்.

தனது சகோதரர் இறந்தபோது சகோதரியானவள் வைக்கும் ஒப்பாரி.

சரம் போட்டு வீடு கட்டி
தனி பிரமா மச்செடுப்பி
தனி பிரமா மச்சுக்குள்ள
என்னோட பொறந்த தர்மர் படிக்கும் சத்தம்
தடத்தோட போறவங்க
தங்க புறா கூவுதுண்ணு
கொஞ்சம் தமுசா நிப்பாங்க
தங்க புறா கூவதும்மா
என்னோட பொறந்த தர்மதுரை படிக்கும் சத்தம்
விட்டம் போட்டு வீடு கட்டி
வெளி பிரமா மச்செடுப்பி
வெளி பிரமா படிக்கும் சத்தம்
வீதியில போறவங்க வெள்ளி புறா கூவுதுண்ணு
வெகு நேரம் நிப்பாங்க

எனப்பாடப்படும்.

ஒரு பெண்ணின் பிள்ளைகள் இறக்கும் போது தனது சோகத்தை இயற்கையிலுள்ள பொருட்களை வைத்துக் கொண்டு ஒப்பாரியிடும் போது மற்றவர்களும் அந்த சோகத்தில் ஆழ்ந்து விடுவதுண்டு. அவ்வாறான ஒப்பாரிப்பாடல்

பூ மரத்து கீழிருந்து
பொண்ணு கொற சொன்னமுன்னா
பூ மரத்து மேல் இருக்கும்
புறாவும் திடுக்கிடும்
பூமரமும் சாஞ்சிடும்
மாமரத்து கீழிருந்து
மங்க கொற சொன்ன முன்னா
மாரத்து மேல் இருக்கும்
மயிலும் திடுக்கிடும்
மாமரமும் சாஞ்சிடுமாம் என்பதாகும்
பூமரத்து மேலிருக்கும்
புறாவும் திடுக்கிடும்
பூமரமும் சாஞ்சிடுமாம்
மாமரத்து கீழிருந்து
மங்ககொறசொன்னமுன்னா
மாமரத்து மேலிருக்கும்
மயிலும் திடுக்கிடும்
மாமரமும் சாஞ்சிடுமாம் என்பதாகும்

பெற்றோர்கள் இறக்கும் போது கொள்ளி வைக்க ஆண் பிள்ளையில்லை என்று மற்றவர்கள் வைக்கும் ஒப்பாரி.

சங்கு வெட்டி சங்கரிஞ்சி
சவக் கழுவி பொட்டு வச்சி
சவப் பாக்க வந்த வங்க
உங்க தம்பி எங்க எம்பாங்க
தடுத்து என்ன சொல்வது
புங்கவெட்டி புங்கரிஞ்சி
பொனங் கழுவி பொட்டு வைச்சி
பொனம் பாக்க வந்தவங்க
உங்க புள்ள எங்க எம்பாங்க
புள்ள எங்க எம்பார்க்கு
புருதி என்ன சொல்லுவது

பெண் பிள்ளைகள் இல்லாத வீட்டில் பெற்றோர்கள் இறந்த பின்பு இவ்வாறு ஒப்பாரியிடுவார்கள்.

மாங்கா மரமேறி மனசுக் கொரு காயெரக்கி
மாங்கா வவுந்து வைச்சி
நாமகடம் கொழுத்தி வைச்சி
நீ பெத்த மகளிலிருந்து வாய் திறந்தா
மத்த ஒருத்தி வாய்திறப்பா...
தேங்கா மரமேறி தென்ன மரமேறி
தினசுக் கொரு காயெறக்கி
தேங்கா உடைச்சி வைச்சி
தீபம் கொழுத்தி வைச்சி
நீ பெத்த செல்லமிருந்தா
பின்னொருத்தி வாய்திறப்பா. இவ்வாறு தனது சோகத்தை ஒப்பாரி மூலம் வெளினக்காட்டுவார்கள்.

இவர்களது பாடல்கள் வாய்மொழி பாடல்களாகும். இவை ஏட்டிலே, எழுத்து வடிவிலோ ஆக்கப்பட்டவையல்ல. மக்கள் உணர்வலையிலிருந்து வந்தவையாகும். அதாவது மனம் நினைக்கும் வார்த்தைகளால் தன் உணர்வுகளை சுதந்திரமான ராக, தாள, பல்லவி என்ற இலக்கண விதிகள் இல்லாமல் இயற்கையாகப் பாடிய பாடல்களாகவே காணப்பட்டது.

மலையக மக்களின் பூர்வீகம் தென்னிந்தியா. எனவே தென்னிந்திய மக்களின் இயற்கையோடு ஒட்டியதாகவே மலையக ஒப்பாரிப்பாடல்களும் அமைந்துள்ளன.

இன்றைய கால கட்டத்தில் இவ்வாறான பொக்கிசங்கள் அழிந்து கொண்டு வருகின்றன. மலையக சமுதாயம் இப்போது எழுச்சி பெற்றுக் கொண்டு வருவதால், இவ்வாறான பாடல்கள் செயலிழந்து வருகின்றது. மக்களின் வாழ்விலே ஏனைய கலாசாரங்களின் தாக்கத்தினாலும், நவீன நாகரீக வளர்ச்சியாலும், கல்வியறிவு வளர்ச்சியாலும் இவ்வாறான பாடல்கள் தரம் குறைத்தே மதிப்பிடப்படுகிறது. எனவே இவை விசமத்துக்குரிய ஒரு விடையமாகும் எனவே மக்களிடையே இவ்வாறான எண்ணங்களை அகற்றி ஒப்பாரிப்பாடல்களை ஊக்குவிப்பது மகத்தான பணியாகும்.

ஒப்பாரிப் பாடல்களை பொருத்த வரை இவை தென்னிந்தியாவிலிருந்து வந்த மலையக மக்களின் ஆரம்ப வாழ்வியலை எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாது, தென்னிந்திய கிராமப்புற மக்களின் இயற்கை வாழ்வியலையும் படம் பிடித்துக்காட்டுகிறது. இந்த இனிமையான பாடல்கள், அனைவராலும் உணர்ச்சி பூர்வமாக சுவைக்கும் தன்மையுள்ளது. எனவே ஒப்பாரிப்பாடல்கள் மலையக மக்களின் வாழ்வியலோடு என்றென்றும் பின்னிப் பிணைந்து காட்சியளிக்கப்படவேண்டியது அவசியமாகிறது.



# தியாகம்....

## செல்வி ஓ. கௌரி

கீதாஞ்சலி தான் கடமையேற்ற பாடசாலையை ஒரு முறை பார்த்தாள் அது மத்திய மலைநாட்டுப் பகுதியில் அமைந்துள்ள தோட்ட பாடசாலையாகும். சுமார் அறுநூறு மாணவர்களையும் அதிபர் உட்பட மொத்தமாக ஐந்து ஆசிரியர்களையும் இரண்டு சிறிய கட்டிடங்களையும் கொண்ட சிறிய பாடசாலையாகும்.

கீதாஞ்சலி ராமசாமி பார்வதி தம்பதிகளின் புதல்வி அவளுக்கு ஒரு தங்கையும், தம்பியும் இருக்கின்றார்கள் இருவரும் தற்போது கல்வி கற்கின்றனர். கீதாஞ்சலி அந்த தோட்டத்திலேயே பிறந்து வளர்ந்து நகர்புற பாடசாலையொன்றில் உயரி தரம் வரை கற்றவள். அழகு, அறிவு, அன்பு என்பவற்றை தன்னகத்தே கொண்டுள்ள கீதாஞ்சலி இலக்கியத்துறையிலும், விளையாட்டுத்துறையிலும் திறமையும், ஆர்வமும் கொண்டவள். இலக்கியத்துறையில் கவிதை எழுதுவதோடு சிறுகதை எழுதுவதிலும் பற்றுடையவள். ஆக்கங்களை பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்புவதும் அவை பிரசுரிக்கப்படும் வேளைகளில் பூரிப்படைவதும் அவளது பொழுது போக்குகளாகும். இலக்கியத்துறையில் தன்னை மேலும் வளர்த்துக்கொள்ளவும் தனக்கு தெரிந்த விடயங்களை ஏனையோருக்கு கற்றுக்கொடுக்கவும் வேண்டும் என்பதற்காகவே ஆசிரியத் தொழிலை தெரிவு செய்தாள் கீதாஞ்சலி.

முதன் முதல் நியமனம் பெற்றுப்பாடசாலைக்கு வந்திருந்த கீதாஞ்சலி அங்குள்ள ஆசிரியர்களையும், மாணவர்களையும் அறிந்திருந்த போதிலும் மனதிற்குள் ஏதோ ஒரு பயம். அதிபரின் அலுவலகத்தினுள் சென்று நியமனக் கடிதத்தை வழங்கி விட்டு கையொப்பமிட்டுவிட்டு அமர்ந்திருந்தாள். கீதாஞ்சலியின் தந்தை அதிபர் பரமசிவத்தை நன்கு அறிவார். எனவே அதிபர் கீதாஞ்சலியைப் பார்த்து "என்னம்மா கீதாஞ்சலி எனது நல்வாழ்த்துக்கள் உனது சேவை எங்கள் பாடசாலைக்குத் தேவை" என வாழ்த்தி விட்டு அவளை ஆண்டு மூன்று வகுப்பினுள் கூட்டிச்சென்று விட்டார். சிறிய கட்டிடங்களாகையால் வகுப்பறைகள் வரிசையாக போடப்பட்டிருந்தன. ஏனைய எல்லா வகுப்புகளிலும் ஆசிரியர்கள் இருக்க ஒரு வகுப்பு மாத்திரம் சத்தமிட்டுக்கொண்டிருந்த மாணவர்களை கொண்டதாக இருந்தது. மூன்றாம் ஆண்டு வகுப்பறையினுள் கீதாஞ்சலி நுழைந்தவுடன் அங்கு அமர்ந்திருந்த பிள்ளைகள் "ஆ.. புது டீச்சர் வர்ராங்க.. புது டீச்சர் வர்ராங்க" எனக் கைதட்டிய வண்ணம் சத்தமிடுவதை

பார்தவளுக்கு தான் ஒரு சோலை வனத்திற்குள் நுழைந்திருப்பதை போல் உணர்நத்தாள். எனவே உள்ளத்தில் உவகையோடு பிள்ளைகளை அமரச்செய்து அவர்களினத் பெயர்களை கேட்டு விட்டு சிறிய பாடல் ஒன்றினை பாடிக்காட்டவே மாணவர்களும் அமைதியாக அமர்ந்திருந்து பாடலினைக் கேட்டு தாமும் அதுப்போல பாடினர். அவர்கள் பாடசாலை முடிந்து வீடு செல்லும் வரையும் அதே வகுப்பிலேயே இருந்து விட்டு அவர்கள் சென்றவுடன் அதிபரை சென்று சந்தித்தாள். அங்கு அவளுக்கென்று நேர சூசி ஒன்று தயாராக இருந்தது. அதில் அவள் ஆண்டு மூன்றிற்கான வகுப்பாசிரியையாகவும் அவர்கள் சென்றவுடன் ஆண்டு எட்டு, ஒன்பதாம் வகுப்புகளுக்கு தமிழ்ப்பாடமும் கொடுக்கப்பட்டிருந்தன.

கீதாஞ்சலி பாடசாலைக்கு வந்து ஆறு மாதத்திலேயே ஆசிரியர்களின் மனதில் மட்டுமன்றி மாணவர்களின் மனதிலும் இடம் பிடித்து விட்டாள். மாணவர்கள் எல்லோருடனும் அன்பாகப் பழகும் அதே வேளை கண்டிப்புடனும் நடந்துக்கொள்வாள். மாணவர்கள் விடும் பிழைகளை அன்பாக சுட்டிக்காட்டி திருத்துவதற்கு முயற்சி செய்வாள். மேலும் சக ஆசிரியர்களுடன் சகஜமாகப் பழகினாள். தனக்குத் தெரியாத விடயங்களை ஏனைய ஆசிரியர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வாள் தனக்கு வழங்கப்பட்டிருக்கும் கடமையில் கண்ணாக இருந்து அவற்றை நிறைவேற்றுவாள். ஏனைய ஆசிரியர்களுக்கும் தன்னாலான உதவியை வெய்வாள். இப்படி இருக்கும் வேளையில் தான் தமிழ் தினப்போட்டிக்கான சுற்று நிருபங்கள் பாடசாலைக்கு வந்தது எனவே அதிபரும் ஆசிரியர்களுக்கான கூட்டமொன்றினை ஏற்பாடு செய்து விபரங்களை வெளியிட எல்லா ஆசிரியர்களின் விருப்பங்களுக்கமைய அப்பாடசாலையில் தமிழ்ப்பாடம் கற்பிக்கும் ஆசிரியரான ரவி ஆசிரியரும் அவருக்கு உதவியாக கீதாஞ்சலியும் தமிழ்த்தின போட்டிகளுக்கு பொருப்பாளர்களாக தீர்மானிக்கப்பட்டனர். அதிபரும் சம்மதிக்க ரவி ஆசிரியரும், கீதாஞ்சலியும் இணைந்து போட்டிகளுக்கான மாணவர்களை தெரிவு செய்து பயிற்சி அளித்தனர். இவ்வேளை இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து செயற்பட்டனர். இதனால் இருவரும் ஒருவர் மேல் ஒருவர் நல்ல மதிப்பை ஏற்படுத்திக் கொண்டனர். ரவி, கீதாஞ்சலி இருவருக்கும் தங்களின் எண்ணங்கள் ஒன்று படவே இருவரும் தங்கள் உள்ளங்களைப் புரிந்து கொண்டு காதலர்களாகினர் ஒரு வருடமும் இல்லாத முறையில் இம்முறை போட்டியில் அதிகமான மாணவர்கள் பரிசில்களை வென்றிருந்தனர். ரவி ஆசிரியரின் நெரியாள்கையின் கீழ் கீதாஞ்சலி பயிற்சியளித்த நாடகம் மாகாண ரீதியில் முதலாம் இடத்தை

பெற்றுக்கொடுத்து பாடசாலைக்கு பெருமையை தேடித்தந்தது. அதிபர் உட்பட பாடசாலையில் உள்ள ஏனைய ஆசிரியர்களும் ரவி, கீதாஞ்சலியை பாராட்டினர். அது மட்டுமன்றி பெற்றோர்களும் வந்து இவர்களைப் பாராட்டிச் சென்றனர். இப்பாராட்டுக்கள் தந்த பூரிப்போடு ரவியும், கீதாஞ்சலியும் தங்கள் காதலையும் வளர்த்து வந்தனர்.

இவை இவ்வாறிருக்க கீதாஞ்சலி கல்வியில் பின் தங்கிய வசதியற்ற மாணவர்களுக்கு இலவசமாக மாலை வகுப்புக்களை வைத்து கற்பித்தாள் மேலும் கவிதை, சிறுகதை போன்ற விடயங்களில் ஆர்வமுடைய மாணவ்களுக்கு மாலை நேரங்களில் பயிற்சி அளித்தாள். ரவியும் தன்னால் இயன்றவரை எல்லா மாண்வர்களினதும் கல்வித் தரத்தினையும் வளர்த்து வந்தார். பதினொன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு மேலதிகமாக இலவச வகுப்புகளை நடத்தி வந்தார்.

இவ்வாறு இரண்டு வருடங்கள் சுழன்றோடின ரவியும், கீதாஞ்சலியும் அங்குள்ள மாணவர்களால் பெரிதும் விரும்பப்படும் ஆசரியர்களானார்கள். கீதாஞ்சலி, ரவியின் காதல் விவகாரம் இரு வீட்டாராளும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே எவ்வித தடையுமின்றி இவர்களது காதலும் வளர்ந்தது. இவ்வேளையில் தான் ரவி ஆசிரியரின் இடமாற்றக் கடிதம் பாடசாலைக்கு வந்தது. எட்டு வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றியவர்கள் கட்டாயமாக செல்லவேண்டிய இடமாற்றமாகும். ரவி ஆசியரியருக்கு அவரது சொந்த ஊரான பதுளைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. அவரது இடமாற்றத்தை ரத்து செய்ய அதிபராளோ பெற்றோராலோ இயலவில்லை எல்லோரை விடவும் அதிக கலக்கமடைந்தவள் கீதாஞ்சலியேயாகும். தன்னோடு துணையாக நின்று இப்பிள்ளைகளின் திறன்களை வளர்க்க உதவிய ரவியின் பிரிவு அவளைத்தாக்கியது. ஒரு சில நேரங்களில் கல்வி அமைச்சின் மேல் கோபமாக இருந்தது. “இவ்வாறு பின்தங்கிய பாடசாலைகளில் இருக்கும் திறமையான ஆசிரியர்களையும் இடமாற்றி அனுப்பினால் இவர்களின் கல்வி எங்கே முன்னேறப்போகிறது” என்று கூறி தனது ஆதங்கத்தை வெளிகாட்டினாள். ரவியும் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் கண்ணீருடன் விடைப்பெற்றுச்சென்றார்.

ரவி ஆசிரியர் செல்லும் போது கண்ணீர் விட்டு அழுத மாணவர்களின் நிலையை உணர்ந்த கீதாஞ்சலிக்கு பெரும் கவலையாக இருந்தது. “தங்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டுவார் என நம்பியிருந்த பிள்ளைகள் தாங்கள் நிர்க்கதியாக்கப்பட்டு விட்டோம் என்றல்லவா நினைக்கிறார்கள்”

இவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக நானிருப்பேன் எந்தக்காரணத்தைக் கொண்டும் இப்பிள்ளைகளை விட்டு நான் வேறு எங்கும் போக மாட்டேன் என உறுதிப்பூண்டுக்கொண்டாள். ரவியின் பிரிவு அவளை வறுத்தியப்போதும் இப்பிள்ளைகளின் நிலைமையை எண்ணி ரவி விட்டுச்சென்ற பணிகளை நிறைவு செய்வதில் முயற்சி செய்தாள்.

ரவி சென்று ஒரு வருடம் முடிய இவ்விருவரினதும் திருமணம் இரு வீட்டாராலும் நிச்சயிக்கப்பட்டது. ரவியை கீதாஞ்சலி திருமணம் முடித்ததன் பின்பு அவளும் இப்பாடசாலையை விட்டு போக வேண்டும். தற்போதுதான் முன்னேறி வரும் இப்பாடசாலையை எல்லோரும் விட்டு விட்டுச்சென்றால் இப்பாடசாலையின் நிலை என்னவாகும்? இங்கு எம்மை நம்பி கல்விகற்கும் நிலைதான் என்ன? என சிந்தித்து செய்வதறியாது கலங்கினாள் கீதாஞ்சலி. தான் காதலித்தவனை திருமணம் செய்துகொண்டு தனது வாழ்வை மட்டுமே இன்பமாக அமைத்துக்கொள்வதா? அல்லது இத்திருமணம் வேண்டாம் என்று கூறிவிட்டு இப்பிள்ளைகளின் அறிவை வளர்த்துக்கொண்டு இங்கேயே இருப்பதா? எனக்குழம்பியவள் இறுதியாக தனது நிலையினை தெளிவு படுத்தி தன்னை மன்னிக்கும்படி கேட்டு ரவிக்கு ஒரு கடிதத்தினை எழுதினாள்.

தற்போது அத்தோட்டத்து பாடசாலையின் வளர்ச்சியினை கருத்திற்கொண்டு அவள் தனது காதலை தியாகம் செய்து விட்டாள். ரவியினை பொருத்த வரை அவள் எடுத்த முடிவு சரி என்பதனை உணரும் மனப்பான்மையைக் கொண்ட ஆசிரியர் தங்களின் இன்பங்களை விட மாணவர்களின் நலன்களே முக்கியம் எனவே கீதாஞ்சலி துரோகியல்ல. இது ரவி கீதாஞ்சலிக்கு குறிபிடப்பட்டிருந்தவை.

இப்பொழுது கீதாஞ்சலி அத்தோட்டத்தில் வசிக்கும், வங்கியில் இலிகிதராக பணிபுரியும் ரகுவை திருமணம் முடித்து அப்பாடசாலையிலே தன்னை நம்பிய மாணவர்களின் கல்வியினை வளர்க்கின்றாள்.

(இசையும் கதையும்)

# நல்லதோர் வீணை செய்தே

## திருமதி.சித்ரா ரவி

இந்து சமுத்திரத்தின் முத்தாகிய இலங்கைத் தீவினிலே "மீன்பாடும் தேனாடு" என்றழைக்கப்படும் மட்டுமா நகரிலே அந்த அழகிய கிராமம் அமைந்துள்ளது. அதனை வந்தாறுமூலை என அழைப்பர் இப்பெயர் உண்டானதற்கு காரணம் ஒரு வரலாறு நோக்கியே ஆகும். அதாவது கண்ணகி மதுரையை எரித்து விட்டு ஆழ மரத்தடியின் கீழ் வந்து இளைப்பாறினாராம். அதன் நினைவாக அவ்விடத்திலே கண்ணகி அம்மன் கோயில் ஒன்றுமுள்ளது.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே-அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே-அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே-இதை
வந்தனைக் கூறி மனத்தில் இருத்தியென்
வாயுர வாழ்த்தேனோ?-இதை
"வந்தே மாதுரம் வந்தே மாதுரம்"
என்று வணங்கேனோ"

இக்கிராமம் இயற்கை எழில் கொஞ்சும் ஓர் அழகிய கிராமமாகும் தெருவின் இரு புறமும் பெரிய வளவுகளுடன் கூடிய வீடுகள் வீட்டைச் சுற்றிலும் பெரிய பெரிய விருட்சங்கள் அசைந்து இனிய தென்றலைத் தந்தது. ஊரின் எல்லையில் தாமரைக் குளங்கள், வயல்வெளிகள், தென்னந்தோப்புகள், ஆங்காங்கே பறவைக் கூட்டம்
இவற்றுடன் பார்க்கும் இடமெல்லாம் குறைத்துக்கொண்டும் வாலை ஆட்டிக்கொண்டும் திரியும் நாய்களும், புழுதிக்கிளம்பும் மணல் வெளிகளும், நிலத்திற்கு சமாந்தரமாகத் தெரியும் வானவெளியும் ஆலம் விழுதுகளில் தொங்கி விளையாடும் சிறார்களும் ஆகிய காட்சிகள் மனதைக் கொள்ளைக் கொள்கின்றன.

"இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழைய ராகி இனிமண்ணில் துஞ்சோம்

தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
தாய்திரு நாடெனில் இனிக்கையை விரியோம்
கண்ணலும் தேனும் கனியும் இன் பாலும்
கதலியும் செந்நெலும் நல்கும் எக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவம் இஃதை எமக்கிலை ஈடே"

இங்கு வாழும் மக்கள் சுய தொழில் புரிபவர்களும் தன் மானம் உடையவர்களுமாவர். இவ்வழகிய கிராமத்திலே இன்பமாக வாழும் ஒரு குடும்பம் நல்லதம்பியின் குடும்பம் விவசாயியான இவரது மனைவி பாக்கியம் இவர்களுக்கு இளங்கோ எனும் புதல்வனும் ரதிதேவி, மணிமாலா எனும் இரு புதல்வியரும் இருந்தனர். பெண்களில் மூத்தவள் ரதி பெயரைப்போலவே அழகானவள் படிப்பிலும், விளையாட்டிலும் ஆர்வமுடையவள் துடுக்கானவளும் கூட இவ்வாறாக காலம் உருண்டோட ரதியும் இளமங்கைக்குரிய பருவமடைந்து தெய்வப்பெண்போன்ற அழகுடன் விளங்கினாள்.

"மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்
வயதுபதி னாறிருக்கும் இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு போன்றவொளி முகமும்
புன்னகையின் புது நிலவும் போற்றவருந் தோற்றம்
துங்கமணி மின்போலும் வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்
அங்கதனிற் கண்விழித்தேன் அடடாவோ! அடடா!
அழகென்னும் தெய்வந்தான் அது வென்றே அறிந்தேன்.

பருவமடைந்த பெண்களுக்கு தாய் மாரின் போதனைகளும் கட்டுப்பாடுகளும் தானாகவே கிடைப்பதைப் போல ரதிக்கும் தொடர்ந்தன. அப்படி இருந்தும் ரதியின் உள்ளத்து நாயகனாக இடம் பிடித்து விட்டான் கோவிந்தன் ஆண்மைக்குரிய அழகும், அறிவும் கூடியவன். கந்தப்பு முதலாளியின் ஒரே வாரிசு பணத்திமிரோ, கெட்டபழக்கவழக்கமோ இல்லாதவன் ரதிக்கு எல்லா விதத்திலும் ஏற்றவன். பெற்றோரின் நற்பெயருக்கு எவ்விதத்திலும் தீவினை ஏற்படுத்தாதவன். அவ்வூர் வாழ் மக்களிடம் அன்பிற்கும், நற்பெயருக்கும் பெயர் போனவன்.

"மாங்கொட்டைச் சாமிபுகழ் சிறிது சொன்னோம்
வண்மை திகழ் கோவிந்த ஞானி பார்மேல்

யாங்கற்ற கல்வியெல்லாம் பலிக்கச் செய்தான்
எம் பெருமான் பெருமையையிங் கிசைக்கக் கேளீர்!
தீங்கற்ற குணமுடையான் புதுவை யூரார்
செய்த பெருந் தவத்தாலே உதித்த தேவன்
பாங்குற்ற மாங்கொட்டைச் சாமி போலே
பயிலுமதி வர்ணாச்சிர மத்தே நிற்போன்
அன்பினால் முக்தியென்றான் புத்தன் அந்நால்
அதனையிந்நாற் கோவிந்தசாமி செய்தான்
துன்பமுறும் உயிர்க்கெல்லாம் தாயைப்போலே
சுரக்குமரு ளுடையபிரான் துணிந்த யோகி
அன்பினுக்குத் கடலையுந்தான் விழுங்க வல்லான்
அன்பினையே தெய்வமென்பான் அன்பேயாவான்
மண்பதைகள் யாவுமிங்கே தெய்வம் என்ற
மதியுடையான், கவலை யெனும் மயக்கந் தீர்ந்தான்

வெவ்வேறு இடங்களில் இருந்து வரும் இரு நதிகள் ஒரு கடலில் சங்கமிப்பதுபோல் ரதியும், கோவிந்தனும் காதல் என்னும் கடலில் சங்கமித்தது வியப்பான விடயமில்லையே. இருவரும் மாலைப்பொழுதில் எவரும் அறியாமல் சந்திப்பதன் ஊடாகத் தம் காதலை வளர்த்துக்கொண்டு போயினர்.

"மாலைப் பொழுதில்லொரு மேடை மிசையே
வானையும் கடலையும் நோக்கி யிருந்தேன்
மூலைக் கடலினை வான வளையும்
முத்தமிட் டேதழுவி முகிழ்த்தல் கண்டேன்
நீல நெருகிடையில் நெஞ்சு செலுத்தி
நேரங் கழிவ திலும் நினைப்பின்றியே
சாலப் பலபல நற் பகற்கனவில்
தன்னை மறந்தலயந் தன்னில் இருந்தேன

இருவரும் காதல் வயப்பட்டு ஒருவருக்கொருவர் மற்றவரைப் புகழ்ந்தும் வர்னித்தும் தமது அன்பை வெளிப்படுத்தி உற்சாகமாகவும் சந்தோசமாகவும் சந்திக்கும் கொஞ்ச நேரத்தைக் கழித்தனர். கோவிந்தன் தன் காதலியைப் பார்த்துப் பின்வருமாறு பாடுகின்றான்.

"பாயுமொளி நீ யெனக்குப் பார்க்கும் விழிநானுக்கு
தோயும் மது நீ யெனக்குத் தும்பியடி நானுனக்கு

TEL: 051-222... LIBRARY

வாயுரைக்க வருகுதில்லை வாழிநின்றன் மேன்மை யெல்லாம்
தூய சுடர் வானொளியே! சூறையமுதே! கண்ணம்மாம!

தாரையடி நீ யெனக்குத் தண்மதியம் நானுனக்கு
வீரமடி நீ யெனக்கு, வெற்றியடி நானுனக்கு
தாரனியில் வானுலகில் சார்ந்திருக்கும் இன்பமெல்லாம்
ஒருருவமாய்ச் சமைத்தாய்! உள்ளமுதே! கண்ணம்மா!

ரதியும் சலைத்தவள் இல்லையே தன் காதலன் புகழ்பாடுகின்றாள்
"தஞ்சமுலகினில் எங்கணு மின்றித்
தவித்துத் தடுமாறி
பஞ்சைப் பறையன் அடிமை புகுந்தேன்
பாரமுனக் காண்டே!
ஆண்டே! பார முனக்காண்டே!

துன்பமும் நோயும் மிடிமையுந் தீர்த்துச்
சுகமருளல் வேண்டும்
அன்புடன் நின் புகழ் பாடிக்குதித்து நின்
ஆணை வழிநடப்பேன்
ஆண்டே! ஆனை வழிநடப்பேன்

இவ்வாறாக இருவரும் சந்தித்துக் காதல் கொள்ளும் செய்தி இரு வீட்டிலும் தெரிய வந்தப்போது பூகம்பம் உண்டாயிற்று. ரதியின் பெற்றோர் குமுறினர், தமையன் பொங்கினான் ஏனெனில் அவர்கள் இன்னொரு பெண் பிள்ளையையும் கரை சேர்க்கவேண்டியிருப்பதால். இதேப்போல் கோவிந்தன் வீட்டிலும் புகைச்சல் இரு வீட்டாரும் காதலுக்கோ, காதலிப்பவர்க்கோ எதிரிகளுமல்ல, விரோதிகளுமல்ல. ஆனால் கிராமத்து கலாசாரத்தினை மதிப்பவர்கள் ஆதலால் நகர்புற ஆண்பெண்கள் சகஜமாகப் பழகுவதைப்போல் கிராமத்துப்பிள்ளைகள் பழகுவதற்கு இடமளிக்காதவர்கள் வீட்டில் முடக்கப்பட்ட ரதி தனக்குத் தானே புலம்புகின்றாள்.

"வானரர் தம்முள்ளே மணிபோல் உமையடைந்தேன்
பிச்சைப் பறவைப் பிறப்பிலே தோன்றிடினும்
நிச்சயமா முன் புரிந்த நேமத் தவங்களினால்
தேவரீர் காதல் பெருஞ் சீர்த்திக்கொண்டேன் தம்மிடத்தே

ஆவலினாற் பாடுகின்றேன், ஆரியரே கேட்டருள்வீர்
காதல், காதல், காதல்
காதல் போயிற், காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்

தன்னருமைக் காதலியின் முகத்தைக்காண முடியாமலும் இனிய குரலை கேட்க முடியாமலும் தவியாய் தவிக்கின்றான் கோவிந்தன்.

"தீர்த்தக் கரையினிலே-தெற்கு மூலையிலே
சென்பகத் தோட்டத்திலே
பார்த்திருந்தால் வருவேன்-வெண்ணிலாவிலே
பாங்கியோடென்று சொன்னாய்
வார்த்தை தவறிவிட்டாய்-அடி கண்ணம்மா!
மார்பு துடிக்குதடீ!
பார்த விடத்திலெல்லாம்-உன்னைப் போலவே
பாவைத் தெரியுதடீ!

மேனி கொதிக்குதடீ!-தலைசுற்றியே
வேதனை செய்குதடீ
வானிலிடத்தை யெல்-இந்த வெண்ணிலா
வந்து தழுவுதுபார்
மோனத் திருக்குதடீ!-இந்த வையகம்
மூழ்கித் துயிலினிலே
நானொருவன் மட்டிலும்-பிரிவென்பதோர்
நரகத் துழலுவதோ?"

எந்த ஒரு துன்பம் வந்தாலும் ஆண்கள் வெளிக்காட்டிக் கொள்வது குறைவு. பெண்களோ தாம் எடுத்த முடிவில் பயம் கொண்டவர்களாகவும் தாங்க முடியாதவர்களாகவும் இருக்கின்றனர். அவ்வாறே ரதியும் தனது நெருங்கிய தோழி மேகலாவிடம் உள்ளத் துயரைக் கொட்டுகின்றாள்.

"ஆசை முகமறந்து போச்சே-இதை
ஆரிடம் சொல்வேனடீ தோழி?
நேசமறக்கவில்லை நெஞ்சம்-எனில்
நினைவு முக மறக்கலாமோ?"

ஆற்றாமையின் விளிம்புக்கே சென்று விட்ட ரதி தன் உயிர்காதலன்

கோவிந்தனுக்குத் தூது அனுப்புகின்றாள்.

"கண்ணன் மன நிலையைத் தங்கமே தங்கம்
கண்டு வரவேணுமடீ தங்கமே தங்கம்
எண்ண முறைத்து விடில் தங்கமே தங்கம்-பின்னர்
ஏதெனிலுஞ் செய்வமடி தங்கமே தங்கம்

பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால்-மிகப்
பீழை யிருக்குதடி தங்கமே தங்கம்
பண்ணென்று வேய்ங்குழலில் ஊதி வந்திட்டான்-அதை
பற்றி மறக்குதில்லை பஞ்சை யுள்ளமே

நேரமுழுதிலுமப் பாவி தன்னையே-உள்ளம்
நினைத்து மறுகுதடீ தங்கமே தங்கம்
தீர ஒரு சொல்லின்று கேட்டு வந்திட்டால்-பின்பு
தெய்வமிருக்குதடி தங்கமே தங்கம்

கோவிந்தனும், ரதியும் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசாவிட்டாலும் உள்ளத்தாலும், தான் எடுத்துக்கொண்ட முடிவினாளும், அதே வேளை தத்தமது குடும்பத்திற்கு எந்த விதக் கெட்ட பெயர் ஏற்படாமலும் இருக்கும் வண்ணம் இருவரது எண்ணமும் ஒரு மித்தே இருந்தது. இறைவன் மேல் தம் பாரத்தைச் சுமத்தி விட்டு பெற்றோரின் நல்ல முடிவில் தாம் இணையுமந்த பொன்னாளுக்காய் காத்திருக்கின்றனர்.

"நின்னைச் சரணடைந்தேன்-கண்ணம்மா!
நின்னைச் சரணடைந்தேன்

பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று (நின்னை)

மிடிமையும் அச்சமும் மேவியென் நெஞ்சில்
குடிமை புகுந்தன கொன்றவை போக்கென்று (நின்னை)

தன்செய லெண்ணித் தவிர்ப்பது தீர்ந்திங்கு
நின்செயல் செய்து நிறைவு பெறும் வண்ணம் (நின்னை)

துன்பமினில்லை சோர்வில்லை தோற்பில்லை
அன்பு நெறியில் அறங்கள் வளர்ந்திட (நின்னை)

நல்லது தீயது நாமறியோம்! அன்னை
நல்லது நாட்டுக! தீமையை ஓட்டுக!

# தமிழர் திருமணமும் அதன் மாற்றங்களும்.

திருமதி. நா. திலகராணி

இன்றைய உலகில் பல்வேறுபட்ட நகாரீகமுறைகளும் பண்பாடுகளும் நிலவி வருகின்றன. இவ்வாறான பண்பாடுகளில் தமிழர் பண்பாடும் முக்கயிமானதொன்றாகும். வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து உலகில் தோன்றிய நாகரீகங்களுள் ஆரிய நாகரீகத்திற்கு முறபட்டதும் வேறுபட்டதும் தமிழர் நாகரீகம். வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அந்நாகரீகம் செல்வாக்குடன் நிகழ்ந்திருப்பதாகும். அந்த வகையில் தமிழர் பண்பாடும் பல ஆய்வாளர்களின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதை சிந்வெளி தொடக்கம் இன்றுவரை கூறும் சான்றுகள் மூலம் தமிழர்பண்பாட்டின் தொன்மை புலப்படுகின்றது. நாகரீகமானது கலை, கலாச்சாரம், வாழ்வியல், பொருளாதாரம், அரசியல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியது. இந்த வகையில் தமிழர் வாழ்வியலின் முக்கியத்துவம் பெறும் இழ்வாழ்க்கையின் சிறப்பம்சமான திருமணம் தொடர்பாக அன்று முதல் இன்று வரை பல கருத்துக்களும் சம்பிரதாய சடங்குகளும் நிலவி வருகின்றன. அந்த வகையில் தமிழர் பண்பாட்டில் திருமணத்தின் செல்வாக்கையும் அதன் படிமுறை மாற்றங்களையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பண்டைய நாகரீகத்தில் சிறந்தவர்கள் தமிழர்கள். தொல்காப்பியத்திலே திருமணமுறைகளைப் பற்றிய சமய சடங்குகளையும் வேள்விகளையும் கண்டவர்களும் வழிபட்டவர்களும் தமிழர். திருமணத்தில் கையாளப்படும் முறைகளும் இவ்வாறு வழி வழி வந்தவையே ஆகும். கடைச்சங்க காலத்திலே குறிப்பாக இரண்டாம் நூற்றாண்டில் திருமண முறை இருந்ததென அறிய முடிகிறது. தலைவன், தலைவி இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு கண்ணும் கண்ணும் கவ்வி காதல் கொண்டனர். இத்திருமணத்தை பெற்றோரும், உற்றோரும் உடனிருந்து நடத்தி மகிழ்வதாகவே காண்கிறோம். சங்கமருவிய காலப்பகுதியில் வள்ளுவர் நயமாகவும், அதே நேரத்தில் நறுக்கென்றும், சுறுக்கென்றும் இரு வரிகளில் வையத்துள் வாழ்வாங்கு வாழ இல்லறத்தை நல்லறமாக நடாத்த திருக்குறளை இயற்றி வழிகாட்டுகிறார்.

திருமணம் என்பதில் "திரு' என்பது அழகு, செல்வம், சிறப்பு என்றும் "மணம்" வாசனை என்றும் பொருள்படும் வாழ்வு முழுவதும் சிறந்த மணம் பெற்று திகழ்வதாகும். இலக்கிய மரபில் காதலைப்பற்றி சொல்லுவது அகம் என்றும் சமூக அரசியலை கூறுவது புறம் என்றும் வரையறுக்கப்பட்டிருந்தது. அறம், பொருள், இன்பம், ஈட்டி கூட்டுறவில்

வாழ்தல் திருமணம் எனப்படும்.
"ஒருவர் மற்றொருவர் உள்ளத்தில் புகுந்தார்கள்
இருவரும் அறிந்து அறிவித்து செய்து"
கொள்வதுதான் தமிழர் முறை. கம்பர் தமது நோக்கில்
"அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்"
என அழகாக கூறுகிறார். காதலர் இருவர் கருத்தொருமித்து அதரவு பட்டதே திருமணம் என்ற முறைமாறி காலப்போக்கில் பிற பண்பாடுகள் வந்து மளிந்து கலக்க மணமுறையிலும் மாற்றங்கள் வந்து சேர்ந்துள்ளமையை அறியலாம். காலத்திற்கு காலம் திருமண முறை படிப்படியாக மாறுபாடுற்று வந்துள்ளதை நன்கு அறியலாம். இன, மத, மொழி ரீதியாகவும் அந்நியர்களின் வருகையால் பிற பண்பாட்டு முறைகள் கலந்து வருகின்றமையைக் காணலாம். தமிழர்களிடையே நிகழும் திருமணங்களிலே பல்வேறு பழக்கவழக்கங்கள் காணப்படுகின்றன.

தொல்காப்பிய நூலின் மணமுறைகள் பற்றிய பல விடயங்கள் அடங்கியிருகின்றன. அம்மி மிதித்தல், தாலிக்கட்டல், விளக்கேற்றல், மணமக்களை வாழ்த்துதல் போன்ற திருமண சடங்குமுறைகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவை காலப்போக்கில் பல மாற்றங்களுக்கு உள்ளாகி புரட்சிகரமான திருமண முறையாக வளர்ச்சிபெற்றுள்ளது. மங்களகரமாக விளக்கேற்றி திருமணமுறையை வழுப்படுத்தி கணவனுக்கு கட்டுப்பட்டு வாழ தாலிக்கட்டலும், கல் போல் மண உறுதி பெற அம்மி மிதித்தலும் காணப்பட்டது.

திருமண முறையில் மாற்றத்தின் வடிவத்தை சிலப்பதிகாரத்தில் காணலாம் இரு நிதிபடைத்த பெருங்குடி வணிகர் மரபில் யானையின் மீது மகளிரை ஏற்றி திருமண நிகழ்ச்சியை அறிவிக்கும் வழக்கம் இருந்தாகவும் கூறப்படுகிறது. காலப்போக்கில் ஏற்பட்ட வர்ணாச்சிரம தரம கோட்பாடுகளும் திருமண முறை மாற்றம் பெறக் காரணமாக விளங்கியது. சாதிப்பாகுப்பாட்டினை தோற்றுவித்தது, ஒரு வர்ணப்பிரிவில் இருந்து இந்நொரு பிரிவிற்கு மாற முடியாது இம் முறையில் புரோகிதர்கள் உயர்ந்தவர்களாக கருதப்பட்டனர். தொழிலை அடிப்படையாக்ககொண்டு மக்களை உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பிரிவினைக்கு உட்படுத்தினர்.

சில தமிழ் நூல்களில் சுற்றமும் நட்பும் உற்றோரும் மற்றோரும் உண்டு மணமாற வாழ்த்தி தொடங்கும் வாழ்வில் சீர்கொடுத்தணர். பொன்னும் பொருளும் கொடுத்து தனித்து வாழ வழிகாட்டியமை இன்றைய சீதனக்

கொடுமை என்ற பாரிய பிரச்சினையை வளர்த்து விட்டது எனலாம். பழங் காலந்தொட்டே கல்வி, கலை, நாகரீகம், பண்பாடு முதலியவற்றில் தமிழ் மக்கள் மேம்பாடு எய்தியிருந்தனர். போரில் வென்று வெற்றிவாகை சூடிய ஒருவனுக்கு பெண்ணை மணம் முடித்து வைத்தனர். அரச வம்சத்தில் சுயம் வரம் என்ற திருமணத் தேர்வு முறையும் காணப்பட்டது.

இடைக்காலத்து இறுதிவரை (9-10ம் நூற்றாண்டு) தமிழ் நாட்டில் பல குடிகளிலும் நிலவிவந்த தமிழ் திருமணமுறைகளை அக்காலத்தில் எழுந்த இலக்கியங்களாகிய சிந்தாமணி, பெரிய புராணம், கம்பராமாயணம் ஆகிய காவியங்களில் காணலாம். இவை சங்ககால முறைக்கு முற்றாக மாறுபட்டவை. களவியல் அருகி திருமணம் எல்லாம் கற்பிலேயே தொடங்கி இடைக்காலத்தில் களவியல் வழிக் கற்பியலாகியது.

திருமண சடங்கு முறைகளில் புதிய பல மாற்றங்களாகிய தாரை வார்த்தல், எரிவலம், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல், எரியோம்பல் என்பவற்றைக் குறிப்பிடலாம். தமிழ் நாட்டில் திருமணங்கள் எப்படி நடைபெறுகின்றன? பார்ப்பணர் வடமொழி மந்திரங்களைக் கூறி நடாத்தி வைக்கிறார்ளே, அவற்றை நாம் புரிந்துக்கொள்கிறோமா? வட மொழி மந்திரங்களை கூறும் புரோகிதன் அவசியமில்லை. இச்சடங்குகளைக் குறைத்துக் கொள்வதால் கூட ஒரு கெடுதியும் இல்லை.

சிறப்புடன் விளங்கிய திருமண முறையில் முன்னாலைப் போலன்றி புரட்சிகரமான புதிய முறைகளை புகுத்திவிட்டனர் என்றே கூறவேண்டும். சீதனம், பொன், பொருள் கேட்டல், பெண்பார்க்கும் படலம், மணமக்கள் அவைக்கு வருதல், மாலை மாற்றுதல், கணையாழி மாற்றுதல், மெட்டி அணிதல் என்பவற்றுடன் அரச மணப்பதிவுகள் செய்து கொள்ள வேண்டும். என்ற சட்டம் காணப்படுகிறது.

திருமண முறைகள் இப்படித்தான் இருக்கவேண்டும், நடாத்தபட வேண்டும் என்று கட்டுப்படுத்தியது இல்லை. இவ்வாறான தன்மைகளை தற்கால சமூக சீர்கேடுகளுக்கும், சாதிப்பிரச்சினை, இனம், மதம், மொழி போன்ற மூடநம்பிக்கைகளுக்கும் மக்களை வளர்த்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாக காணப்படுகின்றது. தனித்து பேசிப்பழக வாய்ப்புகள் உள்ளபோதிலும் 'கண்டதே காதல்'' என போலிப் புறக்காதல் வயப்படாது பலருமறியத் திருமணம் செய்து கொள்ளும் தமிழ மரபு வழுவாமல் காதலால் அறத்தை கைப்பிடித்து வாழும் நாளே நன்னால் எனக்காண்போம்.

# நவீன கவிதை...

## எம்.எச்.எம். நஜாத்

கவிதை என்பது “ஒருவன் தனது உணர்ச்சியனுபவங்களை ஒரு கருவை அடிப்படையாகக் கொண்டு அதற்கு ஒரு வடிவம் கொடுத்து ஏனையோருக்கு வெளிக்காட்டும் ஒரு உத்தி முறை” எனலாம். இக்கவிதை இரண்டு வகைப்படுகிறது.

i. மரபுக்கவிதை
ii. நவீன கவிதை

மரபுக்கவிதை என்பது பெரும்பாலும் சமயச் சார்புடைய விடயங்களைக் கூறுவனவாக அமையும். அரசர்கள், பிரபுக்கள் முதலானோரின் புகழ் பாடுபவையாகவும் ஒழுக்கம், அறம், பக்தி, தெய்வம் என்ற தலைப்புகளையே பாடுப்பொருளாகவும் கொண்டிருக்கும்.சாதரன் மனிதனும் அவனது அன்றாட வாழ்க்கை அனுபவங்களும், உணர்ச்சிகளும் மரபுவழிக் கவிதையில் அரிதாகவே இடம்பெற்றன. மரபுவழிக்கவிதையின் உள்ளடக்கம் வரையறுக்கப்பட்டதாகவே அமைந்தது. அதற்கேற்ப அதன் உருவமும் வரையறுக்கப்பட்டிருந்தது. காவியங்கள், புராணங்கள், உலா, பரணி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், பள்ளு, குறவஞ்சி முதலியவை மரபுவழிக்கவிதை வடிவங்களைக் கொண்டமைந்தவை. ஆனால் சமூதாய மாறுதல்கள் காரணமாக கவிதையின் பொருளும் வடிவமும் மாற்றம் பெற்றன. இதனால் தோன்றியதே நவீன கவிதை. இதனையே புதுக்கவிதை என்றும் கூறுகின்றனர். பழைய மரபுவழிச் சிந்தனைப் போக்கை மாற்றி கவிஞனை யதார்த்த உலகில் சஞ்சரிக்க உதவிய பெருமை என்றும் புதுக்கவிதைக்கே உண்டு.

அறம், பக்தி என்ற சிந்தனையைத் திசைத்திருப்பி வஞ்சம், கற்பழிப்பு, சீதனம், விடுதலை, நம்பிக்கை என்று புதிய எண்ணக்கருக்களுக்கு வித்திட்டது நவீன கவிதையே. இந்நவீன கவிதையின் ஆரம்பக் கர்த்தா முறுக்கு மீசையுடன் நறுக்கெனக் கவிதைத்தரும் மாக கவி பாரதியார் “மகாகவிகள் உறுவாகுவதில்லை பிறக்கின்றார்கள்” என்றுக் கூறுவார்கள். பிறவியிலேயே மகாகவியாகிய பாரதி மரபுநிலைப்பட்டதாக விளங்கிய தமிழ் கவிதைக்கு நவீன உள்ளடக்கமும், உருவமும் அளித்து அதனை நவீன கவிதையாக்கினார். இவை சமகால வாழ்வியலைச் சித்தரிப்பதாக அமைந்தன.

நவீன கவிதைப்பற்றி மகாகவி பாரதி பின்வருமாறு கூறுகின்றான்.

“சுவை புதிது பொருள் புதிது
வளம் புதிது சொற்புதிது
சோதி மிக்க நவ கவிதை”

இன்றைய கவிஞர்கள் குண்டூசி முதல் விஞ்ஞான வளர்ச்சியின் சமுதாய விளைவுகள் வரை தங்கள் கவிதைப் பொருளாகக் கொண்டுள்ளனர். இவற்றை எளிய பதம், எளிய நடையிலே பாமரரும் அறியும் விதத்தில் வழங்கினர். பாரதியை ஆகர்ஷித்தே பின்வந்த கவிஞர்கள் புதுக்கவிதை இயற்றினர். அவர்களில் முக்கியமானவர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, ச.நு.சு.யோகியார், தேசிக விநாயகம்பிள்ளை, பாரதிதாசன், கலைவாணன் முதலியோரைக் குறிப்பிடலாம். தேசிய உணர்வும், சமூகவிடுலையும், பெண்விடுதலையும் இவர்களின் கவிதைகளில் இடம்பெற்றன. மேலும் கண்ணதாசன், வாணிதாசன், முடியரசன், பொன்னிவளவன், ப.ஜீவானந்தம், கே.சி.எஸ்.அருணாசலம், சிதம்பர ரகுநாதன் போன்றோர் தோன்றினர். நம் நாட்டிலும் குறிஞ்சித்தென்னவன், சு.முரளிதரன், க.ப.லிங்கதாசன், மலைத்தம்பி, முத்து சம்பந்தர், மல்லிகை சி.குமார் போன்றோரைக் குறிப்பிடலாம். இலங்கையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் சிலரை முக்கியமாகக் குறிப்பிடக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் 1980 களில் புதுக்கவிதைக்கு புதுத்தெம்பூட்டியவர் “சேரன்” அவரின் “அம்மா அழாதே” என்ற கவிதை அனைவரையும் கவர்ந்தது. சில வரிகள் சிந்தனைக்கு.

“அம்மா அழாதே
நமது துயரை சுமக்க மலைகள் இல்லை
உனது கண்ணீர் கரையவும்
ஆறுகள் இல்லை”

“தோளிலே தாங்கிய குழந்தையை
உன்னிடம் தந்ததும்
வெடித்தது துவக்கு
புழுதியில் விழுந்த உன் தாயின் மீது
குருதி படிந்தது”

இவர் மட்டுமன்றி நம்நாட்டு பெண்கவிஞர்களின் செல்வாக்கும் புதுக்கவிதைக்கு பெறுமை சேர்கின்றன. ஊர்வசி, ஔவை மைத்ரேயி, சிவரமணி, சன்மார்க்கா, அ.சங்கரி ஆகியோர் உட்பட இன்னும் பலர் புதுமை நோக்குடனும், புதிய ஆவேசத்துடனும், புதிய வளத்துடனும் கவித்துவ வீச்சைக் காட்டிவருகின்றனர். அ.சங்கரியின் “இன்று நான் பெரிய பெண்” என்ற கவிதையின் துளிகள் சில.

"நான்
கல்லாய் மாறிய பூ
பாறையாய் இறுகிய காற்று
பணியாய் உறைந்த நீர்
.....................
.....................
இன்று
நான் பெரிய பெண்
உரத்துச் சிரித்தல் கூடாது
விரிந்த புகையிலை
அடக்கம் பொறுமை
நாணம்
பெண்மையின் அணிகலம்"

என்ற வரிகள் இயலாமையின் வெளிப்பாடாகும்.

புதுக்கவிதையை இன்று இசையமைத்து பாடலாக கேட்கும்போது அதன் தாற்பரியம் மிகைபடுகிறது. அந்த வகையில் மீரா, அப்துள் ரகுமான், பாலா, வைரமுத்து, அக்கிணி புத்திரன் போன்றோர் பெரிதும் சேவையாற்றி வருகின்றனர். புதுக் கவிதை பல சோதனைகளையும் எதிர்புகளையும் எதிர்த்து நின்று வீறு நடை போடுகின்ற அக்கிணித் தென்றல் எனலாம். அதற்குக் காரணம் அதன் தனித்துவமும் வலிமையும். இதன் தனித்துவத்திற்கு அத்தாட்சியாக இருப்பது நவீன கவிதை இயற்றிய டி.எஸ். எலியட்டின் "பால் நிலம்" (Waste Land) என்ற புதுக்கவிதைக்கு நோபல் பரிசு கிடைத்தமை.

சட்ட திட்டங்களோ, யாப்யமைப்புகளோ அற்றவை நவீன கவிதைகள், ஆனால் அதன் உருவத்தையும், உள்ளடக்கத்தையும், உணர்ச்சியையும் சிதைத்தலாகாது. ஆனால் கவிஞன் இயன்றவரை வெளிப்படுத்த பல்வேறு வழிமுறைகளைக் கையாளுகிறான். அவை வருமாறு.

i. படிமம்
ii. குறியீடு
iii. அங்கதம்.
iv. முரண்

எந்த ஒரு நிலையிலும் எளிதில் விளங்காதவற்றை நொடியில் விளங்கவைக்க உதவுவது படிமம். டாக்டர் சி.க.மறைமலை தமது

"புதுக்கவிதை முப்பெரும் உத்திகள்" என்ற நூலில் "சுருங்கச்சொன்னால் படிமம் சொற்கலாள் நீட்டப்படும் ஓவியம். சொல்லிலே வடிக்கும் சிற்பம், உருவகத்தில் ஆழ்ந்த பொருளுடையது, பல எண்ணங்களைத் தூண்டும் ஆற்றலுடையது" என்கிறார். படிமமானது உணர்வு, உணர்ச்சி, அறிவு என்ற மூன்றிலும் தாக்கம் செலுத்த வேண்டும். இதற்கு உதாரமாக மல்லிகை சி.செழியன் "நிஜம்" என்ற தலைப்பில் எழுதிய கவிதையைக் கூறலாம்.

"மக்களெல்லாம்
மழைவேண்டி
மனுச்செய்தார்கள்
குடை வியாபாரிகள்
கோடீஸ்வரர்களானார்கள்"

இங்கு ஒருவனின் வேண்டுதலில் இன்னொருவர் உயிர்வாழ்கிறார். ஒருவரின் ஏக்கம், துன்பம் இன்னொருவரின் இன்பம் என்ற உணர்ச்சிகள் படிம அமைப்பில் வெளிக்காட்டப்படுவதைக் காணலாம்.

"படைப்பின் உச்சியில்
மானுட மகுடம்
அதில்
வியர்வைத்துளிகள்
கோகினூர் வைரங்கள்"

அப்துல் ரகுமான்

இப்படிம அமைப்பு வருத்தம், இன்பம் என்ற உணர்ச்சிகளைக் காட்டுகிறது.

இத்தகைய படிம அமைப்பு கொண்ட கவிதைகள் புதுக்கவிதை உலகினுற் பிறவேசித்துள்ளது. இவ்வடிவம் மூன்று, நான்கு வரிகளை உள்ளடக்கியது. 1973ம் ஆண்டு உதயம், நீ போன்ற குட்டிக் கவிதைத் தொகுப்புகள் வெளிவந்தன. சில சமயங்களில் இவை விடுகதைகள் போன்றும் தோற்றமளித்தன. இது ஜப்பானில் "ஹைக்கூ" என்றழைக்கப்படுகின்றது. எமது நாட்டில் சு.முரளிதரனின் "கூடைக்குள் தேசம்" என்ற கவிதைத் தொகுப்பு இத்தகையதே.

குறியீடு என்பதைனை நோக்கின் கவிஞன் தான் சொல்ல நினைத்ததை நேரடியாகக் கூறாமல் வேறொரு பொருளின் துணையோடு விளக்குதல் சங்ககாலத்தில் உள்ளுரை, உவமம், இறைச்சிப்பொருள் என்று

கூறப்பட்டது. இக்குறியீடு இன்று நாடக முறையில் பெரிதும் கையாளப்படுகிறது. இதற்கு உதாரணமாக அப்துல் ரகுமானின் பின்வரும் வரிகள் பதில் கூறுகின்றன.

"உழைப்பவர்க்கே ஆள்கின்ற
உரிமையுண்டு என்றதொரு
உண்மையை உலகமெல்லாம்
உணரட்டும் என்றோ
உடலிலே எத்தனையோ
உறுப்பிருக்க-இயற்கை
நமது விரல்களுக்கே
நக மகுடம் சூட்டியது"

இனி அங்கதம் என்பதனை நோக்கின் அறியாமை, மூடநம்பிக்கை, உயர்வுச் சிக்கல், தாழ்வுச் சிக்கல் என்பவற்றை சுட்டிக் காட்டுவதற்கு கையாளப்படுவது. இதனை "விருட்சப்பதியங்கள்" கவிதைத்தொகுப்பில் வி.சிவக்குமார் என்பவர் எழுதிய "ஏக்கம்" என்ற கவிதையில் காணலாம்.

"வாக்குரிமை பெற்றிருந்தும்
வீட்டுரிமை கிடைக்வில்லை
எட்டு மணி வேலைசெய்தும்
ஏற்ற கூலி கிடைக்கவில்லை

எத்தனையோ வாக்குறுதி
எற்ற வழி செய்வோமென்று
அத்தனையும் தேர்தல் வரை
எவரிடம் போய் சொல்லுவது"

இங்கு வாக்காளர்களின் அறியாமையும், அரசியல் வாதிகளின் பொய்ப் பிரச்சாரங்களும் நக்கலாகக் கூறப்படுவதைக் காணலாம்.

"முரண்" பற்றி நோக்கின் இது மரபுக் கவிதையிலும் காணப்படுகின்றது. இது ஒரு அனணி, அலங்காரம். புதுக்கவிதையாளர்கள் இதனை ஒரு உத்தியாகக் கையாள்கின்றனர். இதனை நா.காமராசனின் "காட்டுக் குறத்தி" என்ற கவிதைத்தொகுதியில் வெளிப்படுத்தியுள்ளார். இதற்கு உதாரணமாக "தீர்க்கரேகை நீலமணி" யின் கவிதையினை நோக்கலாம்.

"உழைத்தால் உயரலாம்
உழைத்தால் உயரலாம்
என்பது பழைய பல்லவி
அது சரி,
யார் உழைத்தால் யார் உயரலாம்?
என்பது புதியக்கேள்வி"

இவைப் போன்ற இன்னும் பல உத்திகளைக் கையாண்டு நவீன கவிதை வளர்ச்சியுற்று வருகிறது. இதன் வளர்ச்சியினால் நவீன கவிதை உலகின் சிந்தனைப் போக்கையே மாற்றியமைக்கும் என்பதில் ஐயமில்லை.


உசாவியவை:-

1.இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி-கலாநிதி துரை மனோகரன்.

2. தமிழ் இலக்கிய வரலாறும் தொகுப்பும்-சாந்தையூரான்.

3. விருட்சப்பதியங்கள்

4.கொந்தளிப்பு-இதழ் 45



Latha Jewellery

Dealers in Gold, Silver & Everbrite Stainless Steel

லதா ஜுவலர




No.19, Main Street,
Hatton.
Tel : 051-22685

# மலையகமும் புதுக்கவிதையும்.

**திருமதி.மா. சந்திரா**

சிங்களவர், தமிழர், பறங்கியர், முஸ்லிம்கள் வாழும் இலங்கைத்தீவில் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் உரிமையை இறுதிவரை காத்து வந்த பிரதேசம் மலையகமாகும். இயற்கைத் தாய் கருணையுடன் அருளிய நீண்டுயர்ந்த மலைத்தொடர்களும், செங்குத்தான கற்பாறைகளும், வளைந்து ஓடும் ஆறுகளும் சத்தமின்றி ஒளியெழுப்பும் நீர் வீழ்ச்சிகளும் மலையகத்துக்கு கிடைத்த வரப்பிரசாதங்களாகும். கூடவே வனவிலங்குகளும் மழைவீழ்ச்சிகளும் மலையகத்துக்குரிய அரண்களாகவே விளங்குகின்றன. எனினும் இயற்கையை ஆதாரமாகக் கொண்டு மலைநாட்டு மக்களின் வாழ்க்கையை படம் பிடித்துக் காட்டும் ஊடகமாக மலையக இலக்கியங்கள் காணப்படுகின்றன. அவற்றில் புதுக்கவிதையின் பங்கு தனிச்சிறப்பாகும் எனக்கூறின் மிகையாகாது.

மேற்கூறப்பட்டது போன்று இயற்கை அழகுடன் மேலோங்கும் மலையகத்தின் வரலாற்றுக் கதையோ பெரியதாகும். “காகம் இல்லாத ஊரும் கிடையாது தமிழன் இல்லாத நாடும் கிடையாது” என்பதனை பழமொழியாகவோ அல்லது புது மொழியாகவோ கொண்டாலும் அவற்றின் ஆதாரமாகவே இலங்கையிலும் தமிழர்கள் பெருகிப் பல்கி வாழ்கின்றனர். மலையகமும் தமிழ் பேசும் பிரதேசமாகவே வளர்ந்துவந்துள்ளது. இந்த தமிழ் பேசும் மக்களில் தொன்னூறு சத வீதத்தினர் தோட்ட தொழிலாளர்கள் ஆவர். தொழில் சுத்தமும், எசமான பக்தியும் நாணய நடத்தையும் அவர்களின் பாரம்பரிய அணிகளன்களாகத் திகழ்ந்து வருகின்றமை கவனிக்கத்தக்க ஓர் விடயமாகும்.

மலையக தமிழர்கள் அனைவரும் இந்தியர்களாவர். இவர்கள் இலங்கைக்கு வருவதற்கு காரணம் உழைத்து முன்னேறவே இவ்விதம் வந்த மக்கள் கூட்டத்தினர் அது நாள்வரை மனிதக் காலடி படாது கிடந்த வனப்பிரதேசத்தில் கடுமையாக உழைத்தனர். மலைப்பிரதேசத்து நிலம் அவர்களின் கரம் பட்டதால் பூத்துக் குழுங்கியது.

வானுயர்ந்த மலைகளும், காடுகளும், காட்டாறுகளும் அவர்களுக்கு அடங்கி வழிவிட்டன அவர்கள் உண்டாக்கிய கோப்பித்தோட்டங்கள்,தேயிலைத்தோட்டங்கள் தென்னந்தோப்புகள், இறப்பர் தோட்டங்கள் ஆகியன இலங்கையின் பொருளாதாரத்தைச் செளிக்கச்செய்தன எனக் கூறப்படுவதில் ஐயமுமில்லை. இது போல மலையக வரலாறு காணப்படுகின்ற போதிலும் உலகெங்கும்

தமிழருடைய பழமை தொடர்புள்ள வரலாறு காணப்படுவதாக உலக வரலாற்றினை எழுதிய எச்.ஜி.வெல்ஸ் குறிப்பிட்டுள்ளமை கவணிக்கத்தக்க அம்சம் எனக்கூறின் மிக்பொருத்தமாக அமையும்.

இதனைப் போன்று இலங்கையில் தனக்கென ஒரு இடத்தை வசமாக்கிக் கொண்ட மலையக மக்கள் இலங்கியங்களை படைப்பதிலும் தங்கள் செல்வாக்கைச் செலுத்தினர். இலக்கியங்கள் எனும் போது சிறுகதை, நாவல், நாடகம், கவிதை போன்ற வற்றைக் கூறலாம். மலையகத்தில் சிறுகதை, நாவல் எழுதும் எழுத்தாளர்களில் சம்பந்தன், அ.செ.முருகாநந்தன், சி.வி.வேலுப்பிள்ளை, பூரணி போன்றவர்களும் நாவலாசிரியர்களில் நடேசையர், அந்தனிஜீவா, செ.கணேசலிங்கன், போன்றவர்களும் கவிதைத் துரையில் சி.வி. குறிஞ்சித்தென்னவன் போன்றவர்களும் இலக்கியத்துறையில் ஆற்றிய பங்கினை நல்ல எடுத்துக்காட்டாக கூறலாம்.

இலக்கியங்களில் பிரியமாக கற்கும் இலக்கியமாக கவிதை விளங்குகின்றது. கவிதை எனும் போது இசை, செய்யுள், பா, கவி போன்ற நாமங்களில் பேசப்படுவதைக் காணலாம். "இசைக்கு உருகார் எதற்கும் உருகார்" என்று கவிதையை சிறப்பித்துக் கூறுகின்றனர். அத்துடன் கவிதையை மரபுக்கவிதை, புதுக்கவிதை என ஆய்வாளர்கள் பிரித்து ஆராய்வர். மரபுக்கவிதை எனும்போது யாப்பு நெறிப்பட்ட கவிதை எனக்கொள்ளலாம். "ஆசானும் அகராதியுமின்றி உட்புக முடியாத இரும்புக் கோட்டை" என மரபுக்கவிதை வர்ணிக்கப்படுகின்றது. உதாரணமாக சங்கச்சான்றோர் இலக்கியம் நெஞ்சையல்லும் சிலப்பதிகாரம், வான்மறையாம் திருக்குறள் போன்றவைகள் மரபுக்கவிதைகளாகும். மலையக மரபுக்கவிதைகளை எடுப்போமானால் சி.வி.வேலுப்பிள்ளை, குறிஞ்சித் தென்னவன் எழுதிய கவிதைகளை மரபுக்கவிதைகளில் அடக்கலாம் எனக் கூறின் பொருத்தமாக அமையும்.

மரபுக்கவிதையை உடைத்து எறிந்து விட்டு பாரதி நவீன கவினைதயை காலத்தின் தேவையரிந்து படைத்தார். இதனைத்து தொடர்ந்து மக்களின் தேவையறிந்து காலத்திற்கேற்ப பாமர மக்களும் பொருள் அறியும் வண்ணம் எழுந்ததே இந்தப் புதுக்கவிதை ஆகும். மலையகத்தில் புதுக்கவிதை எழுத்தாளருள் முன்னனியில் திகழ்பவர்களில் தற்போதைய ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி அதிபர் சு.முரளிதரன் அவர்களும், இரா.நித்தியாநந்தன் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். அத்துடன்

பார்த்தீபன், க.ஆதவன், வெளிமடை ரபீக், மல்லிகை சி.குமார், இராகலை பன்னீர், கம்பளை க.நாகபூஷனி, மதிவாணன் போன்ற கவிஞர்களும் புதுக்கவிதையில் ஆர்வம் காட்டுவதை அவதானிக்கலாம் புதுக்கவிதைக்கு உதாரணமாக

"இன்று நான் பெரிய பெண்
உறத்துச் சிரித்தல் கூடாது
விரித்த புகையிலை
அடக்கம், பொறுமை
நாணம் பெண்மையின் அணிகலம்"

என்பதைக் குறிப்பிடலாம் புதுக்கவிதை 1960 களின் இறுதியிலிருந்து வேமாக வளச்சிப் பெறாமல் இல்லை நவீன தமிழ் இலக்கிய உலகில் முற்போக்கு அணியின் மூத்த முன்னோடிகளாகத் திகழும் பேராசிரியர் க.கைலாசபதி, முருகையன், அழகிரி சாமி முதலியோர் புதுக்கவிதைக்கெதிராகத் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்துள்ளனர். அத்துடன் கவிதையை வரவேற்றகத் தயங்கினார்கள் எனக் கலாநிதி க.அருணாசலம் "மலையகத் தமிழ் இலக்கியம்" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

எனினும் காலம் யாருக்காகவும் காத்து நிற்காது அது தன் கடமையைச் செய்துக்கொண்டே இருக்கும். காலத்தின் தேவையாக உதித்துள்ள புதுக்கவிதை கடந்த கால் நூற்றாண்டு காலத்துள் தனது இலக்கிய அந்தஸ்த்தை திடம் பெறச் செய்துள்ளது. அதே சமயம் படைப்பதற்கு மிகவும் இலகுவானது என்ற தப்பபிப்பிராயத்தால் "புதுக்கவிதை" என்றப் பெயரில் குறும்புத் தனங்களையும், கோமாளி வித்தைகளையும் மேற்கொண்டு பலர் புதுக்கவிதையை அலட்சியப்படுத்தியுள்ளமை துரதிஷ்டமாகும். புதுக்கவிதையை வன்மையாக எதிர்க்கின்ற பலர் சுட்டிக்காட்டியுள்ள குரைபாடுகள் பல இருப்பினும் இன்றைய இளைய புதுக்கவிதையாளர்களையும் சிறப்பாகப் போற்றுதல் அவசியமாகும்.

அத்துடன் புதுக்கவிதை இன்றைய மக்களது வாழ்வின் அவலங்கள், போலித்தனங்கள், சிக்கல்கள், முரண்பாடுகள், நவீன சிந்தனைகள் முதலியவற்றை வெளியிடுவதில் புதுக்கவிதைகள் பல சிறந்து விளங்குவதை அவதானிக்கலாம். இவ்வகையில் கவிதைகளை எழுதியவர்களில் சு.முரளிதரன் அவர்களை எடுத்துக்கொண்டால் அவர் புதுக்கவிதைத் துறையில் முன்னனியில் நிற்கின்றார். அவர் படைத்துள்ள புதுக்கவிதைகளுள் "சமவெளி மலைகள்" தியாக யந்திரங்கள்" 1990

களில் "மனிதப் புதைக்குழிகள்" போன்ற கவிதைத் தொகுதிகள் சிறப்பானவை. 1986ம் ஆண்டுக்குப் பின் வெளி வந்த கவிதைகளுள் பல தரமிக்க கவிதைகளை வெளியிட்டுள்ளமை ஈன்று கவனிக்கத்தக்கதாகும். இதற்கு எடுத்தக்காட்டாக பின்வரும் கவிதையைக் குறிப்பிடலாம்.

"வரும் போதிருந்த
வறுமையை மட்டும்
ஒன்றரை நூற்றாண்டு
உடைமையாகக் கொண்டு
தேசத்துக்குத் தேயிலையும்
தேயிலைக்கு நாமுமென
ஆகிப்போன பந்தத்துக்கு
காகித ஒப்பந்த
நிர்ப்பந்தம் ஏன்?

மேற்கூறிய கவிதையில் இருந்து முரளிதரன் அவர்கள் தம்மைத் தொழிலாளர்களிலிருந்து வேறாக நோக்காது தாமும் தொழிலாளர்களுள் ஒருவராக நின்று அவலங்களும், துன்பங்களும், தியாகங்களும் மலிந்த அவர்களது சோக வரலாற்றை உள்ளக் குமுறலுடன் யதார்த்த பூர்வமாகவும் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். இவரைப்போன்றே இரா.நித்தியானந்தனும் புதுக்கவிதைகள் எழுதுவதில் முன்னனியில் இருப்பவராகும். இவர் "முகவரியைத் தொலைத்தவர்கள்" எனும் தலைப்பில் மலையக மக்களின் மீது கொண்டுள்ள பற்றுதலை எடுத்துக்காட்டுவதாக அமைந்ததில் வியப்பில்லை.

மேலும் புதுக்கவிதை எனும் போது வெறுமனே ஆலாபனங்களோ, வர்ணனைகளோ, சொற்சிலம்புகளோ இன்றிக் கச்சிதமாகவும், மிகப்பொருத்தமான முறையிலும் குறியீடுகளையும், படிமங்களையும், சொல்லாட்சிகளையும், சமூகநிலையையும், பிரச்சினைகளையும் உற்று நோக்கி அவற்றை யதார்த்த பூர்வமாக அனுகி சொற்சுருக்கத்தையும் பொருட் செரிவையும் உணர்பூர்வமான வெளிப்பாட்டையும் தந்து படிப்போரை ஆழமாகச் சிந்திக்க வைப்பது ஆகும்.

தென்னிந்தியாவில் இருந்து உழைப்புக்காக வந்த தமிழர்கள் மலையகத்தை தங்கள் சொர்க்க பூமியாக மாற்றியமைத்துடன இலங்கைப்பொருளாதாரத்தின் அச்சாணியாகவும் விளங்கி இலக்கியப்படைப்புகளையும் மேற் கொண்டனர்.அவ்வகை இல்ககியங்களுள் புதுக்கவிதை ஒரு சிறப்பிடத்தையும்

ஒரு புதுப் பரிணாமத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அவற்றுடன் படிப்போரை ஆழமாகச் சிந்திக்க வைப்பது புதுக்கவிதையின் மகத்துவம் எனலாம். இருப்பினும் பல எதிர்ப்புகளும் தோற்றம் பெற்றன சு.முரளிதரன், இரா.நித்தியானந்தன் போன்ற கவிஞர்களும் சோதனைகளையும், அவலங்களையும் அவற்றின் முடிவுகளையும் எடுத்துக் கூறத் தயங்கவில்லை எனக் கூறின் அது மிகையாகாது.

## ஆறாத ரணங்கள்

***சுப்பிரமணியம் மைதிலி***

உலகத்தில் ஜனனிப்பது
உயர்வான பேறு - இது
உலக மானிடத்தின்
ஒருமித்த எண்ணம்

பூமித் தாயை
புதிதாய் முத்தமிட்ட - ஒரு
புது மலரிது
பூவிலும் மென்மையானது.

அந்தோ பரிதாபம்
அவதரித்த மறுகணமே - இவன்
அன்னையை அவனித்தாய்
அள்ளிக் கொண்டாள்

பிறந்த தடயத்தை
தடம்புரள விட்டு - தன்
பின்புலத்தாரையும் இழந்து
தன்நிழலை தேடுகிறான்

கிள்ளை மொழியோ
பிள்ளை விளையாட்டோ
பள்ளிப் படிப்போ
எதையும் காணாதவன்

தினமும் அனுபவிப்பது
துப்பாக்கிச் சத்தத்தையும்
துர் மனிதர்களையும்
துன்ப ஓலங்களையும்.

பிள்ளையவனின் மனதிலே
பிண்ணப்பட்ட வளையாக
பீடிக்கப்பட்ட நோயாக
பிணைந்திருப்பது குரோதமே

ஆசைகள் சிதையாக்கப்பட்டு
எரியூட்டப்பட்ட இலட்சியங்கள்
ஓலங்கள் வாயிலாக
ஆறாத ரணங்களாக மனதில்

காயம் ஆறினாலும்
காயத்தில் பதிந்த
காய்ச்சிய ரணங்கள்
காலமது மாறினாலும்

ஆறாத ரணங்களே
ஆறாத ரணங்களே
ஆறாத ரணங்களே

# தமிழ் நாடகத்துறை வளர்ச்சி

**சின்னத்துரை அரிச்சந்திரன்**

19ம் நூற்றாண்டிலே தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் நாடகத்துறையிற் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதைக் காணலாம். அந்நூற்றாண்டிலும் கூத்துக்கள் ஆடப்பட்ட போதிலும் புதிதாக விலாசம் என்னும் நாடக வடிவம் தமிழ் நாட்டிலிருந்து இலங்கையில் அறிமுகமாகியது. விலாசங்கள் பார்ஸிய, மராத்திய நாடகக் கம்பனிகளினால் தமிழ்நாட்டில் அறிமுகமாகி, பின்னர் இலங்கையிலும் மேடையேற்றப்படத் தொடங்கின. விலாசம் என்பது சமஸ்கிருத நாடக வகைகளில் ஒன்றானமையாலும் இந்திய மரபுவழிப் பெயரானமையினாலும் இக்கம்பனிகள் தாம் நடாத்தும் நாடகம் இந்தியமயமான நாடகம் என்பதனை மக்கள் மத்தியில் உணர்த்த விலாசம் என்ற மரபுவழிப் பெயரை இந்நாடகங்களுக்கு இட்டிருக்கலாம் என்பார் கலாநிதி சி. மௌனகுரு. இவை மூன்று பக்கங்களும் அடைக்கப்பட்ட திரையமைப்புகள் கொண்ட அலங்கார மேடையமைப்புடன் அமைந்தவையாக விளங்கின.

தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் விலாசநாடகங்கள் ஆரம்பத்திற் கூத்து வடிவத்தை ஆதாரமாகக் கொண்டே அறிமுகமாயின. அதனால் கூத்துக்கள் சில விலாசங்களாகப் பாடப்பட்டன. வாளபிமன்விலாசம், விஜயதர்மவிலாசம், தர்மபுத்திரவிலாசம், இராமவிலாசம், மாணிக்கவாசகவிலாசம், நளச்சக்கரவர்த்திவிலாசம், மதனவல்லிவிலாசம், பூதத்தம்பிவிலாசம் எனப்பல விலாசங்கள் 1826முதலாக இலங்கையில் எழுதப்பட்டன.

விலாசங்கள் பழைய கூத்து முறையினின்றும், புதிய நாடக வடிவத்துக்கான ஆரம்பத்தையும் உணர்த்தின. விலாசத்திற்கு கர்நாடக இசையும், ஓரளவு ஆங்கில, ஹிந்துஸ்தானிய மெட்டுக்களும் உரைநடையாலும் அதிக இடத்தைப் பெற்றன. கூத்துக்குரிய ஆடலம்சம், விலாசத்தில் மெதுமெதுவாகக் கைவிடத் தொடங்கியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலம் கற்று கர்நாடக இசையிலும் ஈடுபாடு கொண்டிருந்த மத்தியதர வகுப்பார் இத்தகைய விலாசநாடகங்களை விரும்பி வரவேற்றனர்.

விலாசத்தினின்றும் அந்நூற்றாண்டில் வளர்ச்சிபெற்ற இன்னொரு வடிவம் “சபா” ஆகும். இவ்வடிவம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலிருந்து தமிழில் இடம்பெறத்தொடங்கியது. தமிழ் நாட்டில் 1889ம் ஆண்டு முதலாக இந்நாடக வடிவம் வளர்ச்சிபெறத் தொடங்கியது.

விலாசத்தில் காணப்பட்ட அம்சங்களோடு, மேனாட்டுத் தாக்கமும் சபாவின் வளர்ச்சிக்குக் காரணமாயிற்று. ஆங்கில இசைமெட்டுக்கள் "சபா" நாடகங்களில் முக்கியத்துவம் பெற்றன.

தமிழ் நாடகத்துறையில் சபா நாடகங்ளே முதன் முதலிற் காட்சிப்பிரிவுகளை கொண்டு நவீன நாடகப்போக்கிற்குக் கட்டியம் கூறி நிற்பதைக் காணலாம். ஆட்ட முறைகள் எதுவுமற்றவையாகச் "சபா" நாடகங்கள் விளங்கின. விலாசங்களை விடவும் இந்நாடக வடிவத்தில் உரையாடல்கள் முக்கியத்துவம் பெறத்தொடங்கின. 19ம் நூற்றாண்டு உரைநடை வளர்ச்சிபெறத் தொடங்கிய காலமாதலால், அந்நூற்றாண்டின் பிற்பகுதியிலே தோன்றிய சபா நாடகங்களிலும் உரைநடையில் அமைந்த உரையாடல்கள் முக்கியத்துவம் பெறத்தொடங்கின எனலாம். விலாசங்ளை விடவும் சபாக்களில் சற்று இலகுவான கர்நாடக மெட்டுக்கள் பயன்படுத்தப்பட்டன. இந்நாடகங்களின் வளர்ச்சியில் ஆங்கிலம் கற்ற மத்தியதர வகுப்பாரின் பங்களிப்பு அதிகமானது. அதேவேளை இலங்கையில் சபாநாடகங்களினால் புதிய கருப்பொருளும், புதிய பாத்திரங்களும் புதிய உருவம் பெற்று தமிழ் நாடகம் ஒரு புதிய மரபினைப்பெற்றது. எஸ்தாகியர் சபாஞானசௌந்தரி நவரசசபா, நவீனகன்னி சபா முதலான சபாநாடகங்ள் இலங்கையில் தோன்றின.

சபாநாடகங்களில் நின்றும் கிளைத்தெழுந்த பிரிதொரு நாடக வடிவம் "டிறாமா மோடி" நாடகமாகும். வசனத்தில் அமைந்த உரையாடல்களை மிக அதிகமாகக் கொண்ட இந்நாடகங்களில் இயல்பாக வசனங்களைப் பேசும் முறையும், மெட்டுக்களைக் குறிப்பிட்டு பாடல்களை அமைக்கும்போதும், திரைகள் மூலமாகக் காட்சி மாற்றங்களை உணர்த்தும் பாங்கும் இடம்பெற்றன. இவை இத்தகைய நாடகங்களுக்குப் புதிய வரவேற்பைப் பெற்றுக்கொடுத்தன. அண்ணாவி மரபு நாடகம், இசைநாடகம், விஷேட நாடகம், கொட்டகைக்கூத்து முதலான பல பெயர்களாலும் இந்நாடகம் குறிப்பிடப்பட்டது. இலங்கையில் சங்கிலியன்நாடகம், யோசேப்பு நாடகம் முதலியன நூல் வடிவம் பெற்றுள்ளன.

அதேவேளை, 19ம் நூற்றாண்டு பல மரபுவழிக் கூத்து ஆசிரியர்களையும் நாடகத்துறைக்கு அளித்தது. மாதோட்டம் லோறஞ்சுப் புலவரின் பேரன் கீத்தாம்பிள்ளை, ஆறுமுகநாவலரின் தந்தையார் கந்தப்பிள்ளை, மாணிப்பாய் சுவாமிநாதர் அராலிமுத்துக்குமாரப்புலவர். உடுப்பிட்டி குமாரசுவாமிப்புலவர், எருக்கலம்பிட்டி பக்கீர்ப்புலவர், தாவீது கொஸ்தீன், அச்சுவேலி தம்பிமுத்துப்பிள்ளை, கொக்குவில் விஸ்வநாத

சாஸ்திரி, நாகேசுஐயர், வை.இராமலிங்கம், புலவர் சுவாமிப்பிள்ளை முதலானவர்கள் நாடகவளர்ச்சிக்குத் தமது பங்களிப்பினை நல்கினர்.

19ம் நூற்றாண்டிலே தமிழ் நாடகத்தின் களம் மேலும் விரிவு பெற்று, மலையகமும் அப்பிரதேசங்களுள் ஒன்றாக விளங்கத் தொடங்கிற்று அந்நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் நாட்டிலிருந்து இலங்கையின் பெருந்தோட்டங்களிற்குத் தொழிலாளர்களாக வந்தமக்கள் காமன்கூத்து, அருச்சுனன்தபசு, பொன்னர்சங்கர் முதலான சமயச்சடங்குகளுடன் இணைந்த கூத்துக்களை அறிமுகப்படுத்தலாயினர்.

* சான்றாதாரம்:-
இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி- கலாநிதி துரைமனோகரன்

---

## அரித்தெறிவோம் வேரோடு

**செல்வி. பாலறஞ்சனி ஜெகநாதன்**

பண்பாட்டு...
வேர்க்கிளைகள்
நிலமதிலே...
எங்கெங்கும்
ஆழமாக ஊடுருவி
படர்ந்து
கெட்டியானது.

பக்கமாய் உள்ள
கட்டிடமோ
பெண்ணாக;
பண்பாட்டு வேர்களதன்
இறுக்கத்தால்...
கட்டிடத்தில் வெடிப்பு
எங்கும்
இழையோட;

இன்னும் இன்னும்
வேர்களதன்
புரையோட்டம்
கூடிவிட
கட்டிடமோ
இடிந்து விழும்
நிலை காண:

வேண்டியது கட்டிடமா?
இல்லை
பெருமரமா?
காப்பது எதுவானாலும்
ஒன்றின் அழிவு
கண் முன்னே...

வெடித்துவிட்ட
கட்டிடத்தில் பயனில்லை.
இடித்துவிடு
பெரு மரமே
வேர்பரப்பி
செழிப்பாக வளர்வதற்கு
என்றுரைக்கும்
நிலையதற்கு!

உயிரற்றவற்றை
எல்லாம்...
உயிராகக் காப்பதற்கு;
உயிருள்ள
பெண்ணினத்தை
ஜடமாக்கும்
நிலை எதற்கு?

வளர்ந்து வரும்
பெரும் மரமே;
இன்னும் ஒரு
கட்டிடத்தை
இடித்து விட
வேர்பரப்பும்;
அதற்கு முன்னே..

மனிதத்துள்
மறைந்து கொண்டு
பெண்நிலையை
மழுங்கச் செய்யும்
மடமைகளை...
அறிவு என்னும்
அரி கொண்டு
அரித்திடுவோம் வேரோடு.

# தமிழ் மொழியை பயிற்றும் நோக்கங்கள்

செல்வி. கனேசன் விஜயபாரதி

இவ்வுலகில் நூற்றுக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. பிறந்தது முதல் இறக்கும் வரை ஒருவர் பேசியும் கேட்டும் வரும் மொழியே தாய்மொழி எனப்படும். குழந்தைக்கு இயல்பான மொழியும் அதுவே. ஒரு தாய் தன் குழந்தைக்குப் பாலூட்டும் பொழுதும், தாலாட்டும் பொழுதும், சீராட்டி, பாராட்டும் பொழுதும் பேசும் மொழியைத்தானே தாய்மொழி என்று சொல்ல வேண்டும். இச்சிறப்புக் கருதியே நமது தாய்மொழியாகிய தமிழ் மொழியை ஆன்றோர் "பால்வாய்ப் பசுந்தமிழ்" என்று சிறப்பித்துள்ளனர்.

மொழி சமூகத்தில்தான் வளர்ச்சிபெறும்; மொழியின்றேல் மக்கள் சமூகமாக இயங்க முடியாது. எனவே ஒன்றுப்பட்ட பொதுவாழ்க்கைக்கு மொழி இன்றியமையாதது என்பது பெறப்படுகின்றது. அன்றாட வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர் உறவாடுவதற்கும் மொழியே சிறந்த கருவியாக கொண்டிருக்கின்றனர். பொதுவாக நாம் நமது எண்ணங்களை பேச்சு மூலமாகவும், எழுத்து மூலமாகவும் வெளியிடுவதற்கு நமது தாய்மொழியையே கையாளுகின்றோம். பல்வேறு வகைப்பட்ட கொள்கைகள், சமயங்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், குலங்கள் ஆகியவற்றால் வேற்றுமையுற்ற பல பிரிவனர்களும் பேசும் தாய்மொழியால் ஒன்றுபடுவதைகாணும் பொழுது தாய்மொழியின் பேராற்றலை என்னவென்று கூறுவது? இத்தகைய சிறப்பு வாய்ந்த தாய்மொழிக், கல்வித்திட்டத்தில் முதலிடம் பெறுவதில் வியப்பொன்றும் இல்லை. எனவே தாய்மொழியாசிரியர்கள் தமிழை கற்பிக்கும் முன்னர், கற்பிக்க வேண்டிய நோக்கங்களை அறிந்து கற்பித்தல் இன்றியமையாதது. அந்நோக்கங்கள் யாவை என்பதை ஈண்டு நோக்குவோம்.

**1. மனதில் உள்ளவற்றை வெளியிடல்**

மொழியின் மூலமாகத்தான் நமது எண்ணங்கள், கருத்துக்கள், உணர்ச்சிகள் முதலியவற்றை தெரிவிக்கின்றோம். பேச்சாலும், எழுத்தாலும் பிறர் கருத்துக்களை அறியமுடிகிறது. மக்களின் பொது வாழ்க்கைக்கு இன்றியமையாத தாய் மொழியைப்பயன் எய்தும் முறையில் மாணாக்கர்கள் திறமையுடன் கையாளக் கூடியவாறு கற்பிக்க வேண்டும். முதலில் வேண்டப்படுவது தெளிவே; இவ்விடத்தில் ஜார்ஜ் சாம்சன் என்ற ஆங்கில கல்வி நிபுணர் கூறியிருப்பதை கூறுதல் பொருத்தமாகும். "இங்ஙனம் நுண்ணிய எண்ணங்களும் தெளிவான கருத்துக்களும் தோன்றுவதற்கு ஆசிரியர் மாணாக்கரிடம் எளிய

இவ்வாற்றல்கள் சிறந்த குடிமகனாக வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாதவை. ஒரு நல்ல குடிமகனுக்குத் தெளிவான சிந்தனை, தெளிவான பேச்சு, தெளிவான எழுத்து ஆகிய திறன்கள் வேண்டப்படுபவை அல்லவா? வள்ளுவப் பெருந்தகையும்

"எண்பொருள் ஆகச் செலச்சொல்லித் தான் பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு"

என்று கூறியிருப்பது ஈண்டு சிந்தித்துணரற்பாலது. தாய்மொழி கற்பிக்கும் ஆசிரியர் இவ்வாற்றல்களை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

தாய்மொழியில் நல்ல புலமை பெற்றால்தான் ஒருவர் தம் உணர்ச்சிகளையும், உயர்கருத்துக்களையும், தெளிவாக வெளியிடமுடியும். அவருடைய படைப்பாற்றலும் ஒரு வளர்ச்சியை காணமுடியும். மாணவர்களின் முழு வளர்ச்சிக்கும் தாய்மொழிப் பயிற்சியே சிறந்ததோர் அடிப்படையாக அமைகின்றது என்று கூறலாம். தம் உணர்ச்சிகளை வெளியிடுவதில் அவர்களுக்கு ஒரு தனிப்பட்ட மகிழ்ச்சி ஏற்படுவதுடன், அவர்களுடைய மனம், ஒழுக்கம் முதலியவை பண்பட்டு ஆளுமை (Personality) சிறக்கவும் இடமுண்டு. எனவே தமிழ்மொழியாசிரியர்கள் இதனை நோக்கமாகக் கொண்டு பணியாற்றவேண்டும்.

**2. கற்பனையாற்றலையும் முறுகுணர்ச்சியையும் வளர்த்தல்**

தாய்மொழி இலக்கியங்களைத் துய்ப்பதனால் இவை இரண்டும் ஒருவர்பால் தாமாக வளரக்கூடியவை. தாய்மொழியாசிரியர்கள் செய்யுட் பாடங்களைக் கற்பிக்கும்போது இவை நன்கு வளரும் சூழ்நிலைகளை உருவாக்கலாம். இலக்கியத்திற்கு கருவூலமாகத் திகழ்வது கற்பனையாற்றல்; கவிதைக்கு இன்றியமையாததாக வேண்டப்படுவது அதுவே. முருகுணர்ச்சி என்பது அழகுள்ளவைகளை துய்க்கும் ஒரு வகை ஆற்றல்; அழகுள்ளவற்றை பொறி கருவியாகக் கொண்டு துய்க்கலாம்; கற்பனைச்சிறகு பெற்ற மனத்தாலும் துய்க்கலாம்; ஒரு இலக்கிய ஆசிரியர் புலன்களாலும், கற்பனையாலும் கண்டவற்றையே அவன் படைத்த இலக்கியங்களை படிக்கும் பொழுது நம்மையும் காணச்செய்ய வேண்டும்.

தமிழ் இலக்கியங்களில் நாம் எண்ணற்ற கற்பனைக் காட்சிகளைக் காண்கின்றோம். அக்காட்சியில் தோய்ந்து கிடக்கும் முருகுணர்ச்சியில் ஈடுபடுகின்றோம். இவ்வாறான ஒன்றிரண்டு காட்சிகளை காண்போம்.

பாரதியின் அடிச்சுவட்டில் வரும் பாரதிதாசன் காட்டும் முழுமதிக் காட்சியைப் பார்ப்போம்.

“நீலவான் ஆடைக்குள் உடல்ம றைந்து
நிலாஎன்று காட்டுகின்றாய் ஒளி முகத்தைக்
கோல முழுதுங் காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ?”

இயற்கையாகியபெண் தன் உடலையெல்லாம் நீலவானமாகிய ஆடையில் மறைத்துக் கொண்டு முகத்தை மட்டிலும் காட்டுகின்றாளாம். முழுவடிவையும் காட்டிவிட்டால் இவ்வுலக மக்கள் காதற் கொள்ளையில் இறந்துவிடுவார்களாம்.

சங்க இலக்கியங்களிலிருந்து தற்காலத்தில் தோன்றிவரும் இலக்கியங்கள் வரை உள்ள தமிழ் இலக்கியங்களில் இத்தகைய காட்சிகளை தம்மகத்தே கொண்டுள்ள பாடல்கள் எண்ணற்றவை காணப்படுகின்றன. எனவே தமிழ்மொழியை கற்பிக்கும் போது கற்பனையாற்றலையும் முறுகுணர்ச்சியையும் எடுத்துக்காட்டவேண்டும். கற்பனையாற்றலுக்கு அடிப்படை உள்ளத்தில் படிந்துகிடக்கும் உணர்ச்சியே. உணர்ச்சியும், கற்பனையும் ஒன்றையொன்று பின்னிகிடக்கும்; ஒன்று குறைந்தாலும் அதற்கேற்றவாறு மற்றையதன் ஆற்றல் குறைந்துவிடும். சிந்தனையும், காட்சித்திறனும் கலந்து உணர்ச்சிகளை வெளிபடுத்தும் இக்கற்பனையாற்றல் உயர்ந்த கவிஞர்களிடம் காணப்படும் ஓர் அருளாற்றல். இத்தகைய ஆற்றல் பொதிந்துள்ள பாடல்களைக் கற்பிக்கும்பொழுது மாணாக்கர்களிடம் மெய்மறந்து பாட்டுக்களைத் துய்க்கும் ஆற்றலை உண்டாக்கும் விதத்தில் கற்பித்தால் அவர்களாகவே இலக்கியங்களை படித்துத் துய்க்கும் திறமையை பெறுவர். ஆகவே, கற்பனையாற்றலையும் முறுகுணர்ச்சியையும் வளர்க்கும் விதத்தில் தமிழை கற்பிக்க வேண்டும்.

### 3. வழிவழி வரும் சமூக இயைவையும் பண்பாட்டையும் அறியும் திறவுகோல்.

எல்லா மொழிகளிலுமே அம்மொழி பேசுகின்றவர்களின் பண்டைச் சமுதாய வாழ்வையும், பண்பாட்டையும் அறிவதற்குரிய நூல்கள் இருக்கும்; பெரும்பாலும் இலக்கியமாகவும் வரலாற்று நூல்களாகவும் திகழும். ஆனால் தமிழில் வாழ்வை அடிப்படையாகக் கொண்ட இலக்கண நூல் இருப்பது அம்மொழியின் தனிச்சிறப்பாகும்; வாழ்க்கைக்கே இலக்கணம் வகுத்து காட்டிய பெருமை தமிழனுடையது. இவ்வுலகில் எம்மொழியிலும் இராத பெருமை தமிழ்மொழியில் காணப்படுகின்றது. புறநானூறு, அகநானூறு போன்ற சங்க இலக்கியங்களில் இருந்து பண்டைத் தமிழர்களின் சமூக வாழ்க்கையையும், பண்பாட்டையும்

அறிந்து கொள்ளலாமென்றாலும் 'இப்படித்தான் குறிக்கோள் வாழ்க்கை அமைய வேண்டும்' என்று தொல்காப்பிய பொருளதிகாரத்தில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. தமிழர்கள் வாழ்க்கையை அகவாழ்க்கை என்றும், புறவாழ்க்கை என்றும் இருகூறிட்டுப் பேசுவர். வாழ்க்கையின் குறிக்கோட்பொருளாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பகுதிகளில் இன்பத்தை அகத்திலும் ஏனைய மூன்றினை புறத்திலும் அடக்கினர். காதலை அடிப்படையாக கொண்ட வாழ்க்கையை அகப்பொருள் என்றும், போர், கொடை, நட்பு போன்றவற்றை அடிப்படையாக் கொண்ட வாழ்க்கையை புறப்பொருள் என்றும் இலக்கியங்களில் பிரித்துப் பேசப்படும். காதலையும், போரையும் சுவையாக உயர்த்திய பெருமை தமிழர்களுடையது. அகப்பொருள் குடும்ப வாழ்க்கைப்பற்றியது; உணர்ச்சியை தலைமையாகக் கொண்டு தனிவாழ்க்கையின் பல்வேறு இயல்புகளை பற்றி பகுத்துபேசுவது புறப்பொருள் உலக வாழ்க்கையாகிய பொது வாழ்க்கைப்பற்றியது; செயலை அடிப்படையாகக் கொண்டு உலக வாழ்க்கையின் பல்வேறு துறைகளைப் பகுத்துபேசுவது.

அன்றிலிருந்து இன்று வரையில் தோன்றியுள்ள இலக்கியங்களைப் படிக்கும் பொழுது அவை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அவ்வக்காலங்களில் வாழ்ந்த மக்களின் சமூகஇயலையும் பண்பாட்டையும் விளக்குவதை அறியலாம்.

**4. வாழ்க்கையை வளப்படுத்தி நீதிகளைப் புகட்டுதல்**

அன்றாட வாழ்க்கையில் மொழிப்பயன்படாத துறைகளே இல்லை. பேசுதல், கேட்டல், எழுதுதல், வாசித்தல் ஆகிய நான்கு மொழித்திறன்களும் அன்றாடம் பயன்படுத்தப்படுகின்றது. இம்மொழித்திறன்களை விருத்தியடைய செய்வது தமிழ்மொழியாசிரியர்களின் பாரிய பணியாகும்.

இளமையில் தாய்மொழிப் பயிற்சியின்றேல் சிறந்த மனப்பயிற்சி அமையாது. நாட்டு வரலாற்றை சரியாக அறிந்து கொள்ள இயலாது. ஒருவனிடம் மொழிப்பற்று, நாட்டுப்பற்று, நல்லொழுக்கம், இறையன்பு, ஏற்படுவதற்கு தாய்மொழி பயிற்சி மிகவும் இன்றியமையாதது. தமிழ்மொழி பயிற்சியினால் வாழ்வை வளப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

மனத்திலுள்ள கருத்தை தெளிவாக வெளிப்படுத்துவதற்கு தாய்மொழி பயிற்சி பெரிதும் துணைப்புரிகிறது. இத்தமிழ்மொழியே உயர்பண்புகளை ஒருவரிடத்தில் ஏற்படுத்தும் மனதில் உள்ள கருத்துக்களை கோவையாக வெளியிடல், கலைத்துறைகளில் இறங்கி உழைத்தல், போன்ற நற்பண்புகள் வளர்ச்சிபெறும் என மொழிமுறை அறிந்த மூதறிஞர்கள் மொழிகின்றனர்.

மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் உண்டாவதற்குத் தமிழ்மொழி மிகவும் இன்றியமையாதது. எல்லா மக்களும் தத்தம் தாய்மொழியை சிறப்பித்துப் பேசுதல் இயல்பெனினும் எம் மொழியும் பெறாத சிறப்பினை தமிழ்மொழிதான் பெற்றிருக்கின்றது.

பாரதியாரின் பாட்டுக்கள் நாட்டுப்பற்றை என்றும் வற்றாது சுரந்து நிற்கும் ஊற்றுக்களாய் திகழ்கின்றன.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே"

என்ற அடிகளுக்கு ஈடானவை எந்த மொழியிலாவது இருக்க முடியுமா?

"அறம்பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே"

என்று இலக்கணம் வகுத்த பெருமையும், நல்லொழுக்கம், கடவுள் அன்பு என்பன தமிழ்மொழிக்கல்வியின் கனிந்த பயன்களாகும்.

கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக
கற்றதனால் ஆய பயன்என் கொல் வாலறிவான்
நற்றார் தொழா ரெனின்?

என்பன போன்ற மறைமொழிகள் தமிழ்மொழியின் முடிந்த நோக்கத்தை உணர்த்தி நேரடியாகவோ, மறைமுகமாகவோ நீதிகளை புகட்டி அவர்கள் வாழ்வை செழிக்கச் செய்கின்றது.

முடிவாக நோக்கும் இடத்து உயர்ந்த மனவெழுச்சிகளையும், கற்பனையாற்றலையும் கொண்ட தாய்மொழி இலக்கியங்களை சுவைக்க முடியாது. தமிழ்மொழி எழிலுணர்திறனையும், கற்பனையாற்றலையும், நன்முறையில் வளர்க்கின்றது; வழி வழியாக வரும் சமூக இயலையும் பண்பாட்டையும், அறியும் திறவுகோலாகவும், பயன்படுகின்றது. வாழ்க்கையை வளப்படுத்தி நீதிகளை இனிய முறையில் புகட்டுகின்றது. மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் கூட நன்முறையில் அமைகின்றன. இத்தகைய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கற்பிக்கும் பட்சத்தில்தான் தமிழ்மொழி வளர்ச்சிப்பெறும்.

# தமிழும் நாமும்.

## எஸ்.கேதீஸ்வரன்

"தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" இது பார்போற்றும் பாவேந்தன் பாரதியின், படிக்க படிக்க உணர்வூட்டும் வாக்கியம் எந்த ஒரு மொழியும் காலத்தின் தேவைக்கேற்பவும், மாற்றங்களுக்கேற்பவும் தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டிய கட்டாளமும் தேவையும் உள்ளது. அவ்வாறின்றேல் வேகமாக வளரும் உலகில் மலரும் அறிவுத் துரைகளில் தன் முத்திரைகளைப் பதிக்க முடியாது முடங்கிக்கிடக்கநேரிடும். எனவே தான் நாம் சுந்தரத்தமிழ் என்று போற்றப்படும் செந்தழிழ் மொழியினை அதனுடைய கலை, கலாச்சாரம், நாகரீகபண்புகளோடு உலக அரங்கில் வளம் வருததற்கு உற்ற கடமைகளை செய்ய வேண்டியதாகின்றோம். அதற்காக எம் முன்னோர்களும் ஏன் நாமும் கூட எம் உயிரினும் இனிய தமிழுக்கு ஒன்றும் செய்ய வில்லையே என்று கூற விழையவில்லை.

"கல் தோன்றி மண்தோண்றும் முன்தோன்றிய மூத்ததமிழ்" என்ற சிறப்பான இடத்தை வரலாற்றிலேயே வரைத்துக்கொண்டுள்ள எம் தமிழ் மொழி வளர்ச்சியில் நாம் கடந்த காலங்களில் காட்டிய ஆர்வம் ஒன்றும் குறைவானது அல்லவே, எங்கெல்லாம் தமிழ் மக்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் எல்லா மட்டங்களிலும் எல்லா துறைகளிலும் தமிழ் மொழியின் வளர்ச்சி பற்றி பேசப்பட்டது. செந்தமிழுக்கான நாம் மகாநாடுகள் நடத்தினோம் ஊர்வலங்களில் கலந்து கொண்டோம், ஒளிகள் எழுப்பினோம் தீர்மானங்கள் நிறைவேற்றினோம். என்றாலும் கூட எம் முன்னோர்களினதும் எங்களினதும் எதிர்பார்ப்புகளுக்கு எற்ப அபிவிருத்தி கண்டோமா? என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். எனினும் ஒரு விடயத்தில் நாம் பெருமை பட்டுக்கொள்ள வேண்டியவர்களாகின்றோம். அதாவது தமிழ் மொழி வளர்ச்சியை காணாவிட்டாலும் கூட அதன் வாழ்விழந்து விடாமல் இருப்பதற்கு வேலி அமைத்திருக்கின்றோம். வேளாண்மை செய்பவன் அதற்கு உரமிட்டு நீர் வார்த்து ஊருக்கு அளிப்பதை விடுத்து வேளாண்மை செய்வதற்குரிய இடத்திற்கு வேலியை வளர்த்து பாதுகாத்ததாகவே கொள்வேண்டியுள்ளது.

பரந்து வாழும் ஒரு இனமாக பாரில் பலபாகங்களிலும் நாம் பரவியுள்ளோம். தமிழையே ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்ட அல்லது ஒரு தேசிய மொழியாக அங்கீகரித்துக்கொண்ட நாடுகளும் இல்லாமல்

இல்லை. எந்த ஒரு இனமும் தன்னுடைய அறிவின் வளர்ச்சியை அடுத்த தலைமுறைக்கு வழங்கிச்செல்ல வாய்பளிக்கும். ஊடகமாக மொழியையே பயன்படுத்த வேண்டியதாயிற்று சடங்குகள், சம்பிரதாயங்கள், மரபுகள், மதங்கள், கலைகள் என்பற்றினூடாகவே அறிவுக்கையளிப்பு நெடுங்காலமாக நடைபயின்று வருகின்றது. தமிழ் மண்ணில் உதித்த பலர் உள்ளார்ந்த வேட்கையோடு கூட்டமாகவும் தனியாட்களாகவும் நின்று தரணியிலே தேமதுர தமிழுக்காக தங்களையே அர்ப்பணித்துள்ளார்கள். அந்த வகையில் சங்கமைத்து தமிழ்வளர்த்த காலந்தொட்டு இற்றைவரை ஏராலமானோர் தமிழ் கூறும் நல்லுலகில் காலடிபதித்துச்சென்றார்கள். வடக்கேவேங்கடத்தையும் தெற்கே குமரிமுனையையும். எல்லைகளாகக்கொண்டு விளங்கிய சங்கம் நிலவிய கால எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்கள் தமிழுக்கே உரிய காதற்கருத்துக்களையும் வீரப்பண்புகளையும் அழகாக எடுத்தியம்பியுள்ளனர்.சங்கம்நிலவிய காலத்தில் வாழ்த்து மொழியும் பாராட்டும் உரியவர்கன்றி பிறருக்கு வழங்கா தீரமும் உறுதியும் உடைய பெரும் தொகைப்புலவர்கள் ஐந்நூறுக்கு மேற்பட்டோர் தோன்றி மறைந்ததாக வரலாறு எடுத்தியம்புகின்றது.

தமிழ் உலகில் இருபெருங்காப்பியங்கள் வெளிக்கொணர வழிவகுத்தது சங்கமருவியகாலமாகும் சேரன் குடியில் பிறந்த இளங்கோவடிகள் இளமையிலேயே தண்ணியத்தை தமிழருடைய பண்பாடிலும் கலைவளர்ச்சியிலும் ஈடு படுத்திக்கொண்டார். பிறநாடுகளிலும் போற்றப்பட்ட சிலப்பதிகாரம் எனும் சீரிய நூலினை தமிழ் உலகிற்கு அளித்த பெருமையும் பெற்றார்.

மதுரை கூல வணிகனார் மணிமேகலை எனும் மதச்சார்புடைய நூலை மன்னனுக்கு அளித்தார். இது தவிர இக்காலத்தில் எழுந்த உள்ளுவோர் உள்ளும் வள்ளுவனின் திருக்குறள் வான்புகழ் கொண்டதாக வையகமெங்கும் முத்திரை பதித்து தனது ஆயிரத்துமுந்நூற்றிமுப்பது குறட்பாக்கள் உலகையே அளந்து சென்றது. அந்த ஒருவனின் செயல் இன்றளவும் நிலைத்து நிற்பது ஒரு தெய்வீக செயல் அன்றும் இன்றும் என்றும் பொருந்தக்கூடியது. “கடுகை துளைத்தேழ் கடலைத்துளைத்து குருகத்தரித்த’ அவரது குறளின் பெருமையை பேசாத மொழிகளே இல்லை எனலாம்.

பக்திநெறி பெருக்கெடுத்தோடிய பல்லவர்காலமும் தமிழ் மொழியின் பண்பாடுகளையும் கலாசாரத்தையும் ஆன்மீக துறையோடு இணைத்து

வளர்ந்து வந்துள்ளது. வடமொழியின் செல்வாக்கு ஆங்காங்கே இக்காலகட்டங்களில் தலையை நீட்டினாலும் கூட எமது தமிழ் மொழி தனது தனித்துவத்தை இழக்காது வளர்ந்துள்ளது நமக்கெல்லாம் பெருமையே. பூமாலைகள் புனைந்தேத்தி இறைவனைப்பாடிய புலவர்களிடையே செந்தமிழ்ப்பாமாலைகளை பாடிச்சென்ற புலவர்களையும் பல்லவர்காலம் பிரசவித்தது.

பெருந் தொகைக்காவியங்களையும் காப்பியங்களையும் ஒரு சேர உலகிற்கு அளித்து முழு உலகையுமே தம்பால் ஈர்த்துக்கொண்ட ஒரு காலமாக சோழர்காலம் மிளிர்ந்தது. ஐம்பெருங்காப்பியங்களையும் மற்றும் பல வடிவங்களிலான நூல்களையும் தமிழ் இலக்கியத்திற்கே உரித்தாக்கிய உன்னத பொற்காலமாக போற்றப்படுகின்றது. நிறைய புவிச்சக்கரவர்த்திகள் தோன்றும் காலத்தில் கவித்துவமிக்க கவிச்சக்கரவர்த்திகள் தோன்றுவது ஒன்றும் புதியதல்லவே. அந்த வகையில் "கவிக்கோபுரம்' என்று போற்றப்படும் கம்பர் கம்பராமாயணத்தை உலகிற்கு அளித்தார். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு கம்பனின் பங்கு கணிசமான அளவு உள்ளதென்றால் அது மிகையாகாது.

சோழர் காலத்தின் பின் வந்த நாயக்கர் வம்சத்தினரின் ஆட்சியில் "வசைபாடக்காளமேகம்" எனப்பாராட்டப்பெற்ற காளமேகப்புலவர் மட்டுமன்றி இரட்டையர் அந்தகக் கவிவீரராகவமுதலியார் முதலியவர்களின் வசைக்கவிகள் தமிழ்மொழி வளர்ச்சிப்பாதையில் உரமிட்டு நீர்வார்த்தன.

அடுத்து வந்த ஐரோப்பியர் காலத்தில் ஆங்கில நாகரீகத்தொடர்பு தமிழ்மக்களின் வாழ்க்கை முறையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. பெருமளவு விஞ்ஞான சாஸ்த்திரங்கள், அகராதிகள், ஒப்பிலக்கணங்கள், ஆராட்சிநூல்கள் என்பன அக்காலத்தில் எழுந்ததோடு செந்தமிழ் மொழியின் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தின. எனினும் சேனாவரையர், பரிமேலழகர் போன்றோர் இலக்கண நூல்களுக்கு உரிய நடையில் உரையெழுதி தமிழுற்கேயுரிய சிறந்த செய்யுள் நடையில் மட்டுமன்றி பாராட்டத் தகுந்த உரைநடைகளையும் தோற்றுவித்து கூடிய ஆற்றலுடையது எமது தமிழ்மொழி என்பதை பறை சாற்றினார்கள்.

எந்த நாட்டினதும் எந்த ஒரு மொழியினதும் இலக்கயமானது காலத்தின போக்கிற்கு இணங்கவே தன்னுடைய வளர்ச்சிப்பாதையினை வரையறுத்துக்கொள்ள வேண்டியதாய் உள்ளது. அந்த வகையில் 19ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த வேதநாயகம்பிள்ளை, ராஜமையர், சுந்தரம்

பிள்ளை போன்றோர் இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியம் எவ்வழியில் செல்லப்போகின்றது என்பதை தமது நூல்களின் மூலம் தெளிவுபடுத்தினார்கள்.

அக்காலத்தில் தமிழ் உலகிற்கு விடுதலை வேட்கையும் வீர உணர்வுகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்றே தோன்றிய பாரதி பழகுதமிழில் கவிதை தந்த முதற்பாவலன் ஆகிறான். நூற்றாண்டு காலமாக பொதுசனங்களையும், பெண்களையும் அடிமைப்படுத்தி வைத்திருந்த சமூகத்தளைகளை அறுத்து எறியும் மனோநிலையை பாரதியிடம் பார்க்க முடிந்தது. அவரின் "சிட்டுக்குருவி, முதல் ஊழிக்கூத்து" வரையிலான நூல்கள் யாவும் பாமரன் முதல் படித்தவன் வரைக்கும் படித்தனுபவிக்கக் கூடியவாறு எளிய நடையில் அமைந்திருந்தது. தமிழ்மொழி புறவழியில் சென்று தன்னை மெருகுபடுத்திக்கொண்டு வளர புரட்சிக்கவி பாரதி வழிசமைத்தான். அது மட்டுமன்றி அவன் வழியில் பல கவிதைகளையும் செய்யுளிலக்கியங்களையும் இயற்றித் தமிழ்மொழியை அலங்கரித்த புலவர்கள் பலர். அவர்களுள் பாரதிதாசன், தேசியவிநாயகம்பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை, சுத்தானந்தபாரதியார், ச.து.சு.யோகிகள் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இராகப்பா என்ற இயற்பெயர் கொண்ட கவிஞர் கம்பதாசன் பாரதி வழிவந்த சிறந்த புலவன் என்று போற்றப்டுகிறார்.

இலங்கையில் வாழ்ந்த நவாலியூர் சோமசுந்தரப்புலவர் இளம்பிராயம் முதல் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு பாரிய தொண்டு ஆற்றியிருக்கிறார். தமிழ்இலக்கிய உரைநடை வளர்ச்சி ஆங்கிலக்கல்வி விருத்தியினாலும் ஐரோப்பிய தொடர்பினாலும் 19ம் நூற்றாண்டு இறுதியில் தமிழ்மொழியின் மீது காதல் கொண்டு இலக்கியம் சம்பந்தமாக ஆராட்ச்சிகள் பல செய்து அறிய கட்டுரைகளை வெளியிட்டதை மறந்துவிடமுடியாது. அவ்வாறானவர்களுள் சாமிநாதையர், வையாபுரிப்பிள்ளை போன்றோர் சிறப்பாக குறிப்பிடத்தக்கவர்கள். புதிய சிந்தனையைக் கொண்ட உத்வேகத்தில் உருவாகிக்கொண்டுவரும் சமுதாயம் ஒன்றினது மொழிநடையே உலக வாழ்க்கையினை உயர்த்துவதற்கு உதவுகிறது. எனவே பலைய உரை நடை சிறிது சிறிதாகக் கைவிடப்பட்டு காலத்தின் போக்கிற்கேற்ப புதிய உரைநடையை தமிழுலகிற்கு புகுத்தியவர்களுள் பாரதி, வ.வே.சு.ஐயர், சாமிநாதையர், கலியாணசுந்தரமுதலியார், மறைமலையடிகள், புதுமைப்பித்தன், போன்றோர் சிறப்பாகப் போற்றப்பட வேண்டியவர்கள் ஆவர். ராஜம்மையாரின் உரைநடையும் புதுவழியில் செல்லும் பண்பு வாய்ந்ததாகக் காணப்பட்டது.

புதுமைப்பித்தனே பேச்சுவழக்கினை தமிழிலக்கிய நூல்களில் புகுத்தி சிறுகதை, நாவல் எழுதிய முதல் எழுத்தாளராவார். பின் இந்த நடையை நிலைபெறச்செய்த எழுத்தாளர்களில் கு.ப.ரா, கல்கி போன்றோர் முக்கியமானவர்கள். விபுலானந்தஅடிகள் ஆராட்ச்சிக்கட்டுரை எழுதித் தமிழுக்கு தொண்டு புரிந்த பெருமகனார் ஆவார். பின் வந்த நாவலிலக்கியங்களுக்கு பி.எம்.கண்ணன், கல்கி, தி.நா.சுப்பிரமணியன், சாண்டிலியன், அரு.ராமநாதன், லட்சுமி, மாயாவி, மு.வரதராசன், ரகுநாதன், அகிலன், ஆர்.சண்முகசுந்தரம் போன்றோர் ஈடு இணையற்ற சேவை செய்துள்ளார்.

நா.பிச்சமூர்த்தி, ராமையா, ந.சிதம்பரசுப்பிரமணியன், எம்.வி.வெங்கட்ராமன் முதலியோர் தமிழில் சிறுகதை எழுதி பேர்போனவர்கள் 'மணிக்கொடிக்குழுவினர்" என அழைக்கப்பட்டவர்களில் மௌனி, கு.ப.ரா, புதுமைப்பித்தன் போன்றோர் முக்கிய இடத்தை வகிக்கின்றனர். இது தவிர கவிதை, ஓரங்கநாடகம் போன்ற விடயங்களிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட கு.ப.ரா கற்பனா சக்தியை தூண்டக்கூடிய வகையில் சாதாரண விடயங்களை வெளிக்கொணர்வதில் வல்லவராகத் திகழ்ந்தார்.

இவ்வாறு தமிழ்மொழி காலத்துக்குக்காலம் பல்வேறு வடிவங்களில் நெளிந்து வளைந்து தன்னை வளர்த்துக்கொண்டு வருகின்றது. "காலங்காலமாக கால் மிதிப்பட்டாலும் பூமியானது புதிய புஸ்பங்களை புஸ்பவித்தே தீரும் என்பதற்கிணங்க இன்றும் நெஞ்சு நிமிர்த்தி பல விடயங்களில் ஏனையோரை அசர வைக்கிறது.

அந்த வகையில் நாளைய உலகின் நம்பிக்கை நட்சத்திரங்களாய் மிளரப்போகும் மாணவர்களுக்கு தமிழின் மகத்துவம் பற்றியும் அதனை காத்து வளர்த்துச்செல்லவேண்டிய காத்திரமான பங்கு அவர்களுக்கு இருப்பது பற்றியும் எடுத்துக்கூறி தமிழ்மொழி திக்கெட்டும் பரவ வழிசெய்வோமாக.



# சுபத்திரன் என்றொரு கவிஞன்...



லெனின மதிவானம்
(விரிவுரையாளர)

ஈழத்துத்தமிழ் கவிதைப் பரப்பில் தமக்கென தனித்துவமான சுவடுகளைப் பதித்துக்கொண்டவர் அமரர் சுபத்திரனாவார். அவர் நேர்மைமிக்க அரசியல்வாதி, கவிஞர் என்பதோடு, களத்தில் இறங்கிச் செயற்பட்ட போர்வீரராகவும் எம்முன் காட்சியளிக்கின்றார். பொதுவுடமைக் கோட்பாட்டை ஏதோவொரு வகையிலும் அளவிலும் அவர் தனது கூரிய பார்வைக்கு உட்படுத்தி அதன் ஒளியிலே தனது சமுதாயத்தை பற்றியும், நாட்டைப்பற்றியும் கருத்துத் தெரிவிக்க காண்கிறோம்.

வாழ்வில் பல சமரசங்களையும் கைவிட்டு, சிதைந்த சிதைவுறுகின்ற மானிட நலனுக்கான பதாகையை உயர்த்திப்பிடித்த சுபத்திரன், அத்தகைய சமூகமாற்றப்போராட்டங்களை முன்னெடுப்பதற்கான ஆயுதமாகவே தமது கவிதையையும் பாவித்துள்ளார். அவ்வகையில் சுபத்திரனின் கவிதைகள் சிலவற்றினை தொடுத்து (1997) "பூவரசுகள்" இலக்கிய வட்டத்தினர் வெளியிட்டுள்ளமை பாராட்டத்தக்கதோர் முயற்சியாகும் இத் தொகுப்பு முயற்சியினூடாக கவிஞரின் கவிதைகளை இன்றைய தலைமுறையினர் கற்கவும், மறுவாசிப்புக்குட்படுத்தவும் ஏதுவாக அமைந்துள்ளது எனலாம். அவ்வகையில் இத்தொகுப்பில் அடங்கியுள்ள கவிதைகளை அறிமுகக்குறிப்புகளாக கூற விளைவது இக்கட்டுரையின் நோக்கமாகும். தன்னளவில் தானே ஓர் தலைமுறையினரின் காத்திரமான பிரதிநிதியாக இருந்தும், மனிதனுக்கு வரலாற்றின் நகர்வில் இருந்த ஈடுபாட்டை பின்வருமாறு தமது கவிவரிகள் கொண்டு தீட்டுகின்றார்.

"மக்கள் என்ற வைத்தியர்கள் தான்
எனது ஊமைக் கவிதைகளைப்
பேசச் செய்தனர்.
செவிட்டுக் கவிதைகளைக்
கேட்கச் செய்தனர்.
முடக் கவிதைகளை
நடக்கச்செய்தனர்
கோழைக் கவிதைகளைப்
போராடச் செய்தனர்"

இதற்கு மேலும் அழுத்தம் கொடுக்கும் வகையில் அவரது "மக்களே நமது பாடசாலை", "ஒளி" ஆகிய கவிதைகள் அமைந்து காணப்படுகின்றன.

மனித மேன்மை குறித்து கார்க்கி இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

"மனிதன்! எத்தனை கம்பிரமாய் இச்சொல் ஒலிக்கின்றது. எனக்கு மனிதனை விட சிறந்த கருத்துக்கள் இல்லை. மனிதன் மட்டுந்தான் எல்லா பொருள்களுக்கும், கருத்துக்களுக்கும் படைப்பாளி, அற்புதம் செய்வோன் அவனே! இவ்வுலகில் அற்புத அழகுப் பொருட்கள் எல்லாம் தனது உழைப்பால் ஆனவை. நான் மனிதனுக்கும் தலைவணங்குகின்றேன். ஏனெனில் மனித அறிவிற்கும் கற்பனைக்கும் அப்பால் நான் இவ்வுலகில் வேறொன்றையும் காணவில்லை"

மேற்குறித்த நாகரீகத்தின் பின்னணியில் மனிதன் குறித்து கவிஞர் கொண்டிருந்த நம்பிக்கை உணர்வானது, இவரது எழுத்திற்குரிய வீச்சாக அமைந்திருந்தது எனலாம்.

இது ஒருபுறமிருக்க இத்தொகுப்பில் உள்ள "பிணமாய் வாழ்பவன் பிழியும் கண்ணீர்" எனும் கவிதை, அவரது வாழ்வின் இறுதிக்காலத்தில் ஏற்பட்ட சூறாவளியைக் குறிப்பதாக அமைகின்றது. இரு வேறுபட்ட நாகரீகங்களின் முரணை, பரிமாணங்களை இங்கே சந்திக்கக்கூடியதாக உள்ளது. அவரது வரிகள்

நீ முதலாளித்துவத்தின்
சட்டங்களால்
கோட்டை அமைக்க
நினைக்கின்றாய்-நான்-அதை தகர்க்க
நினைக்கின்றேன்
உனது வீட்டின் மல்லிப் பந்தலின்
மலரை முகர்ந்தேன்.
சீ.....சீ...
மலச் சேறு வீழ்ந்து
இறந்து அழுகிய
நாயின் பிரேதமாய்
நாறுகிறது.
எனது கண்ணீர் துளிகளை நீ
மாலையாக கோர்த்து அணியும் போது
நான் கவலைப்பட வில்லை.
அந்த கண்ணீர் மாலைக்கு
பதக்கங் கட்ட
என் கண்களையும் அல்லவா
பிடுங்குகின்றாய்!

உண்மைதான். வாழ்வில் பிறிதொரு வேரிலிருந்து பிறக்கும்

மனிதர்களிடையே இத்தகைய உணர்வு அந்நியப்பட்டு நிற்கும். இப்பண்பு கவிஞனின் கவித்துவத்தோடு ஒன்று நடமாடுகின்றது.

சமூகத்தின் எண்ணற்ற முரண்களை நியாயப்படுத்தவோ, சமரசம் செய்யவோ முனையாத சுபத்திரன், சமூக புன்மையின் குருதி உறிஞ்சும் பண்பை இவ்வாறு தோலுரித்துக் காட்டுகின்றார்.

"என்னடா கணபதி
விளக்கு வைத்தபின்
வந்திருக்கிறாய்?
நாளை மிச்ச வேளையும் முடித்து
ஒன்றாய்க் காசை எடு" எனச் சொன்னவர்,
முதுகைப் பார்க்கின்றேன்.
விலாக்களில் முளைத்த
கோரப் பற்களாய்த்
திரு நீ றெனக்குத்
காட்சி தந்தது.
மெல்ல, மெல்ல நடந்து செல்கின்றேன்.
எனது வீட்டில்
இன்று இரவு
விளக்குமில்லை.
சோறுமில்லை.

இவரது மனித நேயம் என்பது உழைக்கும் மக்களை ஒட்டியதாய் கிளை பரப்புகின்றது.

இது போன்றே ஓராயிரம் ஆண்டுகளாக செல்லரித்துப் போன தமிழர் பண்பாட்டையும், சமூகப்பண்மைகளையும் தயவு தாட்சண்யமின்றி விமர்சிக்கும் கவிஞர் தான் சந்தித்த முக்கிய பிரச்சினைகளில் ஒன்றான சாதியக் கொடுமைகளை இவ்வாறு சாடுகின்றார்.

சாதிக்குள் தன் சாதி
உயர்ந்த தென்று
சாதிக்கும் ஒரு சாதி
மிருகக் கூட்டம்
சாதித்து விட்டார்கள்

என மனிதர்களின் நாகரீகத்தினை கேள்விக்குள்ளாக்கும் கவிஞன் அதற்கு எதிரான மக்கள் போராட்டத்தை இவ்வாறு வரவேற்கின்றான்.

எச்சாமம் வந்து
எதிரி நுழைந்தாலும்
நிச்சாமக் கண்கள்
நெருப் பெறிந்து நீராக்கும்.
குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகின்றேன். சங்கானையில்
மலர்ந்த மற்றொரு வியட்நாமே
உன் குச்சுக் குடிசைக்குள்
கொழுவிருக்கும் சாபத்தை
மெச்சுகின்றேன்! மெச்சுகின்றேன்!

(சங்கானை, வடஇலங்கையில் சாதிய எதிர்ப்புப்போராட்டத்தில் முக்கியமானதொரு கிரமமாக விளங்கியது)

கவிஞரின் இவ்வரிகள் அவரது நுண்ணுணர்வு மிக்க பரந்த இதயத்தை எமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது. கால நகர்வோடு விசாலிக்கின்றது.

இவ்வாறு தீண்டாமையொழிப்பு வெகுசன இயக்கப்போராட்ட காலத்தில் கவிதை படைத்தவர்களாக பசுபதி, கணேசவேல், முருகையன், (செவ்வியில் வடிவமாயினும், மக்களின் வெகுசனப் போராட்டங்களை இலக்கியமாக்கினார்) போன்றோர் ஒப்பிட்டுக் கூறத்தக்கவர்கள்.

இத்தொகுப்பில் உள்ள “கவிஞன்” என்ற கவிதை, கவிஞன் என்பவன் சில பலவீனங்கள் கொண்டவன் எனும், சீரழிந்த நாகரீகம் தொடர்பானது கண்ணதாசனின் பார்வையில் கவிஞன் என்பவன் பலவீனமானவனாகவே காணப்பட்டான்.

“கோப்பையிலே என் குடியிருப்பு....கோலமயில் என்துணையிருப்பு...” எனப்பாடிய கவிஞன் மனிதருக்குரிய நாகரீகம் பற்றி இவ்வாறு கூறுகின்றான். ஓவ் வசதியான ஒப்புவமைக்காக அவனது வாதங்களை நோக்குவோம். குடிப்பதும், தவறுகளுக்கென்றே தங்களை ஒப்புக்கொடுத்துவிட்ட

பெண்களுடன் ஈடுபடுவதும், ஒரு தனிமனிதன் தனது உடல் நிலைக்கும் வசதிக்குமேற்ப செய்யும் ஒன்றே தவிர, அதனால் சமுதாயத்தின் எந்த அங்கமும் பாதிக்கப்படுவதில்லை.
இத்தகையோர் பற்றி சுபத்திரனின் பார்வை,

"கவிஞன் என்பவன் கண்ணியமானவன்
கள்ளுக்குடிக்கலாம் கஞ்சா குடிக்கலாம்
குவிந்த முலைகளை காமத்தின்
சொற்களால்
கூதல் காய்ந்திடும் அடுப்பெனச்
சொல்லலாம்.
கவிதையாள் அதைத் தாய்மையின்
சாமியார்
மலைகள் என்றும் கும்பிட்டுப்பாடலாம்
புவியிலே அவன் போக்கைப் புரிந்திடப்
புறப்பட்டுப் போவோரெல்லாம்
பயித்தியக்காரரே!

என நையாண்டி தொனியில் மேற்குறித்த மனிதர்கள் பற்றி கவித் தீ உமிழ்கின்ற

தேன்மழையில் துளிர் பறிக்கும் பெண்ணே-உன்னை
தோகை மயில் என்ற சில பீரீதி நாய்கள்
காமநிலை கொண்டியற்றும் கவிதை கூற
காலெடுத்து நானிங்கு வைக்கவில்லை

இரு முரண்பட்ட நாகரீகத்தின் அர்த்தங்களை, பரிமாணங்களை, வீச்சுக்களை தரிசிக்கின்றோம்.

பாட்டாளி வர்க்க கலை இலக்கியம் என்பது ஆளும்வர்க்க கலையிலக்கிய உள்ளடக்கம், உருவகம் என்பவற்றிலிருந்து முற்றிலும் வேறானது. அவ்வகையில் மக்கள் இலக்கியப் படைப்பின் அழகியல் தன்மை என்பது பாட்டாளி வர்க்க உள்ளடக்கம், மக்களது இரசனை இயக்கங்களின் வளர்ச்சி என்பவற்றிலேயே தங்கியிருக்கின்றது என்பது சமூகவியல் நிலைப்பட்ட உண்மையாகும்.

அவ்வகையில் சுபத்திரன் தம் காலத்துக்கு உகந்த அழகியலைத்

சங்கமருவிய காலத்தில் இரட்டைக் காப்பியம் தோன்றியது. இதில் சிலப்பதிகாரம் முத்தமிழ் காப்பியம் என்று போற்றப்படுகிறது. இங்கு நாடகம் என்று கூறப்படுவது கூத்துக்களைதான். இவற்றை நாடக பாங்கில் வளர்த்தனர். கூத்தர், பொருநர், விரலியர், பாணர் என்போரின் ஆடல் பாடல்களில் உள்ளடங்கிய நாடகங்கள் இடம் பெற்றன என்பர். வசைக் கூத்து, புகழ்க்கூத்து, வேத்தியல் கூத்து, என பதினொரு வகையான கூத்துக்கள் இடம்பெற்றன. இவையும் நாடகத்தின் முன்னோடியென கூறப்படுகின்றது. இவ்வளர்ச்சி பல்லவர் காலத்தில் மேலும் வளர்ச்சியுறுகிறது. பேராசிரியர் கைலாசபதி தனது பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும் என்ற நூலில் ஓரிடத்தில் சமண பௌத்த பள்ளிகள் பற்றிக் கூறி செல்லும் போது பல்லவ அரசன் மகேந்திர வர்மனின் அங்கத நாடக நூலாகிய "மத்தவிலாச பிரகசனம்" என்னும் நூல் பற்றிக் குறிப்பிடுகிறார். முதன் முதலில் எழுந்த நாடக நூல் இது எனப்படுகிறது. இந்நாடக நூல் பற்றி மாமண்டூர்க் கல்வெட்டிலே காணலாம். இந்நாடகக் கலையின் பெருமையை மணிவாசகரின் பின்வரும் கூற்று பிரதிபலிக்கிறது.

"நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து
நானடுவே வீடகத்தே புகுந்திடுவான்"

சோழர் காலத்தில் கோயிலை மையமாகக் கொண்டு நாடகங்கள் எழுந்தன இராஜராஜேஸ்வர நாடகம் பூம்புலியூர் நாடகம் என்பன கல்வெட்டுக்கள் வாயிலாக அறியவருகின்றன. இதில் இராஜராஜேஸ்வர நாடகம் முதலாம் இராஜராஜன் தஞ்சையில் எடுப்பித்த பிரகதீஸ்வரர் கோயிலில் ஆண்டுதோறும் நடிக்கப்பட்டு வந்ததெனக் கூறப்படுகிறது பூம்புலியூர் நாடகம் கி. பி. 1119 இல் கமலாய் பட்டரால் இயற்றப்பட்டதென்பர். ஆனால் இவை நூல் வடிவில் கிடைக்கவில்லை.

நாடகமானது விஜயநகர நாயக்கர் காலத்தில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி, ஆகிய பிரபந்தங்களினூடாக வளர்ச்சி கண்டது. உழவன் உழத்தியர் வாழ்க்கையை சித்தரிக்கும் முக்கூடற்பள்ளு, குறவன் குறத்தியைப் பாத்திரமாக்க கொண்ட திருக்குற்றாலக் குறவஞ்சி ஆகிய இரு நூல்களும் நாடகப் பண்புள்ள இலக்கியங்களுள் சிறந்தனவாகும். இவற்றைப் போலவே நொண்டி நாடகமும் நாடகப் பண்புடன் விளங்குகின்றது.

ஐரோப்பியர்காலத்தில் நாடகமானது தெருக்கூத்து கம்பனிக்கூத்து, நவீன முறை நாடகம் என்ற முப்பிரிவுகளைக் கொண்டு எழுச்சி பெறுகிறது. இக்காலத்திலேயே நாடகம்பற்றிய வளர்ச்சியினை அறிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஐரோப்பியர் காலப்பிறபகுதியில் அருணாசலக் கவிராயரின்

இலட்சுமணன் பற்றிய அவரது வரிகள்.
சிவனு எதனைக் கேட்டான்?
அவன் உழைத்த பூமியிலே
அதற்கு முன்னர்
அவன் பூட்டன் சமாதியிலே
தனக்கும் ஒரு துண்டு
தா என்று கேட்டான்
துண்டு நிலம் தான் கேட்டான்
துவக்கால் அடித்து அவனை
தேயிலைக்கு உரமாக்கி
திருப்தி அடைந்தீரே!

என அமைந்துள்ளன. மலையக சமூக யதார்த்தத்தையும், மனித ஊடாட்டத்தையும் புரிந்து, அம்மக்களின் உணர்வுகளுடன், பிணைத்திருந்த தனியுடைமைக்கு எதிரான போராட்டத்தை, பார்வையை, முன்வைப்புகளை விட்டு, நிலத்தைச் சொந்தமாக்கி நிலத்துக்காக போராட முனைவதிலுமே மேற்குறித்த கவிதையின் நோக்கு அமைகின்றது.

சுபத்திரன் கவிதைகளை தொகுத்து நோக்குகின்றபோது பொதுவில் சராசரி புத்திஜீவிகளின் அரசியல் கடமையான சமூதாயத்தின் அசிங்கங்களை அழகுபடுத்துவதும், அநீதிகளை மூடிமறைப்பதுமான புன்மைகளைத் தாண்டி தனக்கே உரித்தான நேர்மையுடனும், திராணியுடனும், கவிதையினூடு புதிய சித்திரமொன்றை வரைய முற்பட்டிருந்தார்.

கவிஞரின் கவிதைகளின் வரலாற்றுக் கடமையைப் பொறுத்தும், அதன் பின்னணியைப் பொறுத்தும் சற்றே நிதானித்து, அவரது கவிதை வரிகளை இரவல் பெற்று பின்வருமாறு கூறத்துணியலாம்.

“பாடையிலே போவதற்கு முன்பு-இங்கே
புகழ் குவித்து வைப்பதற்கு பாடவில்லை”.
பாடையிலே ஏறுகிற வரையும் அந்தப்பாட்டாளி புரட்சிக்கே பாட வந்தேன்

சுபத்திரனில் காணக்கிட்டும் மனிதநேயமானது, மக்களை அரவணைக்கின்ற போது ஓர் தாயின் கரிசனையுடனும், எதிரியை எதிர்கொள்கின்ற போது, ஓர் போர்வீரனின் கோபாவேசத்துடன் வெளிப்படுத்துவதனை உணரலாம். இதுவே சுபத்திரன் கவிதைகளின் பல

மாக அமைகின்றது.

டேனை மேற்கோள் காட்டி அறிஞர் பிளக்னேவ் கூறுவதுபோல நாகரீகத்தின் பரிணாமத்தில் ஒரு புதிய அடிவைப்பு ஒரு கலைவடிவத்தை தோற்றுவிக்கும் போது, சமூதாயச் சிந்தனையை அரைகுறையாக வெளியிடுகிற பற்பல ஆற்றல்கள் அதை முழுமையாக வெளியிடுகிற ஓரிரு மகாமேதைகளைச் சுற்றிலும் தோற்றுவிக்கின்றன.

ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலப்பகுதியை மனங்கொண்டு பிளக்னேவ் கூறியது வடஇலங்கையின் தீண்டாமை ஒழிப்பு வெகுசனப் போராட்ட எழுச்சிக்கு வழிகோலிய கவிஞர் சுபத்திரனுக்கு அப்படியே பொருந்தும் என்பதில் ஐயமில்லை. வாழ்க்கை மீதான காதல், நேர்மை, நம்பிக்கை, உணர்வு என்பன திடுக்கிட வைக்கும் அளவுக்கு அவரது கவிதைக்கு வளம் சேர்ந்துள்ளது.

மஹாகவியை, நீலாவாணனை போற்றும், ஒளிவெள்ளத்தில் சுபத்திரன் போன்றோர் மறைக்கபப்டுவது தற்செயல் நிகழ்ச்சியல்ல.

இவ்வாறானதோர் சூழலில் தான், ஒரு தொகுப்பு போகும் அளவிற்கு கவிதைகள் எழுதி சாருமதி தனக்கென்று ஒரு தொகுப்பினை போடாமல் சுபத்திரன் கவிதைகளை தொகுத்து வெளியிட்டமை, தன்முனைப்பற்ற அவரது நாகரீகத்தினையும் இன்றைய மக்கள் இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பு என்ன என்பதையும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

மேலும் சுபத்திரன் என்ற கவிஞனின் அடுத்தகட்ட பரிணாமத்தை நாம் சாருமதியிலேயே காணக்கூடியதாக இருந்தது. இவ்விரு கவிஞர்களின் இறப்பு மக்கள் இலக்கியத்திற்கான பாரிய இழப்புகளாகும்.

சென்ற வருடம் ஆகஸ்ட்மாதமளவில் கொழும்பில் நடைபெற்ற கலாநிதி மௌனகுருவின் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் நூல் வெளியீட்டின் போது, அறிமுகவுரை நிகழ்த்திய சோ.தேவராஜா அவர்கள், கலாநிதி மௌனகுரு அவர்களும் சுபத்திரன் கவிதைகள் (சாருமதியின் தொகுப்பில் இடம்பெறாத சிலகவிதைகள்) சிலவற்றினை தொகுத்து வெளியிட உள்ளதாகக் கூறினார். இச்செய்தி மனநிறைவை தருகின்றது.

சுபத்தின் விமர்சனத்திற்கு உட்படுத்துவதன் மூலமாக எமது பார்வையை, பாதையை ஒழுங்கமைத்துக்கொள்ள அது ஏதுவாக அமையும். அத்தகைய விமர்சனங்கள் இனித்தான் தோன்ற வேண்டியுள்ளது.

# தமிழின் இனிமை

செல்வி. ஐசிக்கலா தங்கராஜ்

சுந்தர மொழியிதுவே – இதன்
சுகத்திற்கு இணையில்லையே!
சந்தனக் காற்றிதுவே – இதன்
சந்தத்திற்கு அளவில்லையே!

குழந்தை பேசும் மொழியிதுவே – ஆம்
குதூகலம் வீசும் மொழியிதுவே!
பழங்கதைகள் பல புசித்திடுமே – அதன்
பண்புகள் பாரில் ருசித்திடுமே

அமிழ்தினுமினிய மொழியிதுவே!
அவனியிலே வலம்வருமே!
தமிழ்தரும் இன்பத் தேனிதுவே – பற்றித்
தாகம் தீர்த்து பலம்தருமே

கனிகள்தரும் விருட்சமே – தமிழ்
கலங்கரை விளக்கமே
இனிமைகள் பெறும் மச்சமே – தமிழ்
இன்பமே உலகின் உச்சமே

# பெண்களால் தமிழ் மொழி வளர்ச்சி

திருமதி. லக்ஷ்மி திலகராஜ்

தமிழ் மொழியானது தன் வளர்ச்சியிலே பூரணத்துவம் பெற்றுள்ளது. சங்ககாலம் தொடக்கம் தற்காலம் வரையான தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆராய முற்படும் போது, அவ்விலக்கிய வரலாற்றிலே பெருந் தொகையான ஆண்புலவர்களும் எழுத்தாளர்களும் அதே போல் பெண் புலவர்களும் எழுத்தாளர்களும் தம் இலக்கிய பணியைத் தமிழ் பற்றோடு நிறைவேற்றியமை தெள்ளத் தெளிவாக புலனாகின்றது. கம்பர், ஒட்டக் கூத்தர், புகழேந்தியார் இன்னும் இருபதாம் நூற்றாண்டின் எழுத்தாளர்களான மணிக்கொடி ஆசிரியர்கள், கவிஞர்களான பாரதியார், பாரதிதாசன் போன்றோர் தமிழ் மொழி வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர்கள் என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை.

எனினும் பெண்கள் பக்கம் நோக்கின், ஔவையாரின் படைப்புக்கள் கற்கக்கற்க கரையாத நெஞ்சத்தவனையும் கரைய வைக்கும். இதற்கு இவரின் நீதி, அறம் போன்றவற்றை போற்றும் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி என்பன குறிப்பிடத்தக்கவை. இவை உலகோர் போற்றும் உன்னத கருத்துக்களைக் கொண்ட படிக்கப்படிக்க “தெவிட்டாத தேனைப் போன்றன”. ஔவையாரது பாடல்கள் சிறுவர்களுக்கும் இலகுவில் விளங்கக் கூடிய எளிய சொற்களில் அமைந்தவை.

அவ்வாறே காரைக்காலம்மையார் எழுதிய பக்திப்பாடல்கள் மனிதனது எண்ணங்களை இறைவன்பால் எழுப்பி உன்னத வாழ்க்கைக்கும் ஒழுக்க வாழ்க்கைக்கும் அவனை உயர்த்துகின்ற உயரிய பண்பைக் கொண்டுள்ளவை. இவரது செய்யுள்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பெரும் பேறானவை. இவருடைய அரும் பணிகாரணமாக இவருடைய வரலாறு பற்றிய பாடம் உயர் வகுப்புகளுக்கு சேர்க்கப்பட்டுள்ளது.

தற்கால பெண் எழுத்தாளர்கள் சிறுகதை, நாவல், சஞ்சிகை, கவிதை, கட்டுரைகள் என்பவற்றினூடே தமிழ் மொழி வளர்ச்சிக்கு பெரும்பணி ஆற்றி வருகின்றனர்.

பாடசாலைக் கல்வி ஆரம்பிக்கப்பட்ட 19ம் நூற்றாண்டிலிருந்து எழுத்தறிவானது பல்வேறு மட்டங்களிலும் பரவலாக்கப்பட்டது. அதிலிருந்து முறைசார் கல்வியாக ஆக்கப்பட்டு, பெண்கள் கல்வி கற்கத் தொடங்கியதும் தொடர்ந்து அவர்கள் புரட்சிகரமாகச் சிந்திக்கத் தொடங்கினார்கள். ஆண்களின் அதிகாரத்திற்கும் வேறு கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்ட எங்கள் புராதனப் பெண்களைப் போலல்லாது புதுமைப் பெண்களாகத் தாம் வாழ எண்ணினார்கள்.

இதன் விளைவாக உலகெங்கினும் பெண்புரட்சி ஏற்படத் தொடங்கியது. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலும் தென் ஆசியாவிலும் அதிகமாகப் பெண்ணாக்கங்களை வெளியிடும் முயற்சிகள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வூக்கத்தால் இலங்கையிலும் இந்தியாவிலும் பெண் எழுத்தாளர்கள் தோன்றினர்.

இப்படியான சாதக நிலை காரணமாக பெண்ணடிமைத்தனத்தை அறுத்தெறிவதை மையக்கருவாக கொண்ட பெண் எழுத்தாளர் வர்க்கம் தோன்றியது. இன்னும் பெண் கவிஞர்களும் உருவாகியதுடன் விழிப்படைந்தனர்.

பெண் விடுதலை, சமூகவிடுதலை சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் உரிமை, சிறுவர் துஷ்பிரயோகம் என்ற கருக்களை வைத்து ஆயிரமாயிரம் நூல்களை இந்தியாவிலும் இலங்கையிலும் வெளியிட்டதில் வியப்பில்லை.

அன்றும் இன்றும் வீரகேசரி, தினகரன் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் எத்தனையோ சிறுகதை, கவிதை, கட்டுரை எழுத்தாளார்கள் தோன்றி, தமிழை வளப்படுத்துவதை நாம் அறியக்கூடியதாய் உள்ளது. அதுமட்டுமா வானொலி தொலைக்காட்சி என்பவற்றினூடே சிறந்த பிழையற்ற கவிதை, பேச்சு, அறிவிப்பு, செய்தி வாசிப்பு ஆகியவற்றின் மூலமாக தமிழை வளர்க்க துணை நிற்பதை காணலாம். இவர்களின் தமிழ்ப்பிரயோகம் படைப்பூக்கம் என்பனவும் இதற்குக் காரணமாகும். இதற்கு உதாரணமாக பெரிய பெண் எழுத்தாளர்களான பவானி ஆழ்வார்ப்பிள்ளை, சிவசங்கரி என்போரை குறிப்பிட்டுக்கூறலாம்.

இலக்கியம் காலத்தின் கண்ணாடி. பூரண மனித சமுதாயத்தை தோற்றுவிக்கும் ஆற்றலும் பண்பும் இதற்குண்டு. நீதி அறம் விழுமியக் கருத்துக்களையும் உண்டுபண்ணி மனிதனை மனிதனாக வாழ வைப்பது. இத்தகைய சமுதாயத்தை உருவாக்கும் இலக்கிய படைப்பை படைக்கும் சக்தி எழுத்தாளர்களுக்கே உரித்தானது. இந்த எழுத்தாளர் இலக்கியப் படைப்பில் ஆண்புலவர்களுக்கு மாத்திரமின்றி பெண் புலவர்களுக்கும் சரிநிகர் பங்குண்டு. ஆகவே இப்பெண் எழுத்தாளர்களின் பெரும் பங்கான இலக்கிய படைப்பால், தமிழ் மொழி வளர்ச்சிக்கு சரிநிகர் துணை செய்யப்பட்டது என்பது குன்றின் மீதிட்ட விளக்கைப் போன்றது.

# வேண்டுகோள்

திருமதி.சி.சிரோண்மணி

என்னருமை தோழனே...
என்னுள் உன்னை நினைத்து
தினமும் புழுங்கித் தவிக்கின்றேன்.
எங்களை நம்பி
எத்தனை பாலகர்கள்
ஏக்கம் பெருமூச்சுகளுடன்
ஏழ்மைப் போர்வையை
என்றும் சொந்தமாக்கிய வண்ணம்
ஏணிப்படிகளில் ஏறுவதற்காய்
ஏனோ உனக்கு மட்டும்
இந்த உணர்வுகள் இன்னும்
பூச்சியப் புள்ளிகளாக
புதைந்து கிடக்கின்ற
எங்கள் வரலாறுகளை
பொறுக்கி எடுத்து
புத்தகமாக்கத்தான் உன்னை
வித்தியாசாலைக்கு வித்தகனாக
வழியனுப்பினர் பலர்
ஆனால் நீயோ
வெட்டிச் செயல்களில்
உன்னையும் வீணடித்து
உன்னுடன் நம்வரலாற்றை
மாற்றி அமைக்கப் புறப்பட்ட
புதிய நெஞ்சங்களையல்லவா
புரண்டு உதைக்கின்றாய்
புதியவர்களை புரிந்துக் கொள்வதில்
புதிர் ஒன்றும் இல்லை
புதுமை வதைகளால்
புண்ணாகும் உள்ளங்களில்
வேதனை பூக்களல்லவா
விளைந்து நிற்கிறது.
தோழனே... எங்கள் வரலாற்றில்
தொலைந்து போனவைகளை
மீட்டெடுக்கும் மீன்களாகவேஎம்மை
கலாசாலையின்
வெளியே சமுதாயக் கண்கள்
சந்திக்க காத்திருக்கின்றன
சரித்திரங்களை சாத்தியமாக்கி
சார்ந்திருக்கும் சமுதாயத்தின்
கண்களை திறக்கும்
ஒளிக்கீற்றாக நீ வருவாயென
பாதையில் விழிவைத்த வண்ணம்
எங்கள் சோதரர்கள்
இன்னும் உனது எதிர்பார்ப்பில்
தோழனே... பகிடிவதையின்
விம்பங்கள் இன்னும்
உனக்கு தேவைதானா?
உன்னுடன் வரும் உறவுகளையும்
கைகோர்த்தவண்ணம்
எம் ஏழ்மையையும் எண்ணத்தையும்
அறிவு ஒளிச் சுடராக்க
சமுதாய வேட்கைக்கும்
மலை மண்ணிற்கும்
விடிவு, வித்திடுகின்ற
கலை வித்தகனாக வெளிவர
இந்த ஏழைத் தோழனின்
இதய வேண்டுகோள்
எதிர்பார்புகளுடன்
எங்கள் மலையக விடிவுக்காக.

# தொல்காப்பியம் ஓர் அறிமுகம்

செ.செல்வராஜ்

எமக்குக் கிடைக்கின்ற மிகப்பழைய இலக்கண நூல் தொல்காப்பியமாகும். இதன் காலத்தைப் பற்றிய பிரச்சனையும் ஆசிரியரைப் பற்றிய பிரச்சனைகளும் உள்ளன. ஆசிரியர் தொல்காப்பியர் என்றும் இவர் அகத்தியரின் பதினைந்து மாணவர்களுள் ஒருவர் என்றும் கருதப்படுகின்றது. மேலும் இது ஒருவராலன்றி பலரால் எழுதப்பட்டது என்ற கருத்தும் காணப்படுகின்றது. தற்காலம் வரை பெரும்பாலான இலக்கண நூல்கள் தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டே இயற்றப்பட்டுள்ளன. இதில் மூன்று அதிகாரங்கள் உண்டு. அவையாவன.

1. எழுத்ததிகாரம்
2. சொல்லதிகாரம்
3. பொருளதிகாரம்

ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒன்பது இயல்கள் உண்டு. இதிலுள்ள பாக்கள் அகவல் யாப்பால் அமைந்துள்ளன. இப்பாக்களை நூற்பா அல்லது சூத்திரம் என்றழைப்பர்.

தனியெழுத்துக்கள், சொல்லில் எழுத்தின் நிலை, எழுத்துப் பிறக்கும் வகை (பிறப்பியல்), புணர்நிலையில் எழுத்தமைதி (புணரியல்) என்பவற்றை விரித்துரைப்பது எழுத்ததிகாரம். நூல் மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியல் (மெய்யெழுத்துக்கள்) குற்றியலுகரப் புணரியல் என்பன எழுத்ததிகார இயல்களாகும்.

எழுத்துக்கள், சொல்வகை, பெயர்கள், வேற்றுமை உருபேற்றல், விழிநிலையெய்தல், பெயர், வினை, இடை, உரி எனும் சொல்வகைகள் முதலியவற்றைக் கூறுவது சொல்லதிகாரமாகும். கிளவியாக்கம், வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விழிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்பன சொல்லதிகார இயல்களாகும்.

இன்ப ஒழுக்க இயல்பு, பொருள் அறவொழுக்க இயல்பு, களவு, கற்பு என்னும் இன்பவியற்கூறு உவமை, செய்யுள் இலக்கணம், உலகவழக்கு, செய்யுள் பொருளியல் வாழ்வில் நேரும் மெய்ப்பாடுகள் வழக்கு என்பவற்றின் மரபுகள் ஆகியவற்றைக் கூறுவது பொருளதிகாரமாகும். அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுள் இயல், மரபியல் என்பன பொருளதிகார இயல்களாகும்.

பொருளதிகார இயல்களாகும்.

எடுத்துக்கொண்ட பொருளின் அடிக்கருத்தை முதற்கண் கூறி பின்னர் வித்திலிருந்து கிளறும் முளை, இலை, தண்டு, கிளை, பூ, காய், கனி என்பவை போல பொருளைப் படிப்படியே வளர்த்து நிறைவிப்பது தொல்காப்பியர் நடைமுறையாகும்.

சிக்கல் எதுவுமின்றி எளிமையாக சொற்களை உபயோகித்து பொருள் கொள்ளுமாறு நூற்பா அமைப்பதும் எளிய சொற்களையே பயன்படுத்துவதும் தொல்காப்பியர் வழக்கம்.

(உ.ம்) 1. எழுத் தெனப் படுவ
அகர முதலா னகர இறுவாய்
முப்ப∴ தென்ப

2. ஓதல் பகையே தூதிவை பிரிவே

3. வண்ணந் தானே நாலைந் தென்ப

தொல்காப்பியம் பிற்கால இலக்கணப் பகுப்புக்களுக்கும் இடம் தருவதாக அமைந்துள்ளது. தமிழ் இலக்கணம் ஐந்திலக்கணமாக அண்மைக் காலம் வரை இயற்றப் பட்டது. ஐந்திலக்கணங்களாவன.

1. எழுத்து
2. சொல்

} எழுத்தின் அகஅமைப்பு பற்றியது

3. பொருள்
4. யாப்பு
5. அணி

} இலக்கியம் பற்றியது.

அறுவகை இலக்கணம் எனவும், ஓரிலக்கணமாகவும் இது கால் விரித்தது. இவ்விரிவுக்கு தொல்காப்பியம் நாற்றங் காலாக இருக்கின்றது.

எழுத்து, சொல், பொருள் என மூன்று பகுப்புகளால் தொல்காப்பியம் இயற்றப்பட்டுள்ளது. இதனால் தொல்காப்பியர் காலத்திலே தமிழ் இலக்கணம் மூவிலக்கணமாக இயங்கியமை வெளிப்படையாகும்.

அவர் கூறிய பொருள் இலக்கணத்தை தனித்தனியே வாங்கிக் கொண்டு அகப்பொருள், புறப்பொருள் என இலக்கணம் கூறும் நூல்கள் எழுந்தன. இது தொல்காப்பியருடைய பொருள் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு பகுக்கப்பட்ட பகுப்பாகும்.

அவர் கூறிய உவமை இயலையும் செய்யுள் இயலில் சில பகுதிகளையும் தழுவிக் கொண்டு வடமொழி இலக்கணத் துணையோடு அணி இலக்கணம் என ஒரு பகுதி உண்டாகி தமிழ் இலக்கணம் ஐந்து கூறுகளை உடையதாயிற்று.

எனவே மூன்றிலக்கணத்துள் ஆறிலக்கண கூறுகளையும் மேலும் பல விரிவாக்கங்களையும் கொண்டிருக்கின்ற மொழிக் களஞ்சியமாக தொல்காப்பியம் விளங்குகின்றது.

SEASONS

DEALERS IN FANCY GOODS STATINORY
&
EVERSILVER



No.325, MAIN STREET,
Hatton.
Tel : 051-22464

# "தமிழில் நாடக வளர்ச்சி" ஓர் அறிமுகம்

செல்வி. க. ஆனந்தி

"இயல் இசை என்னும் இரண்டையும் கலந்து ஒவ்வொரு கருத்தையும் கண்ணுக்குப் புலப்படும்படியாக அதற்கேற்ற ரூபாதாரங்களுடன் நடத்தி நடித்துக் காட்டுவதே நாடகம்".

- மகாகவி பாரதியார்

வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் அநுபவங்களையும் கண்முன்னால் காட்டுவதாக நாடகம் அமையும். பலரை ஒரு சேர மகிழ்விப்பதாகவும் கருத்துக்களைச் சாதாரண மக்களோடும் பரிமாறிக் கொள்வதற்கேற்ற சக்தி வாய்ந்த ஒரு ஊடகமாகவும் விளங்கும் நாடகம் ஒரு சமுதாய நடவடிக்கையாகவே கருதப்படுகிறது.

நாடகம் மக்கள் மனதைக் கவரக் கூடியது. இன்பந் தரினும் துன்பந்தரினும் மக்களை ஈர்க்க வல்லது. தொல்காப்பியர் கூட நாடகம் பற்றிக் கூறியுள்ளாரெனின் நாடகத்தின் தோற்றுவாய் பழமை வாய்ந்தது என்பதை அறியலாம். நாடகத்தின் தோற்றத்தினை சங்க காலத்திலேயே காணலாம்.

சங்ககால இயக்கியங்களில் நாடகம் என்றும் அபிநயமும் இசையும் இணைந்த ஆடலையே குறிப்பிட்டிருத்தல் வேண்டும். இப்பண்பினை சங்ககால இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டில் காணலாம். புறநானூற்றுப்பாடல்களில் அரசனின் கொடை, வீரம், புகழ் முதலியவற்றை தெளிவுப்படுத்த கையாண்ட முறைகளில் நாடக முறையும் ஒன்று என்று கூறப்படுகிறது.

புலவர்கள் தமது பாடல்களில் தலைவன், தலைவி, தோழன், தோழி, செவிலித்தாய், நற்றாய் முதலானோரின் உணர்ச்சிகளையே பாடினார். நாடகத்தில் கற்பனையாக சில பாத்திரங்களைப் படைத்து பேச செய்வது போல் சங்க புலவரும் மேற்கூறியவர்களை அவர்களின் உணர்ச்சிகளை அவர்களின் வாயிலாக புலப்படுமாறு பாடியுள்ளார். புலவர் தம் சொந்த உணர்ச்சிகளை பாடாமல் தாம் படைத்த கற்பனை மாந்தரின் உணர்ச்சிகளை பாடும் பாடல்களை நாடக பாட்டுக்கள் என்பர். ஆரம்பத்தில் சிறு சிறு பாடல்களால் பாடி பின் நீண்ட நாடக தன்மையுள்ள பாடல்களை பாடினார். பின் கற்பனையில் நாடக பாட்டுக்களை தந்தவர்கள் யதார்த்த உலகில் அவற்றைப் பாத்திரங்கள் வாயிலாக நடித்துக்காட்டினர் என்றால் மிகையாகாது.

துணையாகக் கொண்டு கவிதைப்படைத்துள்ளார். அவரது கவிதைகளில் அழகியல் இரசனை மாத்திரமல்ல செயல்திறனுக்கான உந்துதலும் இணைந்தே காணப்பட்டது.

தவிரவும் அறுபதுகளில் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கப்போராட்டம் எந்தளவு முனைப்புப்பெற்றிருந்ததோ அவ்வாறே அதனைத் தொடர்ந்த காலப்பகுதிகள் இன விடுதலைப்போராட்டமும் முனைப்புற்று வந்தது. பிரதான முரண்பாடு என்பது ஒவ்வொரு நாட்டின் சூழலலையும், சமூகச்சக்திகளின் சேர்க்கையையும் பொறுத்துள்ளதாகும். எனவே பிரதானமற்றதான ஒன்று பிரதானமாகவும் மாறுதல் இயக்கவியலாகும். சமூகத்தை சரியாகக் கவனிக்கும் மார்க்ஸியவாதி இதனை கவனிக்க வேண்டும். இல்லை எனில் வரலாறு அவன் கையிலிருந்து நழுவிவிடும்" (முனைவர் கோ.கேசவன் "அடிமைகள்" நாவல் முன்னுரையில்-1984).

இவ்விடத்தில் ஒரு விடயம் பற்றி நோக்குதல் பயன்மிக்க ஒன்றாகும் அறுபதுகளில் சாதிய எதிர்ப்புப் போராட்டம் தேசியத்தின் வடிவமாக இருந்தது போன்றே, தமிழ் தேசிய இன விடுதலைப்போராட்டமும் முனைப்புப் பெற்றிருந்நது. இதனை தமிழ் முதலாளித்துவ சக்திகள் இனவாதத்தினுள் அமுக்கிச்சென்றனர். இதன் காரணமாக தமிழ் ஜனநாயக சக்திகள் அந்த அணியை நாடவேண்டியவர்கள் ஆயினர். இடதுசாரி சிங்கள மக்களுடன் ஐக்கியப்படுதல் என்ற கோஷத்தின் அடுத்த பக்கமாக தமிழின இன ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடுதல் என்ற விடயத்தினையும், இணைத்து முன்னெடுத்திருக்குமாயின் தமிழ் ஜனநாயக சக்திகளின் ஒரு பகுதியினரை வென்றெடுத்திருக்கலாம். இடதுசாரிகள் இதனை இன்று சுயவிமர்சனத்திற்கு உட்படுத்தியுள்ளனர் என்பது ஒரு புறமிருக்க இன்றைய இயக்கங்களின் தவறான போக்கிற்கு தமிழ் முதலாளித்துவ சக்திகளே காரணம் என்பது நூற்றுக்குநூறு உண்மையாகும்.

சுபத்திரன் கவிதைகளிலும், தீண்டாமை ஒழிப்பும், அதற்கெதிரான வெகுசன எழுச்சிகளும் முனைப்புற்றிருந்த அதே சமயம், தமிழ் இன ஒடுக்குமுறைக்கு எதிரான சிந்தனை வெளிப்படவில்லை. இத் தவறு அவரது காலச்சூழலில் வைத்து நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அவ்வாறே மலையக சமூகம் குறித்த அவரது பார்வையும், ஓர் விவசாய சமூதாயத்திற்குரிய பார்வையாகவே அமைந்திருந்தது. உதாரணமாக, 1977ம் ஆண்டு துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான சிவன்

இராம நாடகம், கோபால கிருஷ்ண பாரதியின் நந்தன் சரித்திரம், திருநீலகண்ட நாயனார் சரித்திரம் முதலியவற்றில் இசையும் நாடகப் பண்பும் மிகுந்து காணப்படுகின்றன. இவற்றை இசை நாடகங்கள் என்றே கூறலாம்.

நாடகங்கள் சமயகிரியைகளின் ஓர் அங்கம் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இது உண்மையே சங்ககால வேலன் வெறியாட்டு, சிலப்பதிகார கூத்துக்கள் என்பன சமயக்கிரியைகளின் அடிப்படையில் அமைந்த நாடகங்களே.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புதிய நடையில் பல நாடகங்கள் எழுதப்பட்டன. ஆங்கில நாடகங்களைப் பின்பற்றி எழுதினா். பழையமரபு கைவிடப்பட்டு நவீன நுட்பங்களைக் கையாண்டுகளம் அல்லது காட்சிகளாகப் பிரிந்து நாடகம் இயற்றினர். இவ்வகையில் எழுதப்பட்ட நாவலாக "பிரதாப சந்திர விலாசம்" என்ற நாடகம் முதன்மை வாய்ந்தது. இதனை 1877 இல் இராமசாமி ராஜா என்பவர் இயற்றினார். இதற்கடுத்து பேரா. பே. சுந்தரம்பிள்ளை இயற்றிய மனோன்மணியத்தைக் குறிப்பிடலாம். இது சேக்ஸ்பியர் ஷெரிடான் முதலான ஆங்கில நாடகாசிரியர்களின் நாடகப் பாங்கினைப் பின்பற்றி செய்யுள் மரபிலே எழுதியுள்ளார். வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியர் எழுதிய ரூபாவதி; கலாவதி மானவிஜயம் ஆகிய நாடக நூல்களை எழுதினார். இவற்றுள் ரூபாவதி, கலாவதி, இரண்டும் செந்தமிழ்ப் பாங்கான உரைநடையில் அமைந்தவை மானவிஜயம் செய்யுள் நடையில் அமைந்தவை.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமூக சீர்திருத்த நாடகங்கள் தோன்றின. காசி விஸ்வநாத முதலியார் இத்துரையில் சிறந்து விளங்குகிறார். நாடகத்துக்குப் புத்துயிர் அளித்தவர் என்ற முறையில் பம்பல் சம்பந்த முதலியார் சிறப்பிடம் பெறுகின்றார். நாடகமாடுவோரையும் நாடகத்தையும் இழிவாக பேசிய காலகட்டத்தில் தாமே மேடையேறி நாடகக் கலைக்குப் புத்துயிர் அளித்தார். தனக்கென ஒரு குழுவினரை உருவாக்கி அவர்களையும் ஊக்குவித்தார். "சுகுணவிலாசசபை" என்ற நாடகச் சபையை உருவாக்கி நாடகக் கலையையும் கலையையும் கலைஞர்களையும் உய்வித்தார். மனோகரா, லீலாவதி, சுலோசனா, பெண் விலங்கு போன்ற அறுபது நாடகங்களை எழுதினார். இவர் அரங்கிலே நடிக்கின்ற நவீன நாடக உத்திகளை வெளியிட்டார். இவரை நவீன நாடகத் தந்தை என்று க. சொர்ணலிங்கம் புகழ்கின்றார். சேக்ஸ்பியரின் நாடகங்களைத் தமிழில் வாணிப வணிகன் விரும்பிய விதமே கமலாதித்யன் முதலிய நாடகங்களை மேடைக்குகந்த வகையில் எழுதியதோடு புராண, இதிகாச, சமூக நாடகங்களையும் எழுதி மேடையேற்றினார். நாடகத்தில் ஈடுபடுவோர்

படிப்பறிவு குறைந்த பாமரரே என்ற நிலையை மாற்றி, படித்த உயர் வர்க்கத்தினரும் அத்துறையில் ஈடுபட ஊக்கமும் உற்சாகமும் அளித்தவர் பம்மல். ப. சம்பந்த முதலியார். டி. கே. எஸ் சகோதரர்கள், நவாப். இராசமாணிக்கம் ஆகியோரும் நாடகத் துறையில் தலை சிறந்து விளங்கினர். இவர்களும் புராண இதிகாசக் கதைகளுடன் சமகால சமூக நிகழ்ச்சிகளையும் நாடகமாக்கினர்.

புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பல நாடகங்களை எழுதியுள்ளார். அவற்றில் இரணியன், படித்த பெண்கள் போன்ற நாடகங்கள் முக்கியமானவை. புதுமைப்பித்தன் எழுதிய 'வாக்கும் வக்கும்' சிறந்த நாடகமாகும். காதல் ஜோதி, சுமங்கலி பூஜை போன்ற நாடகங்களை அண்ணாத்துறையும், நச்சுக் கோப்பை, தூக்கு மேடை, இரத்தக் கண்ணீர் போன்ற நாடகங்களைக் கருணாநிதியும் எழுதியுள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் தான் இலங்கையில் நாடகம் வளரத் தொடங்கியது. கலையரசு க. சொர்ணலிங்கம் முதல் க. சிதம்பரநாதன் வரையில் பல்வேறு கட்டவளர்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த இசை நாடகக் குழுக்களினாலேயே இங்கு நாடகம் வளர்ச்சியுற்றது. 1939 வரையில் இசைநாடகக் குழுக்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம் முதலான பிரதேசங்களில் நாடகங்களை நடத்தின. சில வேளைகளில் இலங்கைக் கலைஞர்களும் நடித்தனர். தமிழ் சினிமாவின் வளர்ச்சியினால் கவரப்பட்ட நாடகத் துறையினர் தம் வருகையைக் குறைத்துக் கொண்டனர். பின்னர் தமிழ் நாட்டைப் போன்று இலங்கையிலும் நாடகச் சபைகள் உருவாகின. யாழ்ப்பாணத்தில் இதன் பாதிப்பு அதிகமாகக் காணப்பட்டது. இலங்கையில் நாடகம் கட்டங் கட்டமாக வளர்ந்து வந்துள்ளது. இதில் முதன்மை பெறுபவர் நடிகமணி வி. வி. வைரமுத்து ஆவார். இவரது மயானகாண்டம் இன்றும் நினைவுகளில் நிலைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்து ஆங்கிலக் கல்வியறிவு பெற்ற மத்தியதர வகுப்பினர் நவின நாடகங்கள் வேரூன்றக் காரணமாயினர். இலங்கையின் நாடக வரலாற்றில் கலையரசு க. சொர்ணலிங்கத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்டில் பம்மல். ப. சம்பந்த முதலியார் போல ஈழத்தில் க. சொர்ணலிங்கம் என்றால் மிகையாகாது. இவரின் குருவும் பம்மல் சம்பந்த முதலியாரே. க. சொர்ணலிங்கத்தைத் தொடர்ந்து இன்றுவரை நாடகம் பலவாறு வளர்ச்சி கொண்டுள்ளது. பள்ளு, குறவஞ்சி, நொண்டி, கூத்துக்களும் இங்கு எழுந்தன. பேராசிரியர். க. கணபதிபிள்ளை அவர்களின் நாடகங்களும் மிகவும் சிறப்பானவை.

உடையார் மிடுக்கு, முருகன் திருகுதாளம், கண்ணன் கூத்து, நாட்டவன் நகர வாழ்க்கை, தவறான எண்ணம், பொருளோ பொருள், துரோகிகள், சங்கிலி என்ற நாடகங்களை நூலாக வெளியிட்டுள்ளார். மேலும் பேராசிரியர். சு. வித்தியானந்தன் போன்றோரும் நாடகத்திற்கு புத்துயிர் அளித்தனர்.

நாடகத்தில் 'ஓரங்க நாடகங்களும்' உண்டு. கி. ரா. எழுதிய தந்தையின் காதல், முல்லைக்கொடி, நாடோடி இயற்றிய 'குடும்பரகசியம்' முதலியனவும் ஓரங்க நாடகங்களுக்கு உதாரணமாகும். வாழ்வின் ஒரு பகுதியைப் படம் பிடித்துக் காட்டுவதே ஓற்றையங்க நாடகம். வாழ்வின் இடைவெளித்தட்டில் இந்நாடகம் தொடங்கி இடைவெளித்தட்டில் முடியும். எனினும் அதற்குள் ஒரு பொருளைக் கூறி முடிப்பதாக அமையும். வானொலியின் தாக்கத்தால் இந்நாடகங்கள் வளர்ந்தன எனலாம்.

தமிழ் நாடகத் துறையில் வானொலி முக்கிய பங்கினை வகித்து வருகிறது. நாடகத்தை செவிப்புலக்கலைச் சாதனமாகவும் வளர்க்கலாம் என்பதற்கு வானொலி நாடகங்கள் உதாரணங்களாகும். பி. எஸ். இராமையா, தி. ஜானகிராமன், அரு. இராமநாதன் முதலான எழுத்தாளர்கள் தரமான நாடகங்களை எழுதி நாடகத்துறையை ஊக்குவித்தனர். திரைப்பட வளர்ச்சியானது நாடகத்துறையை பெரிதும் பாதிக்கின்றது. திரைப்படம் நாடகத்தை கட்புலக்கலைச் சாதனமாகவும், அரசியற் பிரசார சாதனமாகவும் பயன்படுத்தி வருகின்றது. பெரும்பாலான கலைஞர்கள் இவர்களின் வழியையே பின்பற்றி வருவதால் நாடக வளர்ச்சி தேக்க நிலையில் உள்ளது.

இனிவரும் நாடகக் கலைஞர்கள் இத்துறையை வளர்த்தெடுப்பதில் பெரிதும் அக்கரை செலுத்த வேண்டும். தூய்மையான நாடக உருவத்தைப் புலப்படுத்தும் வகையில் அதனை வளர்ப்பதற்கான ஆலோசனைகளும் ஆர்வமும் நாடகக் கலைஞர்களிடம் வளர வேண்டும்.

உதவியவை.

1. பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும் - பேரா. க. கைலாசபதி
2. ஈழத்து இலக்கிய வரலாறு - துரை. மனோகரன்
3. இலக்கிய வரலாற்றுத் தொகுப்பு - சாந்தையூரான்.
4. மாதவி மடந்தை - தேசிய கல்வி நிருவக வெளியீடு.

# மொழியைக் கற்பதன் அவசியம்

திரு. வீ.சிவகுமார்

விலங்குகள் பறவைகள் தாம் எழுப்புகின்ற ஒலிகள் மூலம் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுகின்றன. உதாரணமாக தேனீ நடனம் மூலமாக மிகத் தெளிவாக தேனிருக்கும் திசை, தூரம் போன்ற தகவல்களை வெளிப்படுத்துகின்றது. ஆனால் அவை தொடர்பு கொள்ளக்கூடிய குறியீட்டு அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. விலங்குகள் பறவைகளிடம் மொழி ஆற்றல் இல்லை. அதனால் அவை கருத்துக்களை வெளிப்படுத்த முடியாது. மனிதன் மாத்திரமே மொழியைத் தொடர்பு கொள்ளும் ஊடகமாகப் பயன்படுத்தும் இயற்கையான ஆற்றலைப் பெற்றுள்ளான்.

மொழி என்பது ஒழுங்கமைக்கப்பட்ட ஒலிக்குறியீடுகளின் ஒரு தொகுப்பு எனக் கூறலாம். இந்த ஒலிக்குறியீடுகளைப் பயன்படுத்தியே மனிதன் சிந்திக்கின்றான். சிந்திக்கின்றவைகளை வெளிப்படுத்துகின்றான். ஆகவே மொழி மனிதனின் சிந்தனையின், உணர்ச்சி வெளிப்பாடுகளின் ஊடகம். மனிதனை மனிதன் மொழியின் மூலம் புரிந்து கொள்கின்றான்.

கருத்து வெளிப்பாடானது ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று. கருத்து வெளிப்பாடு சீராக செயன் முறைப்படுத்தப்படாவிட்டால் ஒருவனது உளவளர்ச்சி, ஆளுமை வளர்ச்சி, மனவெழிச்சி சமநிலை என்பன பாதிக்கப்படும். ஒருவன் தனது துன்பத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதாலும் தனது இன்பங்களை மற்றவர்களிடம் கூறி மகிழ்வதன் மூலமும் மன நிறைவடைகின்றான். இதுதான் மொழியால் கிடைக்கும் முக்கிய பயன் எனலாம். இதனை 'வெளிப்படுத்தல்' எனக் கூறலாம். மனிதன் தான் சிந்திக்கின்றவைகளை உணர்பவைகளை வெளிப்படுத்துகின்றான். மொழியின் பிரதான பணி இதுவாகும்.

மனிதன் சிந்திக்கும் ஆற்றல் பெற்றிருக்கின்றான். சிந்தனை ஒரு தொடர்ச்சியான செயன்முறையாகும். குறிப்பிட்ட ஒரு விடயத்தையிட்டு மனிதனின் மூளை செயற்பட்டு பெறுகின்ற கருத்துக்களின் தொகுதி சிந்தனை எனக் கூறலாம். சிந்தனையானது மொழி மூலமே நடைபெறுகின்றது.

மனிதன் அறிவை வளம்படுத்திக் கொள்வதற்காக கற்றுக் கொள்ளப்படுவது அல்லது கற்பிக்கப்படுவது மொழியின் மூலமேயாகும். கற்றவிடயங்களை தகவல்களாக சேமித்து வைக்கும் அறிவுச் சேமிப்பு ஊடகமாக்வும் விளங்குவதும் மொழியே. இவை மட்டுமன்றி கற்றலுக்குறிய

பெரும்பாலான விடயங்கள் பல்வேறு மொழி வழவங்களிலேயே சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. சேகரிக்கவும் படுகின்றன.

எண்ணக்கருவாக்கத்திற்கு மூலமாக அமைவது மொழியேயாகும். இதற்குக் காரணம் மனிதனின் சிந்தனைக்கான ஊடகம் மொழியாக இருப்பதே. பொருள்களைப் பற்றியும் பண்புகளைப் பற்றியுமான எண்ணக்கருக்கள் மூளையில் மொழித்தகவல்களாகவே பதியப்படுகின்றன. எண்ணக்கருவென்பது ஒரு பொருள் பற்றிய அல்லது ஒரு பண்பு பற்றிய கருத்தாக்கமாகும். உதாரணத்திற்கு 'கிளி' என்ற கருத்தாக்கம் ஒரு பிள்ளையின் மூளையில் பதிகின்றபோது கிளி உயிருள்ளது. ஒரு பறவை, பச்சை நிறமானது, இறக்கைகளும் உண்டு. போன்ற பல தகவல்கள் மூளையில் பதியப்படுகின்றன. இவ்வாரான பதிவே எண்ணக்கருவாக்கம் ஆகும். இதற்கு மொழி பெரிதும் துணை புரிகின்றது.

ஒருவர் தனது கருத்தை வெளிப்படுத்துவது போலவே மற்றவர்களின் கருத்துக்களை விளங்கிக் கொள்வது அவசியம். இது சமூகத்துடன் ஒத்து வாழ்வதற்கும் சமூகமயமாக்கம் பெறுவதற்கும் சமூகத்தின் ஏனைய அங்கத்தினர்களைப் புரிந்து கொண்டு வாழவும் மொழி துணை நிற்கின்றது.

ஒருவர் மொழியை முறையாக பிரயோகிக்கும்போது சுயமாக இயங்கும் திறனைப் பெறுகின்றார். இதன் மூலம் தன்னம்பிக்கையும் ஆளுமையும் வளர்ச்சி அடைகின்றது. மொழியை முறையாக பிரயோகிக்க முடியாத ஒருவர் தாழ்வு மனப்பான்மையுடன் ஒதுங்கி வாழும் சூழ்நிலையை அவதானிக்க முடியும். இதனை நிவர்த்தி செய்வதற்கு மொழியறிவு அவசியமாகும்.

மேற்கூறியவாறு மொழியானது, கருத்துக்களையும், எண்ணங்களையும் வெளிப்படுத்தல், உணர்வுகளை வெளிப்படுத்தல், சிந்திக்கும் ஊடகமாக விளங்குதல், அறிவை தகவல்களாக சேமிக்கும் கருவியாக தொழிற்படல், எண்ணக்கருவாக்கத்திற்கு உதவுதல், தொடர்பாடலுக்கும் மனித உறவுக்குமான ஊடகமாக விளங்குதல், தேவைகளின் நிறைவேற்றம், வாழ்க்கை ஒழுங்கமைப்பு என்பவற்றிற்கு உதவுதல் ஆகிய பல செயற்பாடுகளுக்கும் அடிப்படையாக விளங்குகின்றது. எனவே மொழியின் உபயோகங்களை பெற்றுக்கொள்வதற்கு மொழித்திறன்களின் விருத்தி பெறவேண்டும். இதற்கு மொழியை முறையாக கற்பது மிக அத்தியாவசியமாகும்.

# பொங்கலோ! பொங்கல்!...



**வி. எஸ். இதயராஜா.**
(விரிவுரையாளர்)

வெண்முகிற் துகிலுடுத்தித் தை மடந்தை
மெல்ல நடை பயிலும் வேளையிலே,
கோலமிட்டுக் குத்துவிளக்கேற்றி,
பச்சரிசி புதுப்பானையில் இட்டு,
பட்டாசு வெடித்து
ஆதவனுக்குப் படைத்திடும் பொங்கலே
தைப்பொங்கல் - இது
உழவர் திருநாளெனப் போற்றும்
பழமைப் பழக்கமாய் இன்றும் வழமையாய்
பொங்கலோ பொங்கல்.

வையத்து வான்பரப்பில் ஈசறபூதங்கள்
சிறகடித்துச் சிறுமையினைத் தொடர,
ஏவற்பேய்கள் கூரையைப் பிய்த்திட,
கலிங்கத்துப் பேய்கள் - மீண்டும்
மண்டை ஓட்டிலே கூழ்வார்த்து,
மண்டையிலே ஒன்றுமில்லாமல்
கவிழ்த்துப் பார்க்கின்ற காரியங்கள்
கனகச்சிதமாக ......
இரத்த வெள்ளம் வீதியெல்லாம்;
சதைச்சேறுகள் நடையிற்சிதற,
நவீன ஆயுதங்கள் பிணக்கோலமிட,
பழமைப் பழக்கமாய் இன்றும் வழமையாய்
பொங்கலோ பொங்கல்

# தமிழ்மொழி உணர்வும் தமிழ் கற்பித்தலும்

ஜெ. சற்குருநாதன். (விரிவுரையாளர்)

மொழி என்பது ஒரு தொடர்பாடல் கருவி என்றும், சிந்தனையின் கருவூலம் என்றும் கருத்து பரிமாற்ற கருவி என்றும் பொதுவாக கூறப்படுகின்றது. தவிரவும் பண்பாட்டுக் காவி என்றும், மரபு ரீதியான மொழிக்குள்ள சிறப்பம்சத்தினை விளக்குவர். மொழி என்பதற்கு இவ்வாறு பல விளக்கங்களை முன்வைத்தாலும் மொழியை கையாளுபவரின் உணர்வு நிலையினை பொறுத்தே அதன் பயன்பாட்டுத்தன்மை அமைகிறது. மொழி வெறும் பண்பாட்டுக்காவி என்பதை விட மொழி ஒரு பண்பாட்டு அடையாளமாக வளர்த்தெடுப்பதில் இன்று கவனம் செலுத்தப்படுகின்றது. தமிழ் மொழியை பொறுத்தவரையில் மரபு ரீதியாக அமைக்கப்பட்டு வருகின்ற சட்டகத்தினை விட்டு வெளியே வருகின்ற நிலையினை இன்றைய மொழி உணர்வு உருவாக்கியுள்ளது. இந்த மொழி உணர்வு சிதறலாக ஆங்காங்கே காணப்படுகிறதே ஒழிய ஒட்டு மொத்தமான ஒரு சமூக பிரக்ஞையாக வெளி வருவதற்கு பல்வேறு தடைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

மொழி உணர்வு நிலை படைப்பாளியின் அல்லது ஆய்வாளனின் வெளிப்பாடாகவே தொடர்புச் சாதனங்களின் பயன்பாடாக அல்லாமல் ஒரு சமூக பண்பாட்டு அடையாளமாக எவ்வாறு வளர்ப்பது என்பது இன்று கேள்வியாக இருக்கின்றது. தமிழ் எங்கெல்லாம் வீழ்கின்றதோ அங்கெல்லாம் தலையிட்டு கிளர்ச்சி செய்க என பாவேந்தர் முழங்கினார். இவர் வெறும் மொழியாக பர்க்காமல் தமிழின் அடையாளத்தை நோக்கிய குரலாக உரத்த சிந்தனையை கட்டியெழுப்புகின்றார். தமிழ் நாட்டில் பிராமண ஆதிக்க காலத்தில் காணப்பட்ட இந்திய மொழியை திணிக்க எத்தனித்த போது அதற்கெதிராக எழுந்த திராவிட இயக்க அலைகளை வெறும் தமிழுக்காக என அடக்கிவிட முடியாது. அதை விட தமிழுக்கு இருக்க வேண்டிய பண்பாட்டு அடையாளத்தை வேண்டி நின்ற போராட்டமாக இருந்ததை அவதானிக்க தவறக் கூடாது. ஆனால் திராவிட இயக்க சுயநல தலைமைகள் தமிழ் மொழியை வெறும் கிளர்ச்சி சார்ந்ததாக பார்த்தனரே தவிர அறிவியல் தழுவியதாக அதனை வளர்த்தெடுப்பது எப்படி என்பதில் போதியளவு கவனம் செலுத்தவில்லை. தமிழ் மொழியை வைத்துக்கொண்டு எவ்வாறு அதிகார பிழைப்பை நடத்தலாம் என்பதைபற்றி கனவு கண்டனரே தவிர அதனை ஏனைய மொழிகளுடன் சமமாக வளர்த்தெடுப்பதில் எந்தளவுக்கு பங்காற்றினர் என்பதும் கேள்விக்குறியாகும்.

திராவிட பாசறையின் மூத்த தளபதி ஈ. வே. பெரியார் கூட ஒரு சமயத்தில் தமிழ் மொழியை காட்டுமிராண்டி மொழியென்றும் ஆங்கிலம் வீட்டுமொழியாக மாற வேண்டும் எனவும் கருத்து வெளியிட்டார். தமிழ்மொழியை

அடக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சமூகத்தாழ்மட்ட மக்கள் இன்றும் வீட்டு மொழியாக, நடைமுறை பயன்பாட்டு மொழியாக பயன்படுத்தி வருகின்ற உணர்வு நிலையை அறியாத இவரது நிலை, பண்பாட்டின் தவறுகளை திராவிட இயக்க தலைமைகளிடையே காணப்பட்டது. சமூகத்தின் மேல்மட்டத்தில் காணப்படுகின்ற சிலருக்காக பயன்படுகின்ற மொழி உணர்விற்கும் கீழ்மட்டத்திலுள்ள சாராரண மக்கள் கையாளுகின்ற மொழி உணர்விற்கும் வேறுபாடுண்டு. சமூகம் தந்த தாழ்வுகளை களைந்து ஒரு சமூக மாற்றங்களின் மூலம் ஏற்படுகின்ற மொழி உணர்வுக்கான விஞ்ஞான ரீதியான பார்வையின் அவசியத்தை இன்னும் உணர்த்த முடியாத நிலைக்கு அவர்களின் வர்க்கச் சார்பு காணப்படுகின்றது. ஆனால் மொழிக்காக உணர்வு ரீதியிலும் பண்பாட்டு ரீதியிலும் சமூகத் தேவைக்காக திராவிடவியக்கம் செய்த பங்களிப்பு அளப்பறியது.

ஈழத்தில் தமிழ்மொழி தொடர்பு உணர்வு நிலை யாழ்ப்பாண, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் என வடக்கு கிழக்கு சார்ந்த சிந்தனையாக வளர்ந்தது. நாவலர் ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிரான தனது நிலைப்பாட்டால் மொழியை கையாளுதலில் கவனமாக இருந்தது. சமூகத்தில் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்ற குறிப்பிட்ட சிலர் உருவாக்கிய உருவாக்கிக் கொண்டிருந்த மொழிப்பயன்பாடு உதவாது. என உணர்ந்த சிலர் சாதாரண மக்களின் மொழி உணர்வு செல்ல வேண்டும் என்பதை சிலர் விரும்பினர். அதனால்தான் சாதாரண மக்களுக்கும் புரியக் கூடிய எளிமையான மொழியை சிலர் கையாண்டார். இவரின் பணிகள் சமய பணிகளுடன் இணைந்த பார்வையாக தமிழ்மொழி இருந்தாலும் ஈழத் தமிழ்களின் பண்பாட்டு அடையாளமாக மொழியை பேணுவதில் அக்கறைக் காட்டினார். அவரது சைவ வேளாள சிந்தனை மொழிப்பற்றிய தீர்க்கமான முடிவினை மேலும் வளர்த்தெடுக்க முடியாமல் போய் விட்டது. ஆனால் ஈழத்து தமிழ் உணர்வுக்கும் தமிழ் மொழியின் சீர்த்திருத்தத்திற்கும் அவர் ஆற்றிய பங்களிப்பை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. வடக்கு கிழக்கில் குறிப்பாக நிர்வாக துறைகளில் தமிழ்மொழியின் பயன்பாடு போதுமானவையாக இல்லை என்பதை பொருத்து மொழி உணர்வு வெளிப்பட்டது.

இதன் அடுத்தக் கட்டத்தில் மொழி வெறும் உணர்வாக இல்லாமல் அதனை அரசியல் ரீதியில் வளர்த்தெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்ட போது மொழி உணர்வு பண்பாட்டின் அடையாளமாக வெளிப்பட்டது. தமிழ் காங்கிரஸ், தமிழர் மகா சபை, தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி இன்னும் வடக்கு கிழக்கில் உதயமான இயக்கங்கள் எல்லாம் தமிழ்மொழியின் பால் உள்ள உணர்வாக தமிழ்மொழியின் பண்பாட்டு அடையாளத்தை வேண்டி நின்றன. இது வெறும் சிவபெருமான், அகத்தியர் கொண்ட தமிழ் மொழியாக

இல்லாமல் அதற்காக உயிரைத் தியாகம் செய்து மொழிக்கான சமூக பிரஞ்சை மிக்க போராட்டமாக வெளிப்பட்டது. தமிழ்மொழி உணர்வை பயன்படுத்திக் கொண்டு தனது ஆதிக்கத்தினை தொடர்ந்து வைத்திருக்க போராடும் அமைப்புக்களும் இயக்கங்களும் இதற்கு விதிவிலக்கு. சமயத்திற்கு தக்கப்படி பூனைக்கு தோழன், எலிக்கு நண்பன் எனக்காட்டிக் கொள்ளும் தமிழ் அமைப்புக்களை வெற்று கோசமாக அமைவதையும் காணத்தவறக் கூடாது.

இந்தியத் தமிழர் 1820களுக்குப் பின்னர் இலங்கையில் புலம் பெயர்ந்தன. தென்னிந்தியாவிலிருந்து படிப்பறிவு இல்லாது வெறும் உழைப்பை மாத்திரம் இவர்கள் கொண்டு வரவில்லை தாங்கள் பிறந்த மண்ணில் பழங்கால கலைகள், வாய்மொழிப்பாடல்கள், பழமொழிகள், கூத்துக்களையும் இங்கு கொண்டு வந்தனர். இருபதாம் நூற்றாண்டின் அடிமைகளாக இவர்கள் இருந்த போதிலும் தங்கள் மொழியை என்றும் உணர்ச்சிமயமாக கையாண்டது குறைவு. தங்கள் எண்ணங்களை விருப்புகளை பேச்சி மொழியிலே வெளிப்படுத்தி வந்துள்ளனர். இவர்கள் இங்கு புலம் பெயர்ந்த வேளையில் பிஜி தென்னாபிரிக்கா மேற்கிந்திய தீவுகள் போன்ற பல நாடுகளுக்கும் சென்றனர். இலங்கை மலேசியா தவிர ஏனைய நாடுகளுக்கு சென்றவர்கள் தமது தமிழ் மொழியை கைவிட்ட நிலையில் வாழ்கின்றனர். உடை சடங்கு சம்பிரதாயங்களில் மட்டும் இந்திய அடையாளத்துடன் வாழ்கின்றனர். இலங்கையில் மலேசியாவில் தமிழ் அடையாளத்துடன் மொழிப்பயன்பாட்டுடன் இவர்கள் எப்படி வாழமுடிந்தது.

இலங்கையில் ஒரு பரந்த தொழிலாளர் வர்க்கமாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களாக நாளாந்தம் போராட்டம் நடத்தி வாழும் மக்களாக வாழ முனைந்த போது மொழியை ஒரு பண்பாட்டு அடையாளமாக பார்க்கின்றனர். சமூக பொருளாதார அரசியல் போராட்ட வடிவங்கள் தமிழ்மொழியை தொடர்ந்தும் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பத்தை அளித்துள்ளனர் தென்னிந்தியா அண்மையில் இருப்பது வடக்கு கிழக்கு போராட்ட அலைகள். இவர்களைப் பாதித்ததாகவும் மலையக மக்கள் இருப்பு கலை மொழியுணர்வினை ஏற்படுத்திற்று. எனினும் மொழியை நடைமுறை அலுவல்களுக்காக பயன்படுத்தும் போராட்டத்தை தொடர்ந்தும் இவர்கள் முன்னெடுக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை அவர்களின் மத அடையாளத்துடன் மொழியை கையாளுவதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். மதப்பண்பாட்டின் வெளிப்பாடாக தமிழ் மொழியின் பயன்பாட்டை அவர்கள் கையாண்டு வருகின்றனர். மரபுரீதியான அல்லது நவீன மொழியில் சிந்தனையில் அக்கறை காட்டுவதில் போதிய அளவு விரும்புவதில்லை. தமிழ்மக்கள், மலையகமக்கள் தேசிய சிந்தனைகளை வெளிப்படுத்துவது போல் முஸ்லிம்

மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதால் அவர்களின் மொழிப்பற்றிய உணர்வு நிலை அவசியமாகும்.

எனவே மேற்கூறப்பட்ட வடக்கு கிழக்கு சார்ந்த தமிழ் மக்கள் கையாளுகின்ற மொழி உணர்வு மலையக மக்களின் மொழி உணர்வு என்பன தமிழ் கற்பித்தலில் கவனத்திற் கொள்ளப்படவேண்டும். மேலும் இன்று நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்களான கணனி, இணையம் தொலைநகல், போன்றவற்றில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் நோக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். இலங்கையில் காணப்படுகின்ற இம்மூன்று மக்களினங்களின் மொழி உணர்வு பற்றிய பொதுவான அம்சங்களையும் தனித்துவமான அம்சங்களையும் தமிழ் கற்பித்தலின் போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். பொது தமிழ் இவற்றின் ஒவ்வொரு சமூகத்திற்கும் தேவையான மொழி உணர்வினை பிரக்ஜை பூர்வமாக பிரதிபலிக்க கூடிய இலக்கியங்களை எவ்வாறு கற்பிப்பர் மாணவர்கள் வெறும் வகுப்பறை சாதனங்களாகப் பயன்படுத்தி கற்பிப்பதை விட்டு பரந்த சமூகத் தேவையைக் கருத்திற் கொண்டு செயற்பாட்டு ரீதியான மொழி உணர்வை தூண்டுவது எங்கனம் என்ற வினாவை எழுப்பினால் அதற்கான விடையை கேட்க முடியும். தமிழ் மொழியை பரீட்சைக்காக அல்லது நடைமுறை தேவைக்காக கற்பிப்பது மட்டும் ஆசிரியர் வேலையாக அமையக்கூடாது. மாறாக ஒரு பரந்த சமூக அமைப்பில் பல்வகையினர் சார்ந்தவையில் சமூக விஞ்ஞான பூர்வமான பார்வை கற்பிப்பது காலத்தின் தேவையாகும்.

ஆரம்ப இடைநிலை உயர்தர பல்கலை கழகங்கள் மட்டத்தில் தமிழ்மொழி பற்றிய உணர்வுகளை படிப்படியாக வளர்த்துச் சொல்லப்பட்டாலும் விஞ்ஞானம், மருத்துவம் தொழில்நுட்ப, அரசியல், புவியியல், பொருளியல் துறைகளில் பல துறைகள் தமிழ் மொழியில் பின்தங்கியுள்ளது. இதற்கான ஒரு வழியை தேட வேண்டும். நவீன தொழில்நுட்ப சாதனங்களின் உதவியுடன் தமிழ்மொழியை கையாளுவதில் கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். மொழிபற்றிய பரந்த மனப்பாங்கினையும், சிந்தனையையும் ஏனைய மொழிகளை நேசிக்க கற்பிப்பதும் இன்றைய கடமையாகும். பிரதேச பண்பாட்டு அடையாளத்தைப் பிரதிபலிக்கக் கூடிய கலைகள் கூத்துக்கள் இலக்கியங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். பழைய இலக்கியங்கள் மொழியை பேசி வரும் தமிழ் கூறும் நல்லுலகில் ஒட்டுமொத்த உலகலாவிய ரீதியில் தமிழ்மொழி பயன்பாடு உணர்வுகள் என்பன பற்றிய சிந்தனையும் அவசியமாகும்.

ஈழத்து தமிழ்மொழியின் உணர்வுகளை தமிழ் மக்கள் முஸ்லிம் மக்கள், மலையக மக்கள் என மூவின மக்களின் வெளிப்பாடாக காணப்பட்டாலும்

பண்பாட்டு அடையாளமாக வளர்த்தெடுப்பது எப்படி என்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். தமிழ்மொழியை பொதுவாக பயன்படுத்தினாலும் மொழி உணர்வு என்பது போதையாக வெளிப்படாமல் விஞ்ஞான பூர்வமான, ஆக்கபூர்வமான சிந்தனையை தூண்டிவிடக் கூடிய முறையில் பொதுமை கூறுகளை தமிழ் மொழியில் இணைப்பது அவசியம் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாட்டினை காலத்திற்கு ஏற்ற வகையில் எவ்வாறு மேற்கொள்வது என கலந்துரையாடப்பட வேண்டும்.

இங்கும் தமிழ்மொழியை உணர்வு ரீதியாக பண்பாட்டு அடையாளமாக கற்பிப்பதற்கு பயன்படுத்தும் பாடப்பரப்புக்கள் யாவையும் பொதுவாக தமிழ்மொழி பாடப்பரப்பில் இலக்கணம், இலக்கியம் ஆகிய இரண்டும் முனைப்பான விடயங்களாக உள்ளன. இலக்கியத்தை பொறுத்தவரை, புராணங்கள், இதிகாசங்கள், செய்யுள்கள், நவீன கவிதைகள், சிறுகதைகள், நாடகம், உரைநடை போன்ற பல அம்சங்கள் உள்ளன. தொடக்கம் இன்றைய நவீன படைப்புக்களை உள்வாங்கப்பட வேண்டும். மேலின மக்களின் பண்பாட்டு பொது அடையாளங்களை பிரதிபலிக்ககூடிய இலக்கியங்களை தெரிவு செய்து கற்பிப்பது சிறந்த பயனை தரும். நவீன மொழியில் சிந்தனைகளையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையை பொறுத்தவரையில் ஏறத்தாழ அறுபது சதவீதமானவர்கள் பின்தங்கிய சூழலிலிருந்து பாடசாலைக்கு வருகின்றனர். இவர்களின் கல்வியை தொடர்வதற்கு பலதடைகளும் காணப்படுகின்றன. கல்வியை சமூக அந்தஸ்தாக கருதுவதை விட வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்கின்ற வழியாக நாடவேண்டிய அவசியத்தை இலங்கையின் இன்றைய சூழல் உருவாக்கியுள்ளது. இங்கு மொழி உணர்வினை மாணவர்களுக்கு வளர்ப்பதற்கு அதனை பண்பாட்டு அடையாளமாக அவர்களை இயங்க வைப்பதற்கு சாதாரண நேர்மையான ஆசிரியருக்கு அப்பால் சமூக பிரக்ஞை உள்ள ஆசிரியராக கடமையாற்ற வேண்டிய நிலை உள்ளது. இத்தகைய நிலை தமிழ் வழி கற்பித்தல் நிகழ வேண்டும் என்பது அனைவரது எதிர்பார்ப்பாகும். உயர் வர்க்கத்திலிருந்து வரும் மாணவர்களின் தமிழ் உணர்வு என்பது அவர்களின் தொடர்ந்து போராட்ட குணாம்சத்தை கொண்டிருக்கும். இதனை தெளிவாக உணர வேண்டும்.

ஆசிரிய பயிற்சி மையங்கள் சேவைகால பயிற்சி முறைகள் தேசிய மாகாண மட்டத்தில் நடைபெற்று வரும் தமிழ்மொழி கருத்தரங்குகள் மொழி பற்றிய சிந்தனையை ஏற்படுத்துவதற்கு போதுமான அம்சங்களை கொண்டிருக்க வில்லை. இதற்கு அப்பால் இன்றைய சமூக யாதார்த்தநிலைகளை கண்டறிந்து அச்சமூக வேலைகளுடன் மொழி உணர்வை ஊட்டக்கூடிய கற்பித்தல் நிகழ

வேண்டியது அவசியமாகும். தங்கள் பாண்டித்தியத்தை மேதாவி தனத்தை காட்டும் போக்கு ஒன்று தமிழ்மொழியை கற்பிக்கும் ஆசிரியர்கள் சிலரிடையே இருந்து வரும் மனப்பான்மை மாறி மொழியை சமூகத்தினர் அனைத்து மக்களுக்கும் பயன்படுகின்ற வழிமுறையை தேட வேண்டும்.

மரபுசார்ந்த கற்பித்தல் முறையின் காலத்திற்கு ஏற்ற வகையில் சில அம்சங்களை தெரிந்து நவீன அம்சங்களை இணைத்து கற்பிக்க வேண்டும். உதாரணமாக செய்யுள் இலக்கியம் அல்லது கவிதை, சிறுகதை, நாவல் கற்பிக்கும் போது அதில் வருகின்ற சொற்கள் வெறும் சொற்களாக வைத்து கற்பிக்காமல் அச்சொல் பயன்பாடு பற்றிய சமூக தேவையை உணர்த்த வேண்டியது அவசியம். கணனியை நாடிச் செல்லும் தவிர்க்க முடியாத நியதி இன்றைய சமூகத்தினரிடையே காணப்படுகின்றது. கணனி முறையில் தமிழ்மொழி பயன்பாடு பற்றிய சாதாரண மாணவர்களுக்கும் வழங்குவது காலத்தின் தேவையாகும். மேலும் திராவிடம், தேசியம், பெண்ணியம், அமைப்பியல் வாதம் நாட்டார் வழக்காற்றியல் போன்ற பல அம்சங்களை மொழியுணர்வுடன் இணைத்து பார்க்கவும் கற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

# புதிய கல்வி சீர்திருத்தமும், மலையகமும்.

செல்வி ரெ.சந்திரா

மனிதன் மனிதனாக வாழவும், மனித நேயத்துடன் வாழவும் வழிவகுப்பது கல்வியாகும். ஒரு சமூகம் தாம் பெற்றுக்கொண்ட அறிவு, சிந்தனை போன்ற எல்லா விடயங்களையும் அடுத்து வருகின்ற பரம்பரைக்கு கொடுக்கின்றது. இது கல்வி சார்ந்த வரலாற்று பணியாகின்றது. மனித வரலாற்றில் அடைய முடியாத சாதனைகளினையும் அடைந்து வருகின்றமை நோக்கத்தக்கதாகும். இவ்வாறு எய்த முடியாத விடயங்களினையும் எய்த வழி காட்டுவது கல்வி என்றால் மிகையாகாது. கல்வியானது தினமும் புதுமைப்பெற வேண்டும் ஆறுபெருகிக்கொண்டே இருக்கின்றது. ஒவ்வொரு கணமும் அதன் நீர் புதுமைப்பெற்றுக்கொண்டே இருக்கின்றது. இதனைப்போன்றதே கல்வியும். நாள்தோரும் காலமாற்றங்களுக்கேற்ப கல்வியிலும் மாற்றம் வேண்டி நிற்பதுவும் ஏற்புடையதே. அந்த வகையிலேயே இருபத்தோராம் நூற்றாண்டிலேயும் நவீன கல்வி சீர்திருத்தத்தினையும் அரசு மேற்கொண்டுள்ளது. இக்கல்வி சீர் திருத்தம் நாடுமுழுவதற்குமாக இருப்பினும் மலையகத்தில் இதன் விளைவு எவ்வாறானது என்பதனை நோக்குவது சிறப்பாகின்றது.

புதிய கல்வி சீர்திருத்தத்தினூடாக ஏற்படுத்தக்கூடிய பாட ஏற்பாடுகளும், பண்பு ரீதியான மாற்றங்களினையும் பின்வரும் அம்சங்களுள் உள்ளடக்க முடியும்.

- ☐ பாடசாலைக் கல்வியில் இருந்து விடுபடுகின்ற ஒவ்வொரு மாணவனும் அடுத்த கட்ட நடவடிக்கையாக உழைக்கும் உலகுடன் பொருந்தி வாழும் வழியினை ஏற்படுத்திக்கொள்ளக்கூடியதாய் இருத்தல்

- ☐ ஆரம்ப, இடைநிலை வகுப்புகளில் பொதுப்பாட பரப்புகளுடன் சிறப்புப் பாடங்களையும் அறிமுகஞ் செய்தல்

- ☐ பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்கினையும் எற்படுத்தல்.

- ☐ பல இனங்கள் வாழுகின்ற சமூகங்களில் தேசிய ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தக்கூடிய வகையில் பண்பாட்டுக் கல்வியினை வழங்கல்.

- ☐ சுயமாக இயங்கவும், தனித்து நின்று பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவும் ஏற்ற கல்வியினை வழங்கல்.

இக்குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டே இன்றைய புதிய கல்வி சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது நாடுமுழுவதற்கும் பொதுவானதாக இருப்பினும் மலையக பாடசாலைகளில் இக்கல்வி ஏபாடு எந்தளவிற்கு பூரணத்துவம் பெறுகின்றது என்பதை நடைமுறையோடு தொடர்பு படுத்தி நோக்குவதே சிறப்பு.

பாடசாலை பிள்ளைகள் தமது பாடசாலைக் கல்வியினை முடித்த பின் சேரவிருக்கும் உலகினையே உழைக்கும் உலகம் என்கின்றோம். இந்த உலகில் இணைந்து கொள்வதற்கு போதுமான அறிவும், அனுபவமும் பாடசாலைகளில் வழங்கப்பட வேண்டும். என்ற நோக்கிலேயே இக்குறிக்கோள் முன்வைக்கப்பட்டபோதிலும் தேவையான வளங்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், பயிற்றுவிப்பாளர்களும் மலையக பாடசாலைகளில் இருக்கின்றார்களா? என்பது கேள்விக்குறிய விடயமே. சாதாரனமாக தட்டச்சு இயந்திரத்தினையே காணாத மாணவர்கள் இருக்கின்றனர் இந்நிலையில் தவிர்க்க முடியாமல் ஏனைய பிரதேசங்களில் இருந்து மலையக மாணவர்கள் பொதுமையிலிருந்து பிரித்தாளப்படுகின்றனர். அத்தோடு உழைக்கும் உலகம் எனும் யதார்த்த நிலையிலிருந்தும் விலகிநிற்கின்றனர். என்பது குறிப்பிடத்தக்கது.

இதனோடு தொடர்பு பட்டதாகவே "பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான திறன்களையும், மனப்பாங்கினையும் ஏற்படுத்தல்" இக்கூற்று சிறந்த திறன் கொண்ட சமுதாயத்தினை உருவாக்க முடியும் என்ற பெருந்தன்மையினைக் கொண்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாயினும், மாணவன் தன்னுடைய அறிவிற்கும், ஆற்றலுக்கும், மனபக்குவத்திற்கும் ஏற்ற வகையில் ஒரு தொழிலினை தெரிவு செய்து அதில் அனுபவத்தினை பெற்றுக்கொள்ளும் வகையில் வேலைத்தளங்களுக்கு பயிற்சிக்கு சென்று அனுபவங்களை பெறமுடியுமா? மலையகத்தினைப் பொருத்த வரையில் அவ்வாறான தொழில் தளம் என்று சொல்வதற்கு பெருந்தோட்டத்துரை ஒன்றே உள்ளது. இவ்வாறான நிலைமையில் இக்குறிக்கோள் மலையக பாடசாலை மாணவர்களுக்கு பொருத்தமானதா? இதனை எந்த வகையில் நிறைவேற்றுவது? என்பன போன்ற விளக்கங்களே தோன்றுகின்றன.

எமது நாட்டின் புதிய கல்வி சீர்திருத்தத்தின் இன்னொரு விடயம் □ஆரம்ப இடைநிலை வகுப்புகளில் பொதுப்பாட ஏற்பாடுகளுடன் சிறப்பு பாட பரப்புகளினை அறிமுகஞ் செய்தல்□ இதன் அடிப்படையில் தரம் ஒன்று தொடக்கம் உயர்தரம் வரையில் அங்கில பாடம்

கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நோக்குகின்றபோது மலையக பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிப்பதற்கென்று ஒருவரோ அல்லது இரு ஆசிரியரோ தான் அனேகமான பாடசாலைகளில் சேவை புரிகின்றனர். இவர்களும் ஆங்கிலப்பாடத்தினை சிறப்புபாடமாகக் கொண்டு பயிற்றப்பட்டவர்கள் அல்லர் என்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும். ஆங்கில மொழியில் சிறப்புத் தேர்ச்சியினை ஏற்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு இச்செயன்முறை அமைந்திருந்தாலும் வளங்கள் கூடிய அதாவது மனித வளம் (ஆசிரியர்) ஆங்கில பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் சகல மலையக பாடசாலைகளிலும் இருந்தால் மட்டுமே எதிர்பார்க்கின்ற அளவு பூரணத்துவத்தினைப் பெற்று முகிழலாம்.

நம் நாட்டில் "பல இனத்தவர்கள் வாழ்கின்றார்கள் இவ்வாறான பல இனங்களினை உள்ளடக்கிய சமூகத்திலே தேசிய ஒருமைப்பாட்டினை கட்டியெழுப்பக்கூடியதற்கான கல்வியினை வழங்கல்" எம் நாட்டில் தொடரும் யுத்த நிலவரத்திற்கு காரணமாக இருப்பதுவும் மொழியே எனலாம். சமுதாயத்திலுள்ள ஒரு இனத்தவர் சகோதர இனத்தாரை கொடூர எண்ணங்கொண்டு நோக்குவதனாலேயே இப்பிரச்சினைக்கான தீர்வினைக் காணமுடியாததாக இருக்கின்றது. இதற்காகவே புதிய கல்வி சீர்திருத்தத்தில் தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு சிங்களம் கற்பிக்கக்கூடிய சிங்கள ஆசிரியர்களும், சிங்கள மொழிமூல பாடசாலைகளுக்கு தமிழ் ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஏற்பாடானது பொருத்தமானது, போற்றுதற் குரியதுவும் வரவேற்கத்தக்கதொரு விடயமாயினும் நடைமுறையில் இதன் சாத்தியப்பாடு மிகவும் குறைவாகவே உள்ளது. மொழியினைக் கற்பிக்கச் சென்ற ஆசிரியர் மாணவர்களிடையே ஏராளமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாலும், செல்லுகின்ற பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையினாலும் ஆங்கிலம் போன்ற பாடங்களை கற்பிக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றனர். இந்நிலை மலையக பிரதேசத்திலேயே பருண்மையாக காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இன்றைய இலங்கையின் பிரச்சினைக்கு மூலமாக முகிழ்கின்ற மொழி எந்தளவிற்கு மாணவர்களிடையே முன்னுரிமை பெருகின்றது. என்பது சமூக பிரச்சினைக்குரிய விடயமே.

பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்கள் வாழ்கின்ற சமூகத்திலே ஒவ்வொரு மதத்தினரும் சகோதரத்துவத்துடன் புரிந்து கொள்ளும் மனப்பக்குவத்துடனும் வாழக்கூடிய வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளமையினை புதிய கல்வித்திட்டத்தில் காணக்கிடக்கின்றது.

சாந்தி, சமாதானம், அமைதி, சுபீட்சம், கலாச்சார விழுமியங்கள் என்பன போன்ற இன்னோரன்ன விடயங்களினை எல்லா இனத்தவரிடையேயும் ஏற்படுத்தவே பாடநூல்களிலே ஏனைய மதத்தினரின் கலாச்சார விழுமியங்கள் மதச்சார்பான கருத்துக்கள் யாவற்றையும் இணைத்துள்ளனர். இது மாணவர்களிடையே எந்தளவிற்கு மாற்றத்தினை ஏற்படுத்தும் என்பதை பொறுத்திருந்தே நோக்கவேண்டும்.

ஒரு சமூகத்திலே இணைந்து கூட்டுப்பொறுப்புடன் வாழவும், ஏனையோரின் கருத்துக்களினை மதித்து வழிநடக்கவும் ஏற்றதாக இன்றைய நவீன சீர்த்திருத்தம் அமைந்துள்ளது. இதற்கு ஏற்ற பயிற்சி வகுப்பறையிலேயே மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. புதிய புதிய விடயங்களை தேடியறிதல், பல்வேறு வகையான கருத்துக்களினை ஒன்றினைத்து ஒரு பொதுவான முடிவினைப் பெறல், ஆய்ந்தறிதல், சுயமாக இயங்குதல், ஆக்கச்செயற்பாடுகில் முன்னனி வகித்தல் போன்ற மாணவர் சார்பான இயக்கங்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றபோதிலும் ஏனைய பிரதேச மாணவர்களை விட மலையக பிரதேச மாணவர்கள் இச்செயற்பாடுகளில் இடர்படுவதனைக் காண்கின்றோம். இதற்கான காரணத்தினை நோக்குவதென்றால் ஏனைய பிரதேச மாணவர்களின் பெற்றோர்களைப் போல மாணவர்களின் கல்வியில் அக்கரை செலுத்தி, அவர்களின் ஐயங்களுக்கு தீர்வினை முன்வைத்து வழிகாட்டும் வகையில் மலையக பெற்றோர்களிடம் போதிய அறிவு இல்லாமையும் ஏனைய பிரதேசங்களில் காணப்படுகின்ற நூலக வசதிகள் இல்லாமையும் இதற்கு முக்கியமான காரணங்களாகின்றது.

நவீன கல்வி சீர்திருத்தத்தின் இன்னுமொரு முக்கிய அம்சமாக திகழ்வது உண்மைப் பொருளினை அறிதல். உதாரணமாக பந்து நீரில் மூழ்கும் எனும் கருத்தினை மாணவர்களுக்கு ஒப்புவிப்பதோடு நின்றுவிடாமல் அவன் அச்செயலினை செய்து அனுபவரீதியிலான முடிவினைப் பெற வேண்டும். இக்குறிக்கோள் முன்னர் கூறப்பட்ட தொழில் சார் கல்வியோடும் தொடர்பு கொண்டதாய் உள்ளது. இவ்வாறு அனுபவ ரீதியிலான கல்வியினைப் பெறுகின்றபோது கல்வியில் முழுமை பெறுவது சாத்தியமாகும். இவ்வாறான நன்மையினை அடைய முடியும் என்ற போதிலும், எல்லா மலையக பாடசாலைகளிலும் இம்முழுமையை பெற முடியுமா? மலையகத்திலுள்ள விரல் விட்டு எண்ணக் கூடிய பாடசாலைகளிலேயே இம்முறையினை மேற்கொள்ளக் கூடிய கணித உபகரணங்கள், விஞ்ஞான ஆய்வு கூடங்கள், ஆய்வு கூடப்பொருட்கள், விவசாய உபகரணங்கள், விவசாயத்திற்கான நிலம் போன்ற வளங்களும் ஏனைய பாடங்களுக்குத் தேவையான வளங்களும் உள்ளன. இந்நிலையினை அதாவது வளப்பற்றாக்குரை என்ற நிலையினை னிவர்த்திக்கும் வழிவகைகள் மேற்கொள்ளாதவரை இவ்வனுபவக் கல்வியின் பயனை எல்லா மலையக மாணவர்களினாலும் அடைய முடியும் என்ற எண்ணம் நீரின்மேல் எழுத்தாகவே இருக்கக் கூடும்.

விளையாட்டின் மூலமான கல்வி எனும் நோக்கம் வரவேற்கத்தக்க விடயம். ஒருவன் விளையாட்டின் மூலம் தாம் கற்கின்றோம் என்ற உணர்வினை விட விளையாடுகின்றோம் என்ற எண்ணமே மேலோங்கி இருக்கும். இச்சந்தர்ப்பத்திலேயே வகுப்பரை கற்றலில் பெற்றுக் கொள்கின்ற

விடயப் பரப்பினை விட கூடுதலான அளவான விடையங்களினைப் பெறுவதோடு, கற்றலை சுமையாக நோக்கும் தன்மையும் குறைவடைகின்றது. ஒற்றுமை, விட்டுக்கொடுக்கின்ற மனப்பாங்கு, ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம், திறன்களை வளர்த்தல் போன்ற இன்னும் இன்னும் விடயுங்களை வளர்ப்பது இலகு என்ற போதிலும் மலையகத்தை பொறுத்தவரையில் ஒரு மண்டபத்தினை மட்டுமே கொண்ட பாடசாலைகள், விளையாட்டு மைதானமோ அல்லது பாடசாலையை சூழ இடவசதிகளோ அல்லதுவகுப்பறை வசதிகளோ எதுவுமின்றி உள்ள பாடசாலைகள் அநேகம். இச்சந்தர்ப்பத்தில் இச்சீர்திருத்தத்தினால் எதிர்பார்க்கப்படுகின்ற அனுகூலத்தினை எய்துவது கடினமானதாகும்.

காலத்திற்கு காலம் அரசினால் முன் வைக்கப்படுகின்ற புதிய கல்வி சீர்திருத்தங்களில், இன்றைய காலக்கட்டத்திற்கு ஏற்றதான கல்வி அனுகுமுறைகளை நவீன கல்வி சீர்திருத்தம் கொண்டமைந்துள்ளது. பாட ஒன்றிணைப்பு, செயன்முறை சார்ந்த கல்வி, மாணவர் மைய கற்றல் உபாயங்கள், சமுதாய சார்பு, தேசிய ஒருமைப்பாடு, தொழில் சார்பு, அனுபவத்தினூடாககற்றல் என்ற கற்றல் உபாயங்களை தன்னகத்தே கொண்டு மிளிர்வதே இக்கல்வி சீர்திருத்தமாகின்றது. இப்புதிய கல்வித்துறை புத்தாக்கங்களுக்கு ஆசிரியர்கள் மத்தியிலேயே எதிர்ப்பு காட்டும் நிலைமையினைக் காணமுடிகின்றது. இதற்கு காரணம் வகுப்பறைகளில் காணப்படுகின்ற அசௌகரியங்களேயாகும். அத்தோடு ஆசிரியர் பற்றாக்குறை. வளப்பற்றாக்குறை. போதுமான அளவு பயிற்றப்படாத ஆசிரிய குழாம். பெற்றோர்களின். சமூக. பொருளாதார பிரச்சினை போன்றன. அத்தோடு நிர்வாக இடையூறுகளும். தலைமைத்துவ பலவீனங்களும் நவீன கல்வி புத்தாக்கங்களுக்கு பலமாக இருப்பதில்லை. நவீன கல்வி சீர்திருத்தத்தினை முன்வைக்கின்ற அளவு அதற்கு தேவையான சகல வளங்களையம் சகல பாடசாலைகளுக்கும் வழங்குவதில் தாமதம் காட்டுவதும் பாரபட்சம் காட்டுவதும் நவீன கல்விச் சிந்தனைகளை நாடுமுழுவதற்கும் அறிமுகம் செய்து ஒரே மாதிரியான பிரதிபலன்களை எதிர்பார்க்க முடிவதில்லை. குறிப்பாக மலையக பாடசாலைகளில் இக்கொள்கைகளை முன்வைப்பதிலும். பிரதிபலனை எதிர்பார்ப்பதிலும் உள்ள பிரச்சினைகளை மாணவர்களும் ஆசிரியர்களுமே அனுபவிக்கின்றனர். ஏனைய பிரதேசங்களைவிட மலையக மாணவர்களுக்கு அரசு கூடுதலான அக்கறை காட்ட வேண்டும். அத்தோடு பெற்றோரினதும் ஆசிரியரினதும் அர்ப்பணிப்பும் இருந்தால் மட்டுமே இப்புதிய சீர்திருத்தத்தின் முழுமை பயனையும் எய்துவர்

# நெடுநல்வாடை ஒரு நோக்கு.

பழனிமுத்து ஸ்ரீதரன்.
உப முதல்வர்.

பத்துப்பாட்டில் ஏழாவதாக திகழ்வதும், காதல் பற்றி சிறந்த முறையில் 188அடிகளால் பாடப்பட்ட ஒரு நூல் நெடுநல் வாடை

நெடுநல்வாடை என்பது நீண்ட நல்ல வாடை அல்லது குளிருடன் கூடிய வாடைக்காற்று என்பது பொருள் நக்கீரரால் தலையலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் பேராற்றல் மிக்க பேராற்றளின் வர்ணணையை சிறப்பித்து பாடப்பட்டுள்ளது.

தலையளங்கானத்து செருவென்ற பாண்டியனதும் அரச மாதேவியும் காதலர்கள் காதலன் போர்காலத்துப் பாசறையில் தங்கியிருந்து எதிரியுடன் சண்டையிட்டு கொண்டிருப்பின் காதலி காதலனின் பிரிவால் துயரிலிருந்து அரண்மனையில் வாடுகின்றாள்.

இந்நிலையில் நாட்டின் காலநிலையானது "கூதிர்காலம்" ஆகும். இக்காலத்தில் நாடு முழுவதும் கடுங்குளிரும் வாடையும் (காற்றும்) ஆக்கிரமிப்பு செய்கின்றது. இதன் தாக்கம் காதலனையும், காதலியையும், ஜீவராசிகளையும், நாட்டிலுள்ள மக்களின் அன்றாட நடவடிக்கைளிலும் குளிரின் தாக்கம் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

காதலர்களின் உள்ளத்து உணர்வு பற்றிய பாட்டுக்களாகவே நெடுநல்வாடை உள்ளது.

பொதுவாக நோக்கும்போது:-

காதலைப்பற்றி பாடிய பழந்தமிழ் பாட்டுகளில் பெண்களின் உடல் வர்ணணை மிகுதியாக இல்லை. காமச் சேர்ச்கையைப் பற்றிய குறிப்புகளும் இல்லை. தலைவன் காதலித்திருந்தான் என்பதற்கான சான்றுகளும் இல்லை. இவ்வாறான போக்கு நெடுநல்வாடையில் உண்டு. கற்புக்கடம் பூண்ட பாண்டிய பட்டத்தரசியின் குணநலனும் தமிழக செல்வநிலை அரசர்களின் அரண்மனையையும் அதன் உட்பகுதிகளையும், காலைக்காட்சிகளையும் பாடல் விளக்குகின்றது. இது அகப்பொருள் சார்ந்ததாக உள்ள ஒரு நூல் இருப்பினும; "வேம்புதலையாத்த நோள்காழ் எ.்.தும்" என்றும் ஓர் அடியினால் இது புறப்பொருள் சார்ந்த நூலாக

கணிக்கப்பட்டுள்ளது.

இதனை வாகைத்திணையாக கொண்டால் புறப்பொருள் பாலைத்திணையாலும் வாகைத்திணையாகக் கொள்ளும் போது இப்பாடல்கள் தோழியின் கூற்றாகவே உள்ளது.

காதலனை பிரிந்து வாழும் காதலியின் துயரை தீர்ப்பதற்கு யாராலும் முடியவில்லை. அரண்மனை மகளிர் கொற்றவையை (காளியை) வணங்குகின்றார்கள். போர்களத்தில் போரில் தன் கடமையைப் பெரிதாக கொண்டு அதிலேயே மூழ்கியுள்ள வீரப்பெரு மகனின் காதலன்போரில் வெற்றிப்பெற்று விரைவில் திரும்புமாறு வேண்டுகின்றார்கள். காளி வீரத்தின் தெய்வம்.

இவ்விரு நிகழ்வுகளுக்கு இடையில் வாடைக்காற்று புகுந்து விளையாடுகின்றது. வாடைக்காற்று அரண்மனையிலும் வீசுகின்றது. அழகு மிக்க அரண்மனையில் வாடும் அரசிக்கும் பிரிவுத்துயரால் வாடைக்காற்றின் தாக்கம் நெடியதாகவும் கொடுமையாகவும் துன்பம் வேதனைதருவதாகவும் இருக்கின்றது.

அதே நேரம் போர்களத்தில் வாடைக்காற்று குளிர்ச்சியுடனும் மழைத்துளிகளுடனும் வீசுகிறது. வாடைக்காற்று வானமெல்லாம் பரவுகிறது. மழையைக்கொண்டு வருகிறது. குளிரையும் நடுக்கத்தையும் தருகிறது. குளிரையும் பொருட்படுத்தாது வீரத்தையே தலைவன் பெரிதாக எண்ணுகின்றான்.

தலைவன் நள்ளிரவில் உறக்கமில்லாமல் போரில் புண்பட்ட யானைகளையும் குதிரைகளையும் அனுகித்தட்டிக்கொடுத்து அன்பு செலுத்தி தேற்ற முயல்கின்றான். வெளியே செல்லும் இடங்களிலே வாடைக்காற்றால் அவனுடைய மேலாடை அலைகிறது. சரிகிறது அதை அவனுடைய இடக்கைப்பற்றி சேருகிறது. தலைவனுடைய வழக்கை புண்பட்ட வீரன் ஒருவனுடைய தோள் மேல் அமைந்து அவனுக்கு ஆருதல் அளிக்கின்றது. பாட்டு முழுவதும் வாடைக்காற்றின் ஆட்சி இது தலைவிக்கு நீண்டகாலம் வருத்தம், துன்பம் தருவதாக உள்ளது.

போர்களத்தை அடுத்து பாசறையில் தன் வீரர்களிடமும் யானை குதிரைகளிடமும் அன்பு செலுத்தி ஆருதலளிக்கும் தலைவனுடைய கடமைஉணர்ச்சிக்கு நெடுநெல் வாடை நல்லதாகவே உள்ளது. இரு வேறு உள்ளங்களையும் அந்த உள்ளங்களின் உணர்ச்சிகளையும்

புண்படுத்துவதாக வாடை உள்ளது. குரங்கும் குளிரால் நடுங்குகிறது. பறவைகள் குளிர்தாங்க முடியாமல் விழுகின்றன, ஈன்ற பசுக்கள் பால் உண்ண வரும் தம் கன்றுகளையும் வெறுக்கின்றன. காட்டில் இவ்வாறு நிகழ நாட்டில் தெருக்களில் மக்கள் நடமாட்டமில்லை. குடிகாரர்களுக்கு மட்டுமே குளிர் இதமாக உள்ளது. நாட்டில் திரிகின்றார்கள் பகலும் இரவும் ஒரே நிகராக உள்ளது. சந்தனக்கல் குளிரினால் பாவிக்க் முடியாமல் வாடியுள்ளது. இரு வேறு உள்ளங்களின் உணர்ச்சிகளையும் போர் வீரர்களின் கடமை உணர்ச்சி பற்றி நெடுநல் வாடையில் உள்ள பாடல்களின் மூலம் காணமுடிகின்றது. வேப்ப மாலை பாண்டிய அரசர் குடிக்குரியது. இன்ன குடி என்று புலப்பட்டு இருக்கின்றது.

நெடுநல் வாடையில் முழுப்பாடல்களும் கற்பனைக்காதல் பாட்டு என்று கூறலாம். பத்துப்பாட்டுள் மிகவும் சிறந்த இலக்கிய அகம், புறம் பண்புகளை சித்திரிக்கும் வர்ணனையும் நிறைந்த அகப்பண்புகளை கூடுதலாக கொண்ட புறப்பொருள் பாடல் நெடுநல்வாடையாகும்.



# தீர்ப்பு...

மா.சந்திரலேகா
விரிவுரையாளர்.

பரமண்டலங்களிருக்கின்ற
எங்கள் பிதாவே
எங்களை சோதனைக்குட்படபண்ணாமல்
தீமையினின்றும் இரட்சித்துக்கொள்ளும்
(மத்தேயு 6:13)

நினைக்கின்ற பொழுதும்
பார்க்கின்ற பொழுதும்
அது பிணம்தான்
குமட்டிக்கொண்டு வந்தது
துன்பம்.. துயரம்.. அவளது என்றதும்
அடி வயிறும் பற்றிக்கொண்டது
இதயத்தோடு!

அவளால் உருவான நீ
அவளை அவமானமாக்கி
"அசிட்" ஊற்றி அலங்கோலப்படுத்தி
கோல்ப் மைதானத்தின்
வெட்டவெளியில் நிர்வானமாய்
வானம் வெறிக்க விட்டாயே?

கேவலமானவனே
மனிதத்தை கொன்று புசித்தவனே
படைப்பின் ரகசியத்தை-உனக்கு
பகிர்ந்து கொள்ளவும் இத்தனை
அவசரமா?
எத்தனை அசிங்கமாய்
உறிஞ்சிக்கொண்டாய்?
மிச்சமான உயிரும்
அவமான வசையினால்
அசைவாடியதா?
பிரிந்தோடியதா?

சிட்டுக்குருவியாய்
உலாவந்த
தேவதையின் சிறகுகளை
பிய்த்து... பிய்த்து... பிரித்து
தூக்கு கயிறாக்கிய துஸ்டனே!

மூன்று முரட்டு ஆண்மையின்
கோரப்பிடியில்
அந்த ரோஜா இதழ்
உதிர்ந்து போனதா?
பூத்து பூசைக்கு போகுமுன்
பூவுக்குள் பூகம்பம் புகுத்திய
பொல்லாதவர்களே

கொடுமை படர்ந்த
உங்கள் தேகம்
இரத்த கொதிப்பேறிய
உங்கள் உள்ளம்
காமக்கபடம் பூண்ட
உங்கள் கண்கள்
இவற்றை
இன்னொருதடவை-இன்னொரு
பெண்ணும்
சந்திக்கவேண்டாம்
வேண்டவே வேண்டாம்!

திருந்தியவர்கள் என்று
தீர்ப்பெழுதிக்கொண்டு
திரும்ப வராதீர்கள்
எங்கள் கரங்களின் வலிமையும்
உயிர்மூச்சின் வெப்பமும்
தீர்ப்புகளை சுட்டெறிக்குமுன்
மாண்டு போய்விடுங்கள்
இந்த பூமி மனிதனுக்கு மட்டுமே

திரும்பி வராதீர்கள்
தேசத்தின் தீர்ப்புகளைகூட
எங்கள் பேனையின் வலிமை...
திருப்பி எழுதிவிடும்
அதற்காகவாவது
மாண்டுபோய்விடுங்கள்
இந்த பூமி மனிதனுக்கு மட்டுமே!

# நுகர்வு புலமைத்துவ மரபின் பிடியிலிருந்து...

**சி.ஜெயசங்கர** (விரிவுரையாளர்)
கிழக்குப் பல்கலைக்கழகம்

அறிவு, மொழிமூலம் வெளிப்படுத்தப் படுகின்றது, மொழி மூலம் பரப்பப் படுகின்றது. பல மொழிகள் பாவனையில் உள்ள உலகப் பண்பாட்டுச் சூழலில்அறிவின் வளர்ச்சி, விருத்தி அதன் பரிவர்த்தனைகள் பற்றிய சிக்கல்கள் எதிர்கொள்ளப்படுவது இயல்பானது.

பல மொழிகள் பேசப்படும் சூழலில் இணைப்பு மொழி பற்றிச் சிந்திப்பதும்; அதுவும் காலனியப்பட்ட சூழலில் மேற்படிச் சிக்கல்களுக்கு சர்வரோக நிவாரணியாக ஆங்கில மொழி வற்புறுத்தப்படுவதும் சர்வசாதாரணமாகி இருக்கிறது.

21ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மூச்சைத் திணறவைக்கும் சுருக்குக் கயிறாக இப்போக்கு விசுவருபமெடுத்து வருகிறது. ஆயினும் கழுத்தை அலங்கரிக்கும் தங்க மாலையாக இப்போக்கினை இனங்காணும் பார்வை பலம் பெற்று வருவதை அவதானிக்க முடியும்.

ஏன் இந்த நிலைமை? இணைப்பு மொழி அல்லது சர்வதேச மொழி என்ற அழகிய வெளித்தெரிதல்களுக்கு பின்னால் உள்ள பொதுமக்களுக்கு பாதகமான அரசியல் பற்றிய விளக்கமின்மை மேற்படி நிலைமைக்குக் காரணமாகிறது.

சர்வதேச மொழியின் முக்கியத்துவம் அழுத்தம் பெறுவது அபிவிருத்தியை நோக்கமாக் கொண்டே ஆகும். ஆனால் வளர்ச்சி பற்றியும், அபிவிருத்தி பற்றியும் சிந்திக்கும் போதும்; செயறபடும் பேதும் அவை மிகவறியவர்களும் உதவியற்றவர்களுமான மக்களை மனம் கொண்டவையாக இருக்க வேண்டும்.

ஒரு சமூகச் சூழலின் வளர்ச்சியும்; அபிவிருத்தி முயற்சிகளும் அச்சமூகச் சூழலில் வாழும் மக்களது வாழ்க்கையில் மேம்பாடுகளைக் கொண்டுவரக் கூடியவையாக இருக்க வேண்டும். அது அவர்கள் அன்றாடம் பேசும் மொழியுடன் தொடர்புடையது. மாறாக ஆங்கில மொழிக்கு வழங்கப்படும் முக்கியத்துவம், தொடர்ந்தும் பொதுமக்கள் மீது சவாரி செய்யும் புதிய ஆக்கிரமிப்புக்கள் அல்லது அடிமைப்படுத்தலுக்கான உள்ளூர் முகவர்களாக இயங்கும் ஒரு சமூகப்பிரிவினரை பலம்பெறச் செய்வதற்கு வழிகோலுவதாக இருக்கும்.

இது உலக சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்கான புதிய கூலிகளை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகளாக கல்விச்சாலைகளை

மாற்றியமைக்கும் நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றச் செய்யும்.

இந்தப் பின்னணியில் 21ம் நூற்றாண்டில் தாய் மொழியில் தொடர்பாடல் பற்றிப்பேசுவது காலனிய ஆட்சியால் நிர்மாணிக்கப்பட்ட அதிகார அடுக்குகளை கேள்விக்கு உள்ளாக்குவதுடனும்; நவகாலனிய வடிவமான பூகோளமயவாதத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதுடனும் தொடர்புபடுகிறது.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், பல்தேசிய நிறுவனங்கள் ஆகியவற்றின் விற்பனைப் பிரதிநிதிகளாக மிகப் பெரும்பாலான அறிஞர்களும், அரசியல் வாதிகளும் இயங்குகின்ற சூழ்நிலையில் மக்கள் மையப்பட்ட சிந்தனைகளும் செயற்பாடுகளும் சாதாரண விடயங்களாக இருக்கப்போவதில்லை.

எனவே ஆர்வக் குழுக்களினதும்; தனிமனிதர்களினதும் அர்ப்பணிப்பு மிக்க உழைப்புகளே இங்கு கைகொடுக்கப்போகின்றன. உலக வரலாற்றிலும் தமிழர்களினுடைய வரலாற்றிலும் இது புதிய விடயமல்ல. நம் கண்முன்னுள்ள உதாரணம், தமிழ இணையத்தின் வளர்ச்சி.

தமிழ் இணைய வளர்ச்சியின் வரலாறு பற்றிய தரமான எழுத்துக்கள் வெளிவருமானால் பலவிடயங்களை விளங்கிக்கொள்ள முடியும். தமிழ் மொழியின் வளர்ச்சி பற்றிய மொழியியல் மற்றும் சமூகவியல் நோக்கிலான எழுத்துக்களின் வரவும் அவசியமானதாகும். ஏனெனில் இத்தகைய எழுத்துக்களுக்கு ஒரு வகை பண்புண்டு இது காலணிய நவகாலனிய ஆட்சிகள் மக்கள் மனங்களில் உருவாக்கி இருக்கின்ற தமிழ் மொழி மீதான நம்பிக்கையீனங்களைத் தகர்த்து விடுகின்றது. இது நிச்சயமாக அறிஞர்கள் மட்டத்திலும் அரசியல்வாதிகள் மட்டத்திலும் நிகழவேண்டும்.

தமிழ் இணையத்தின் வளர்ச்சியல் கணிசமான பங்களிப்புச் செய்து வருபவர்கள் புலம் பெயர் ஈழத்தமிழர்களாவர். படித்த பெரியவர்களுடைய வார்த்தைகளில் சொன்னால் "உள்ளூரில் உழாத மாடுகள". இதன் காரணமாகவோ என்னவோ தமிழ் இணையத்தின் வளர்ச்சி பற்றிய புரிதல்களும் அக்கறையும் அறிஞர்கள் மற்றும் அரசியல்வாதிகள் மத்தியில் மிகமிகக் குறைவான அல்லது வெறுவாய்ப் பேச்சாகவே காணப்படுகிறது.

ஈழத்தமிழர்களது புலமைத்துவ மரபில் பல்கலைக்கழகம் புகாத ஆங்கிலம்தெரியாத ஆனால் பிற மொழிகள் தெரிந்த ஒரு தலைமுறையினரின் பங்கு அது அளவில் சிறியதாயினும் அதிக அக்கறைக்குரியது. ஏனெனில் அது கட்டிபட்டுப்போன ஆங்கில மைய் அதுவும் காலம் கடந்த ஆங்கில மைய நுகர்வு புலைமைத்துவ நோக்கிலிருந்து சமூகத்தை விடுவிப்பதற்கு உதவியாக இருக்கக் கூடியது. இது 21ம் நூற்றாண்டு தொடர்பாடலில் தமிழ் மொழியை வெற்றிகரமாக பயன்படுத்துவதற்கு மிக அவசியமாகும்.

N011

# நன்றியுரை

பிற்காலத்தில் ஒரு பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தி தமிழின் பெருமையை உலகிற்கு அறிவிக்கும் தொண்டின் அத்திவாரமாக தொடங்குகின்றது மதுரத் தமிழ் எனும் நூல் யதன் சைட் ஆசிரியர் கலாசாலையின் மீண்டும் தொடங்கப்பட்ட தமிழ்ப் பிரிவு மாணவர்களால் முதன் முதலிலே வெளியிட சந்தர்ப்பத்தை அருளிய இறைவனுக்கு எம் முதல் நன்றிகள் உரித்தாகட்டும்.

இம் மதுரத் தமிழ் மணம்பரப்புவதற்கு ஆசியுரை வழங்கிய பிரதம அதிதி மற்றும் சிறப்பு அதிதிகளுக்கும் மற்றும் கலாசாலை முதல்வர், உபமுதல்வர், விரிவுரையாளர்கள் அனைவருக்கு நன்றி நவில்கின்னறர் எம் மாணவர்கள்.

இந் நூல் வெளியிட்டுக்கு அயராது பாடுப்பட்டு பல ஆலோசனைகளை வழங்கிய தமிழ்ப்பிரிவு பொறுப்பு விரிவுரையாளர்களுக்கும் எம் மனமுவந்த நன்றிகள் பல.

மதுரத்தமிழ் மகிமை பெற ஆக்கங்கள் தந்து உதவிய விரிவுரையாளர்களுக்கும் ஆசிரிய நண்பர்களுக்கும் அவற்றை திருத்தி வடிவமைத்த சான்றோர்களுக்கும், அட்டைப்படம் அமைத்து நூலை அழகு செய்த சிவா ராஜேந்திரன் அனைவருக்கும் எம் நன்றிகள்.

மேலும் இந்நூல் மேன்மை பெற உதவிகள் புரிந்த பேராளர் அனைவருக்கும் உரிய வேளைகளில் உதவி புரிந்த கல்வி சாரா ஊழியர்களுக்கும் நன்றி கூறி இறுதியில் விடுகையாண்டு தமிழ்ப்பிரிவு மாணவர்களான மதுரத்தமிழ் நூல் வெளியீட்டு கழக தலைவர், செயலாளர், பொருளாளர், பத்திராதிபர், உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகள் பல உரித்தாகட்டும்.

செ. செல்வராஜ்
செயலாளர்
(மதுரத் தமிழ்)


ViVi
Silk Screen Printing
Offset Printing
Image Setting -
Photo type Setting Service
Wedding & Commercial
PhotoGraph
For
ViVi Print Plus
No.69/4 Dumburugiriya
Dunbar Road
Hatton.
Tel : 051-23812
Fax : 0094-51-23812